சத்திய பரிபாலனம்

உயிர்போக நேரினும் சத்தியத்தைக் கடைப்பிடி

கங்கைமாநதி பாயப்பெறும் கோசல நாட்டில் பல்லாயிரம் வருடங்கட்கு முன்னர் விபுலர் என்னும் முனிவரொருவர் இருந்தார். அம்மஹானுக்கு, சுகுணர், தும்பிருவர் என மைந்தர் இருவர் தோன்றினர்.

அவ்விரு புதல்வருள் மூத்தவரான சுகுணர் வேதம் வேதாங்கம் முதலிய அனைத்தையும் ஐயந்திரிபு அறக் கற்று, வேதியர் திலகமாய் விளங்கியதுடன், எல்லாம் வல்ல இறைவனிடத்து மாறாத பக்தியும் பூண்டவராக இருந்தனர். மேலும் அன்பு, அருள், அடக்கம், வாய்மை, பொறுமை முதலிய அரும் பெருங் குணங்களையே பூஷணமாகக் கொண்டவர். வேத விதிப்படி அந்தணர்கள் அன்றாடம் செய்ய வேண்டிய கடமைகளை ஒரு சிறிதும் குறைவின்றி நடத்துபவர்.

அவ்வாறு செய்வதற்கு இல்லறமே நல்லற மெனக் கொண்டு, மாதவி யென்னும் மங்கையர்க் கரசியை மணம் புரிந்து, அவள்பால் நான்கு குமாரர்களைப் பெற்றெடுத்தார். பின்பு நாளடைவில் அப்பாலர் நால்வரும் தக்க பருவமடையவே, அன்னையும்பிதாவும் முன்னறி தெய்வமென்பதை உறுதியாகக் கொண்டு, பெற்றோர் விரும்பும் வண்ணம் வேண்டிய உபசாரணைகளைப் புரிந்து வந்தனர்.

அம்மஹான் தவம் புரிவதில் ஆற்றலுடையவ ராய், ஐம் பொறிகளையும் ஒருங்கேயடக்கி, சித்தத் தைச் சிவன்பாலிருத்தி, காலங்கழித்து வருநாளில், மக்கள் நால்வரும் நாள் தவறாது வனஞ்சென்று, தந் தைக்கு வேண்டிய தருப்பை ஸமித்து முதலியவை சேகரித்துவருவது வழக்கம். பிதாவும்மைந்தர்கொணர் ந்த ஸாமக்கிரியைகளால் நித்திய கருமங்கழித்ததும், மனைவி மக்களுடனும் விருந்தினர்களுடனும் அமுதருந் திய பின்னர், பிற்பகலில் மறையவர் சூழவிருந்து வேதத்தின் உண்மைப் பொருள்களை யாவரும் எளிதில் அறிந்து கொள்ளுமாறு எடுத்துரைப்பார். இங்ஙனம் நல்லொழுக்கம் தவறாது வாழ்ந்து வருகையில், அவ்வே தியர் பிரானிடத்துள்ள பெருங் குணங்களைக்கண்டு மகி ழ்ந்த இந்திரன் அவரைச் சோதிக்க எண்ணங்கொண் டான்.

ஆகவே, பருத்த தேகமும், சிவந்த கண்ணும், தளர் ந்த நடையும் கொண்ட ஒரு கிழப் பறவையின் வேடந் தாங்கி, அவர்பாற் சென்று, பின்வருமாறு கூறத்தொட ங்கினன் :—

"வேதியர் தலைவ! அந்தோ! பசியால் பெரிதும் வாடிய என்னைக் காக்கவல்லீரோ? இக்காலை எனக்கு வேண்டிய உணவை அளிக்காது போயின், என் ஆவி பறந்தோடிவிடும்.

"நான் இந்த மலையின் சிகரத்தில் இருந்தபோது வேடுவனொருவன் என்மீது அம்பெய்யவே, தரை யில் வீழ்ந்தேன். அந்த அதிர்ச்சியால் ஒருவார மளவும் உணர்வற்று அங்குக் கிடந்தேன். பட்ட

காலிலே படும், கெட்ட குடியே கெடும், என்னும் முதுரைக்கிணங்க, நிலத்திலறைபட்டுச் சோர்ந்து கிடக்கும் என்னை வாயுபகவான் படுத்தியபாடு செப்புந்தரமன்று.

"பின்னர் எட்டாநாள் ஈசனது கருணைவெள்ளத்தால் உணர்ச்சி பெற்றேன். பெற்றுமென்ன? பசியின் களைப்பும், அம்பின் அடியும், பூமியிலறைபட்ட அதிர்ச்சியின் அலுப்பும், உடனே என்னை வருத்தத் தொடங்கின. எனவே உணவின் பொருட்டு உம்மைச் சரணமடைந்தேன். அன்னதானங் கொடுத்து உயிர்ப்பிச்சை உதவுதலினும் சிறந்த புண்ணியம் வேறெதுவுமில்லையென்பதைத் தாங்களே நன்கறிவீர்.

" திக்கற்றவர்களுக்கு உரிய உதவிபுரிந்து காப்பதே ஒருவன் தேடி வைக்கும் அழியாநிதியமாகும். அந்தணர் தலைவ! அபயம்! எனக்கு இக்கணமே உணவளித்தல் வேண்டும்."

எவ்வுயிர்களிடத்தும் அருள் பூண்டிருப்பவரே அந்தணராதலின், அனைவரும் தொழும் சீலராகிய சுகுணர் அப்பறவையின் அபய மொழிகளைக்கேட்டு மனமிளகி, " அங்ஙனே யாகுக" என்றியம்பி, உடனே இல்லத்தினுட் புகுந்து உணவெடுத்துவர யத்தனிக்கையில், அக்கிழப்பறவை,

"ஐய! சரணம்! நான் விரும்பும் உணவு யாதெனத் தேர்ந்தீர்? நீர் எடுத்துவரப்போகும் ஆகாரத்தில் எள்ளளவும் எனக்கு விருப்பஞ் செல்லாது. நரமாமிசம் ஒன்றையே நான் நாடித் தின்பது வழக்கம்" என்று அவ்வேதியர்க் குரைத்தது.

இக் கடுமொழிகளைக் கேள்வி யுற்ற அந்தணர்

நெஞ்சந் திடுக்கிட்டு "ஐயோ! இப் புன்பறவை நரமாமிசத்தை இச்சித்துக் கேட்கின்றது. அவ்வாறே யளிப்பதென்றால் ஓர் உயிரை அநீதியாய் வழங்கவேண்டுமே. ஆனால், பசித்துவந்த பறவையின் துயரத்தைப் போக்க வேண்டியதும் நமது கடமையாகும். அது விரும்பும் உணவோ மனத்தாலும் நினைக்கக்கூடிய தாயில்லை. இதற்கு என்செய்வோம்" என்று சிறிது நேரம் சிந்தித்து முடிவில் அப்புள்ளை நோக்கிச் சொல்வாராயினர்.

"அபயமென்றடைந்த பறவையே! நீ உருவத்தில் பறவையைப் போலவே காணப்படினும், உன் வசனங்களை உற்று நோக்கின், உன்னைப் பறவை யெனல் தகாது. இது நிற்க,

"நீயோ வயது சென்று, கிழத்தனம் மேலிட்டுக்கண் பஞ்சடைந்துபோனாய், இறக்குந் தருணத்தில் யாவரும் நற்சிந்தை கொள்வது உலகவியற்கை. ஆயினும், உன்னிடத்து அது பொய்த்துப் போய்விட்டது. நீ கொலை நெஞ்சுகொண்டிருப்பது தகுதியாகுமோ? உன் கிழத்தனமெங்கே! நரமாமிசமெங்கே!"

இவ்வாறு வேதியர்பிரான் விளம்பிய நீதிமொழிகளைச் சிறிதேனும் யோசித்தறியாத அப்புன்பறவை மறைவலாளரை விளித்து, ஐய! நீர் கூறியது முற்றிலும் உண்மை. ஆயினும் என்போன்ற பறவைகள், நரமாமிசத்தையே விடாது தின்று வயிறு வளர்க்க வேண்டும். அவ்வாறிருக்க அவ்வுணவையே நான் விரும்புவதுவியப்பில்லையே? ஆகவே, தாங்கள் என் வேண்டுகோளைக் குறித்து வியப்படையக் காரணம் ஏனோ?

ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல்,

ஏற்றல், எனும் அறுவகைத் தொழில்களும் அந்தணரு க்கு உரியனவன்றோ ? ஆதலின் உம்மையடைந்து பசிப் பிணியைப் போக்க வேண்டுமென்று யான் விரும்பிய தைத் தட்டிவிடின், உமது விரதத்திற்கும் பங்கம் நேரும் ! ஆதலின் யான் வேண்டிய வண்ணம் உணவை ஈவதே மேலோரின் முதற்கடமை. இது நிற்க,

"நரமாமிசத்திலும் மிகுந்த கொழுப்பும் சதையு முடையதாகப் பார்த்து எனக்கு அளிப்பின், அப் பொழுதுதான் நான் மனமகிழ்வேன். அங்ஙனம் நரமா மிசம் அளிப்பதற்கு என்செய்வதென்று யோசிக்க வேண்டிய தில்லை. உமக்கோ மைந்தர் நால்வருளர். அவர்களும் இளமைப் பருவமுற்று திடசரீரங்கொ ண்டுளர். எனக்கு ஏற்ற மாமிசம் உமது கைவச மிருக்கின்றது" என்று சிறிதும் அச்சமின்றிச் சொல் லிற்று.

மாயப் பறவை கூறிய அடாத மொழிகளைச் செவி யிலேற்ற அந்தணசீலரின் மனநிலைமை இன்னவிதம் இருந்திருக்குமென்பதை நண்பர்களே, அறிந்து கொள்க !

வஞ்சகமாய் வந்து தோன்றி நரமாமிசம் வேண்டு மென்று விரும்பிய அப்பறவையின் அபீஷ்டத்தையும், அவ்வாறே செய்வதாகத் தாம் வாக்களித்த உறுதி மொழியை, நிறைவேற்றுவதையுமே பெரிதெனக் கொண்ட அம்முனிவர் கோமான், தம்மக்களை மகிழ் வுடன் அழைத்து, "மைந்தர்காள்! இதோ நிற்கும் பறவை நரமாமிசந் தின்ன விரும்புகின்றது. அங் ஙனமே அளிப்பதாக நான் கூறிவிட்டேன். உங்

களையே இலக்காக அது கொண்டிருக்கின்றது, சிறுதும் இரக்கமின்றி நான் இவ்வார்த்தை கூறியதாக எண்ணற்க. என்வாய்மொழியை மெய்ப்பிக்க நீங்கள் உடன்பட நேர்ந்துவிட்டது. ஒருசிறிதும் வருத்தமின்றி அங்ஙனமே செய்வீராக. அவ்வாறாயின், நீங்கள் நற்பதவி பெறுவீர்கள். வேதமொழியினும் தந்தையின் வசனம் பெருமையுடைத் தென்பதை நீங்களே நன்கறிவீர்" என்று விளம்பினார்.

மின்போலழிந்து போகும் உடலினும் உயிர் மிகவும் பெரியதென்றெண்ணிய அம்மைந்தர் நால்வரும் தந்தையின் கட்டளையை மறுத்துப் பின் வருமாறு கூறினர் :—

" தந்தையே! நரமாமிசத்தைத் தின்ன வேண்டுமென்று காத்திருக்கும் இப்பறவையின் வன்னெஞ்சை நாங்கள் என்னென்று சொல்வோம். பசித்து வந்த பறவைக்கு ஏற்ற உணவை அளிப்பது நமது கடமையாயினும், எங்கள் இரத்தத்தைக் குடித்து, சதையைப் புசித்து, தாகம் தணிய விரும்பும் பறவையின் வேண்டுகோளுக்கு உடன்படோம்.

"ஒரு பறவையின் பசியைப் போக்க எங்களது உயிரை ஏன் கொடுக்கவேண்டுமோ அறியோம்! உயிரோடிருப்பின் எவ்வளவோ நல்வினைகளைச் செய்து பேறு பெறலாம். அங்ஙனமிருக்க, இளமைப் பருவத்திலேயே ஆவியைக்கொடுப்பது ஆகாதகாரியம். 'தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை' யென்பதை நாங்கள் அறிவோம். ஆனாலும், உயிரைவிட்டு விடுவதென்றால் யாருக்குத்தான் விருப்பமாயிருக்கும் ?"

இம்மொழிகளைக் கேட்ட பெரியவர் தம் புதல்வரை நோக்கிச் சில நீதிமொழிகள் போதித்தார். அந்நீதிகளிற் சிலவற்றை இங்கு எடுத்துச்சொலவோம் :—

" மனிதவுடலோ, தோல் எலும்பு சதை உதிரம் மலம் முதலியன நிரம்பி அருவருக்கத்தக்க பாண்டமாகும். இத்தகைய வுடல் என்றும் நிலைத்து நிற்கக்கூடியதன்று. என்றைக்காயினும் ஒருநாள் அழிந்தேதீரவேண்டும். இவ்வளவு காலம் உடல் நீடித்திருக்குமென்று ஒரு நியதி கிடையாது.

" கண்டீர உறங்கச் சென்றவன் மறுநாள் விழித்தெழுவது நிச்சயமில்லை. இப்பொழுதோ, பின்போ, இரவிலோ, பகலிலோ யமன் வருவான் என்று பெரியோர் வற்புறுத்தியிருக்கின்றனர். மேலும் ஒருசெடியிலுள்ள அரும்பு, பூ, பிஞ்சு, காய், கனி முதலியன திடீரென்று கீழே விழுந்து நாசமுறுவதுபோல், மனிதவுடல் கருவிலும், குழந்தைப் பருவத்திலும், இளமையிலும், முதுமையிலும், அழிந்துபோவதை நாம் கண்ணாரக்கண்டு வருகின்றோம். இங்ஙனமிருந்தும், பருத்த உடல் நம்மதென்று நாமிருப்ப, நாய் நரி பேய் கழுகு தம்மதென்று எண்ணிச் சமயம் பார்த்திருக்கின்றன. ஆகவின் நீரில் எழுதிய எழுத்தைப்போல கணப்பொழுதில் கழிந்துபோகும் உடலின்மீது மனிதர் அளவிலாப் பற்று வைப்பது மடமை யன்றோ? விலங்கு பறவை முதலிய ஜீவராசிகள் மாண்டுபோயின், அதன் அவயவங்கள் யாவர்க்கும் பயன்படக்கூடியவை. பட்சிகளின் இறகுகளை மனிதர் பலவிதத்தில் உபயோகிக்கின்றனர். விலங்குகளின் தோல்களும் வேண்

டியபடி உதவுகின்றன. புலியின் நகத்தையோவெனில் தங்கமுகப்பு முதலியன கட்டி மனிதர் ஆபரணமாகக் கொள்கின்றனர்.

"மனிதர் இறந்துபோனபிறகு அவர்களுடைய அங்கங்கள் எள்ளளவும் உபயோகமாவதில்லை. மனிதர் மாண்டுபோன பின்னர் அவர்களுடன் வருவது என்ன? அவரவர்கள் புரிந்திருக்கும் வினையொன்றே உடன் வந்து பயனளிக்கின்றது.

"நல்வினை செய்யின், மறுபிறவியில் மேன்மையாய் வாழலாம். தீவினைபுரியின் படாதபாடுபட்டு அழியா அல்லலுறவேண்டும். உடலை விட்டு உயிர் ஓடியதும், உடலில் கட்டியிருக்கும் முழுத்துணியையும் உறவினர் பறித்துக்கொள்கின்றனர். ஆதலின் காற்றுள்ளபொழுதே தூற்றிக்கொள் என்பதுபோல், உயிருள்ளபொழுதே நல்வினைகளை இயற்றி, மறுபிறப்பில் இன்பமுடன் வாழ முயலவேண்டும். நிற்க,

"இச்சமயம் நரமாமிசம் விரும்பிய பறவைக்கு அவ்விதமே கொடுப்பதாக வாக்களித்தேன். உங்கள் சதையை விரும்பி ஆவலுடன் அது காத்திருக்கின்றது. என்னை அது விரும்பியிருப்பின், உங்களை அப் பறவைக்கு ஆகாரமாக அளியாது, என் உடலையே கொடுத்திருப்பேன்.

"ஒருவருக்கும் உடலை உபயோகமாக்காது இழப்பதைவிட, உடலை விரும்பும் அப் பறவைக்கு அவ்வுடலை யளித்து, அப் பறவையையும் மகிழ்வித்து நாமும் மனக்களிப்பதன்றோ மேன்மை? முற்காலத்தில் ததீசிமுனிவரிடஞ்சென்று அவரது முதுகெலும்பை

இந்திரன் கேட்டதும், அவ்வாறே அவர் கொடுத்துவிட வில்லையா?

"பூமண்டலாதிபதியாய் விளங்கிய இரவிகுல திலகனை சிபிச்சக்கரவர்த்தி ஒரு பறவையினிமித்தம் தன் உடலை அரிந்து அரிந்து கொடுத்து, முடிவில் தானே தராசுத்தட்டில் ஏறியதை அறியீரோ? நம்மை யடுத்து வந்தவர் விரும்பியவண்ணமே, நாம் உதவி புரிவதும், செய்த சபதத்தை நிறைவேற்றுவதும், பெருமையே யொழிய, புல் நுனிமேலுள்ள பனித்துளியேபோல் பறந்துவிடும் உடலின்மீது ஆசைகொள்வது பெருமை யாகுமா? ஒருநாளுமாகாது!

"ஆகவே, உடலின்மீது அபிமானம் வைத்தல் அறியாமையாகும். பறவைக்கு உடலைக்கொடுத்து அதன் பசியைப்போக்கி உயர்பதமடைய உங்களுக்கு மனமில்லை. ஆதலின் நான் என் உடலைக்கொடுத்து சொன்ன சபதத்தையும் நிறைவேற்றி, அப்பறவையின் பசிப் பிணியைத் தொலைத்துவிட நிச்சயித்துவிட்டேன்.

"என் வார்த்தையைத் தட்டிய நீங்கள் எனக் குரிய ஈமக்கடன்களைச் செய்யவேண்டியதில்லை. அக் கடன்கள் அனைத்தையும் நானே இப்பொழுது முடித்து விடுகின்றேன். மக்காள்! பறவைக்குக் கொடுத்த உறுதி மொழியைப் பூர்த்திசெய்வதே எனது முதற்கடமை.

"என் புதல்வராய் இருந்தும், நான் சபதஞ் செய்து கொண்டு சொன்ன சொல்லை என் பொருட்டு நடத்தாமற் போனதனால், நீங்கள் அனைவரும் பறவையின் வடிவம் அடைவீர்கள்" என்று சாபமிட்டனர்.

பிறகு அப் பெருமான் வேள்வித்தீயில் தமக்குரிய

ஈமக்கடன்களை முடித்து, வேதவிதிப்படி மேலான பதவிபெறுவதற்கு ஆதாரமான கிரியைகளையும் செய்துகொண்டு, பறவையை நோக்கிக் கூறுவார் :—

"புள்ளரசே! சிறிதும் அச்சமின்றி என்னை யுண்டு பசியாறுவாய்! மனப்பூர்வமாய் என் உடலை உனக்கு ஆகாரமாக வழங்கினேன். நீ விரும்பிய வண்ணம் என் மக்கள் இசையவில்லை. அது பொருட்டு நான் வருந்துகின்றேன். என்றாலும், என்னை நீ இன்பமுடன் புசித்து மகிழவேண்டும். எதுவரையில் சத்தியத்தைத் தவறாது காத்துக்கொள்கின்றானோ அதுவரையில்தான் அந்தணனுக்கு அந்தணத் தன்மை யுண்டு. ஆகவே சத்தியத்தைக் காத்துக்கொள்பவனே அந்தணனாவான். கொடையாலும் வேள்வியாலும் மற்றெந்தக் கருமத்தாலும் அடையக்கூடிய பயனைவிட, சத்தியந் தவறாது நடப்பதனால் மேலான பயனும் பதவியும் தட்டாது கிடைக்கும். இது நிச்சயம்.

மனத்தொடு வாய்மைமொழியின், தவத்தொடு
தானஞ் செய்வாரிற் றலை,

என்பது முதுமொழி யாகும்."

முனிவரின் வார்த்தையைக்கேட்ட பறவை சொல்லும் :—

"அந்தணர் பெரும! நீர் யோக ஸமாதியிலிருந்து சரீரத்தை விட்டுவிடும். ஏனெனில், உயிரோடிருப்பவரின் சதையை நான் தின்பதில்லை."

உடனே முனிவர்பிரான் யோகநிஷ்டையில் அமர்ந்திருந்தார். அவரது மக்களோ தந்தையின் சாபத்தைக் குறித்து ஒருபுறம் வருந்தியும், அவரது மனவுறுதியைக்

கண்டு களிகூர்ந்தும், மாயப் பறவையின் வஞ்சத்தை நோக்கிப் பிரலாபித்தும், ஒன்றுந் தோன்றாது தியங்கி நின்றனர்.

பின்னர், பறவையாய் வந்து தோன்றிய இந்திரன் தன் மெய் யுருக்கொண்டு, முனிவர் பெருமான் முன்னே நின்று பகர்வானாயினன்.

"வேதியர்கொழுந்தே! அபயம்! அபயம்! பறவையாய் வந்து தோன்றியவன் யானே! தேவரீரது சித்த நிலைமையைக் கண்டு பரீட்சித்தறியவே இப் பெருங் காரியம் செய்தேன்! நான் செய்த துன்பத்தைப் பாராட்டாது, என்னை மன்னித்து அருள் புரியவேண்டும். வாய்மையே பெரிதெனக்கொண்டு ஆவியைத் துறக்க நினைத்த உமது பெருமையையும் மனவுறுதியையும் கண்டு களியாதார் யாவர்! பெரியோரே! என்மீது சினங் கொள்ளக் கூடாதென்பதே எனது வேண்டுகோள்! இனி,

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது.

ஆதலால், உமது கோபத்திற்கு ஆளான புதல்வர் உமது சாபத்தால் பறவையுருப் பெற்றனர். இப்பாவத்திற்கு யானன்றோ காரணம்? என்மீது தாங்கள் கருணை கூர்வதுடன், உமது மக்கள்மீதும் அருள்பூத்து, அக் கொடிய சாபத்தை நிவர்த்திக்கவேண்டும். ஒருகணமும் தரித்திருக்கும் இயல்பில்லாத உடலைச் சதமென்று நம்பிய மைந்தர் உமது சொல்லை மீறி நடந்தனர். ஆயினும், அறியாப் பிள்ளைகள் செய்த குற்றத்தைப் பெரியோர் பொறுத்துக் கொள்வது கடனாகும்."

என்று வேண்டினன். வேதியர் பெருமான் அவர்களை விளித்து "என்சொல் இதுகாறும் பழுதடைந்ததில்லை. நீங்கள் சிறிதுகாலம் பறவை யுருக்கொண்டு வாழ வேண்டும். பின்னர், மானிடப்பிறவி பெற்று, ஸுகமே வாழ்ந்து, நற்பேறு பெற்று, இன்பமுடன் இருப்பீர். உங்கள் தலைவிதி இவ்வாறு நேர்ந்தது! என்செயலாம்! சிவன் செயலைத் தடுக்க யாராலாகும்? முடிவில் நீவிர் அனைவரும் ஞானம் பெற்று முத்திபெறுவீராக" என்று வரமருளினர்.

இந்திரனும் முனிவருடைய மலரடிகளில் வீழ்ந்திறைஞ்சி ஆசிபெற்றுச் சென்றான்.

பிரகலாத சரிதம்

ஈசன் எங்குமுளன்

பண்டைக் காலத்தில் ஹிரண்யன் என்னுமோர் அவுணன் இருந்தான். அவன் மலரவனை நோக்கி மாதவமியற்றி, அபரிமிதமான வரங்கள் பெற்று, மிக்க பெருமிதத்துடன் மூவுலகங்களையும் தன்னடிப் படுத்தி, ஒரு குடைக்கீழ் அரசு செலுத்திவந்தான். ஆதலின், தனக்குநிகர் எவருமில்லையென்று தருக்குற்று, தேவர்கள் பலரையும் துன்பப் படுத்துவதையே தொழிலாகக் கொண்டு விட்டான் அக் கொடியோன். அவன் புரிந்து வந்த கொடுமைகள் பலவற்றில் ஒன்றிரண்டை ஈண்டு உரைப்போம்.

மூவுலகத்திலுள்ள அனைவரும் எக்காரியத்தைத் தொடங்குவதாயிருந்தாலும், முதலில் ஈசனது திருநாமங்களை உச்சரிப்பதைத் தடுத்து, ஹிரண்யாய நம: என்னும் தன் நாமத்தையே துதிக்கும்படி கட்டளையிட்டிருந்தான். மேலும் வேதியர்களியற்றும் வேள்விகளில் தேவர்பொருட்டு அளிக்கப்படும் அவிர்ப்பாகத்தைத் தனக்கே கொடுக்கும்படி கட்டளையிட்டு, அவ்வாறே வாங்கியுண்டான்.

இவ்வாறு அக்கொடியோன் செய்துவந்த அநீதிகளைக்

கண்டு ஸகியாத பலரும் என்செய்வதெனத் தோன்றாது விழித்திருக்க நேர்ந்தது.

வாழ்த்தலும் சபித்தலும் ஒருங்கே அமையப்பெற்ற துறவிகள் அவன் புரிந்துவரும் தீச்செயல்களைக் கண்டு மனம் பொறாது சாபமிடினும், அவனை அது வருத்த வில்லை. ஈதிங்ஙனமிருக்க,

புலி ஒரு பசுங்கன்றை யடைந்ததுபோல், பிரகலாதன் என்னுமோர் ஆண்மகவை அப்பாதகன் அடைந்தான். அப்பாலன் அரச வைபவத்துடன் வளர்ந்துவந்து, ஐந் தாண்டுகள் நிறையப்பெற்றதைக் கண்ட அவுணராஜன் ஓர் அந்தணனையழைத்து வித்தியாரம்பஞ் செய்விக் கச்சொன்னான்.

அங்ஙனமே மறைவலாளன் அக் குமாரனைத் தன் வித்தியாசாலைக்கு அழைத்துச்சென்று அட்ச ராப்பியாசம் செய்யப்புகுமுன், வழக்கம்போல் ஹிர ண்யாயநம: என்று துதிக்கச்சொன்னவளவில், அக் குமரன் ஓம் நமோ நாராயணாய என்று உச்சரித்தான். அதனைக்கண்ட அந்தணன இடியேறுண்ட நாகம் போல் மெய்கலங்கி, "அப்பனே? இந்திரன் முதல் தேவர்பலரும் ஹிரண்யாயநம: என்று எண்ணித் துதிக்கும்படி உன் தந்தையின் உத்தரவு இருக்கிறது. அவ்வாறிருக்க, நீ வேறுவிதமாய்த் துதித்தல் அழக ன்று" என்று அக்குழந்தைக்கு அறிவுறுத்தினர். ஆயி னும் அவ்வசனங்களைச் செவியிலேற்றுக் கொள்ளாத அப்பாலன் குருவைநோக்கி,

"ஐயா! யாவரும் ஓம் நமோ நாராயணாய என்றல் லவோ துதிப்பது வேதவிதி. அங்ஙனமிருக்க, அதற்கு

மாருக என் தந்தை கட்டளையிட்டிருப்பது பொருந் தாது'' என்று பதிலளித்தான்.

உடனே வேதியன் பிரகலாதனை நோக்கி "மைந் தனே! இளங்கன்று பயமறியாது என்ற முதுமொழி யின்படி, உன் பிதா இட்டிருக்கும் கட்டளையைக் கவனி யாதிருக்கின்றாய். நீ இவ்வாறு உரைப்பதை உன் தந்தை அறிவரேல், வந்துவிடும் மோசம். நாமிருவரும் அக்கணமே மண்ணுலகைத் துறந்து விண்ணேற வேண்டியதுதான். ஆகவே, நான் சொல்வதைக் கவ னிப்பாயாக'' என்று நயமாயும் பயமாயும் சொல்லிப் பார்த்தும், அப்பாலன் சிறிதும் காதுகொடாமல் தன் குருவை நோக்கிக் கூறுவான் :—

"ஆரியதிலக! அண்டசராசரங்களைப் படைத்துக் காத்துவரும் பரந்தாமனது திவ்யநாமங்களை நரர்களா கிய நாமனைவரும் நவின்றாலன்றோ நற்கதி பெறலாம்! அதைத் தவிர்த்து, கேவலம் ஓர் அற்பமனிதனுடைய பெயரைத் துதிப்பது எவ்வாறு பொருந்தும். தாங் களோ எல்லாக்கலைகளிலும் தேர்ச்சிபெற்றவர்! நானோ ஏதுமறியாப்பாலன்.

"வேதங்கள் யாருடைய புகழை விரித்துக் கூறு கின்றன? கல்விக்கடலைக் கரை கண்ட தாங்கள், இவ் வாறு விளம்புவது பழிக்கல்லவோ இடமாகும்! பெரு மிதவாழ்வினால் கர்வங்கொண்டிருக்கும் என் தந்தை மதிமோசம் போயின், அவரைத்திருத்தி, நல்வழிப்படு த்துவது தங்களைப்போன்ற பெரியோரின் கடமை யன்றோ?

"பரமனது நாமத்தைப் பகர்வதனால் யாவருக்கும்

கேடுவிளையாது. ஆதலின் தாங்கள் துக்கங்கொள்ளக் காரணம் யாதோ? அறியேன்."

மழலைச்சொற்கள் மாருத குழந்தையாயிருந்தபோதிலும், பிரகலாதன் எடுத்தியம்பும் மொழிகளைக் கேட்டுணர்ந்த குரு என்செய்வார்! ஹிரண்யனுடைய கட்டளையோ மிகக்கொடியது. ஆதலின், அவர் அடங்காக் கவலைபூண்டு, ஹிரண்யன்பாற் சென்று, "அரச கேசரி! தாங்கள் விதித்திருக்கும் வண்ணமே தங்களது திருநாமத்தை ஓதும்படி நமது குழந்தைக்குச் சொல்லியும், அதை ஏற்றுக்கொள்ளாது, மனத்தினுலும் நினைக்கத்தகாத ஒரு நாமத்தை ஓதியுள்ளங் குளிர்கின்றுன் குமரன்" என்று கைகட்டி வாய்புதைத்துக் கூறினர்.

உடனே அவுணன் "அந்தணர்திலக! நம்பாலன் பகரும் வசனங்கள் என்ன? அவற்றைத்தெளிவாய்ச்சொல்லுக" எனலும், மறையவன் மனம்நொந்து "ராஜதிலக! அவ்வசனங்களை யான் ஸமுகத்தில் எடுத்தியம்பின், என் உயிர் உடனே நமனுலகுசென்று சேரும்" என்று பதைபதைத்தார்.

அந்தணனது உடல் நடுக்கத்தையும் மனநிலைமையையும் குறிப்பாலுணர்ந்த கொடியோன் அக்கணமே தன் மகனை அரசவைக்குத் தருவித்தான். தருவிக்கவே வந்து வணங்கி நின்ற தன் மைந்தனை அன்புடன் மடிமீதிருத்தி உச்சிமோந்து, "என் குலத்தை விளக்க வந்த பாலனே! அந்தணர் கூறிய மொழியைக் கூறுது, முன்னர் யாவரும் மொழிந்திடா எம்மொழியைப் பகர்ந்தாய்?" என்று வினவினன் அவுணன்.

அதற்குப் பிரகலாதன் "தந்தாய்! வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க் கோனாகி யான் எனது என்று அவரவரைக் கூத்தாட்டுவனாகி நின்றானும், எவ்வுயிர்க்கும் இன்னருள் புரிந்துவரும் எம்பிரானுமாகிய பரந்தாமனது திருநாமமான ஓம் நமோ நாராயணாய என்னும் இனியமொழியையே சொன்னேன்"

என்று உரைக்கக் கேட்டதும், ஹிரண்யனுக்குக் கோபம் பொங்கிவிட்டது. உடனே, மடிமீது வீற்றிருந்த தன் மகனைத் தொப்பெனக் கீழே தள்ளிவிட்டு "அடே! அறிவிலி! மண் விண் பாதலம் ஆகியமூவுலகவாசிகளும் என் பெயரை ஏத்தித் தொழுகின்றனர்; இதோ பார்! தேவர்கள் அனைவரும் என் முன்னே நின்று, இருகரங் குவித்து, இட்ட வேலையைத் திட்டமாய்ச் செய்யக் காத்திருக்கின்றனர். இதனை நீ கண்ணாரக்கண்டும் உன் சிறிய தந்தையைக் கொன்று நமனுலகனுப்பிய பாதகன் நாமத்தைப் பகரவா உன்னைப் பெற்றெடுத்தேன் யான்? அடே! வேண்டாம். இனி அப் பதிதனது பெயரைக் கனவிலும் நினையாதே! நினைப்பாயானால் நீ என்ன பாடு படுவாய் என்பது பின்னர் விளங்கும்" என்று ஹிரண்யன் வெகுண்டான். அப்போது பிரகலாதன் தன் தந்தையை நோக்கிக் கூறுவானாயினன்:—

"மூவுலகங்களையும் வசப்படுத்தி ஆண்டுவரும் தங்களையும், சிறியேனாகிய என்னையும், மற்றுமுள்ள எல்லா ஜீவராசிகளையும் இயற்றுதியற்றி, இன்னருள் புரியும் அப்பரமனது நாமத்தை நான் துதிப்பின் தங்களுக்

கேன் இவ்வளவு கோபம்? அத்திவ்ய நாமத்தைக் கனவிலும் நனவிலும் கருதியிருப்பின் நாம் நல்வாழ்வடைந்து நற்கதி பெறலாகும். மேலும், தாங்கள் தற்காலம் பெற்றிருக்கும் வாழ்வும் வலியும் வாழும் அவனருளாலன்றோ இது வரையில் நீடித்திருக்கின்றன! நான்முகனைக் குறித்து நற்றவம் புரிந்து இப்பெருமித வாழ்வு பெற்றதை மறந்தீர்களோ! அங்ஙனமிருக்கத் தங்களைவிட மேலானவன் ஒருவன் உளன் என்பதை மறக்கலாகுமோ? அந் நான்முகனைப் படைத்தவன் யார்? நாராயணனே! அவனை மனமார வாழ்த்தி வாயாரத் துதித்திருப்பின், உங்களுக்கு ஏன் சினம் மூள்கின்றதோ அறியேன்!"

அச்சமயம் ஹிரண்யனுக்குத் தோன்றிய வெகுளியோ சொல்லி முடியாது. அவனுக்கு மூண்டிருக்கும் சினத்தைக் கண்ட தேவர் அனைவரும் 'யாது விளையுமோ' என்று திகிலடைந்தனர்.

ஹிரண்யனோ கண்களில் நெருப்புப் பொறி பறக்க மைந்தனை நோக்கி, "குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக் காம்பே! நீயோ என் மகன்? நானோ உன் தந்தை நம் குலத்துளோரையும் என் தம்பியையும் நாசமாக்கிய பகைவனது பெயரைச் சொல்லி ஏத்தியிருக்கும் உன்னை மகனாகக் கொள்ள நான் விரும்பவில்லை. தங்கள் இனத்தாரைக் கொன்று வயிற்றிலடக்கிக் கொள்ளும் நாகத்தின் நாமத்தை எலிகள் துதிப்பது போல், நீ "நாராயணாய" வென்று துதிக்கின்றாய். உன்னைப் போன்ற பிள்ளை எனக்கு வேண்டியதில்லை. நீயும் உயிருடனிருந்து, இப்பாவியின் பெயரைச் சொல

வதைக் கண்டு, நான் பொறுக்க முடியாது" என்று வாய்க்கு வந்தவாறெல்லாம் விளம்பி, அருகே நின்ற காவலாளிகளைக் கூவி "இவன் ஆவியை இக்கணமே போக்குங்கள்" என்று உத்தரவு செய்துவிட்டான். அவ்வளவுதான் தாமதம்! உடனே அஸுரர் பலர் கண்ணிமைப் பொழுதில் ஒன்றுகூடி, அப்பாலன் மீது அஸ்திர சஸ்திரங்களைப் பிரயோகித்தனர். ஆயினுமென்ன? கடவுளை நம்பினோர் கைவிடப்படுவரோ? படார். ஆதலில் பிரகலாதனுக்கு அவ்வாயுதங்களால் எவ்விதமான தீங்கும் நேரவில்லை, அவனை வந்து தாக்கிய ஆயுதங்கள் யாவும் முறிந்து போயின.

படைக்கலங்கள் யாவும் பழுதுபட்டமை கண்ட ஹிரண்யன் "நெருப்பிலிட்டு நீறாக்குங்கள்" என்றான். அங்ஙனமே பிரகலாதனைத் தீயிலிட்டனர். அனவரதமும் அமலநாதனிடத்து பக்தி பூண்டவர்களுக்கு யாது கேடு விளையும்! பின்பு. பெரும் பாம்புகளை ஏவிக் கடிக்க விட்டுப்பார்த்தனர். ஆயினும் ஹிரண்யனது எண்ணம் பலிக்கவில்லை.

அதன் பின்னர், அப்பாவியின் ஏவலால் பிரகலாதனை இந்திரனது யானையாம் ஐராவதத்தைக்கொண்டு இடறச் செய்தனர். கற்கள்கொண்டு கட்டி அவனைக் கடலில் எறிந்தனர். மலையின் மீதிருந்து உருட்டிவிட்டனர். அன்னத்தில் விஷமிட்டனர். இவை ஒன்றும் பயன்படாதது கண்டு, பிரகலாதனை அப்படியே கடித்துத் தின்றுவிடச் சிலர் முயன்றனர். ஆயினும் அவனை அணுக முடியவில்லை. ஸ்ரீ ஹரியின் நாமத்தைச் சிந்தித்திருப்போர்க்கு அபாயம் உண்டாகுமோ! ஒருநாளும்

உண்டாகாது. ஆகவே, என்ன கொடுமைகள் செய்து பார்த்தும், தன் மகன் மாளாததைக்கண்ட ஹிரண்யன் தானே அவனைக்கொல்ல உடைவாளை உருவினன். அப்பொழுது பிரகலாதன் தன் பிதாவை நோக்கி "ஐயா! என்னுயிரைப் போக்குவது தங்களாலாகாத காரியம். ஏன் வீண் சிரமம்? உலகத்தைப் படைத்த ஒருவனால் ஆயினும் ஆகும்' என்றான்.

ஹிரண்யன் :—" அடபதரே! உலகத்தைப் படைத்தவன் யாவன்? மும்மூர்த்தியா? தேவனா? முனிவனா? யாவன்? அப்பயல் எங்குளான்?

பிரகலாதன் :—' உலகத்தைப் படைத்துக் காத்து அழித்துவரும் பிரபுவைக் காண்பதரிது. என் கண்களாற் காணலாகும் அப்பரமன் எங்குளானெனின், அவன் நீ சொன்ன சொல்லினு முளான். இதோ நிற்கும் தூணினும் உளன், இத்துரும்பினும் உளன். அவன் இல்லாத இடம் எதுவுமில்லை. அவன் எல்லா உயிர்களிடத்தும் வியாபித்திருப்பதனால்தான் யாவரும் வாழ்ந்து வருகின்றனர்."

ஹிரண்யன் :—" உலகெங்கும் பரந்துளான் தூண் துரும்பு யாவற்றிலும் உளன் என்றாய்! அவனை இக்கணமே இக்கம்பத்தினிடை காட்டல வேண்டும். இல்லையேல் உன் தலையைத் துணிப்பேன். மேலும் உன் ஆவியைப் போக்கி, உதிரத்தைப்பருகி, உன் உடலையும் உண்டு வயிறு நிறைவேன். இது நிச்சயம்."

பிரகலாதன் :—" நான் கூறிய பரமன் யான்தொட்ட இடந்தோறும் தோன்றுவன். அங்ஙனம் தோன்றானாயின், என் உயிரை யானே மாய்த்துக்கொள்வேன்."

உடனே அவுணன் அடங்காக் கோபமூண்டு, தன் னருகே நின்ற கம்பத்தைக் கையால் அறைந்து, "எங் கடா அவன்? இத்தூணில உளனோ" என்று சிங்காநாதஞ் செய்தான். அக்கணமே மூவுலகங்களும் கிடுகிடென நடுங்கும் வண்ணம், கம்பத்தினின்று கோபச் சிரிப்பு கலகலவெனக் கிளம்பியது. மெய்யன்பு பூண்ட பிரக லாதனும் ஆடினன் பாடினன் அழுதான் தொழுதான் துள்ளினன்; இங்குமங்கும் ஓடி உள்ளங்களித்தான்.

சிறுவனது பேரானந்தத்தைக் கண்ணுற்ற அரக்க னது வெகுளி காலகாலனாகிய பரமசிவனது வெகுளி யினும அதிகரித்துவிட்டதென்றே சொல்லவேண்டும். உடனே அக்கொடியோன் சொல்வான் :—

ஆ! டா சிரித்ததங்கு? அரியா? அன்று எனக்குப் பயந்து பாற்கடலில் ஒளிந்து கொண்ட நரியா? அக் கடல் போதாமல் இப்பொழுது இத்தூணில ஒளிந்து கொண்டாய்போலும்! வீரபுருஷனாயிருப்பின புறப் படு ோருக்கு ஒருகை பார்க்கலாம்"

இவ்வாறு சொல்லிமுடியுமுன் திடீரெனத் தூணும் பிளந்தது. அதனின்று அடியும் முடியும் இன்னதென அறியமுடியாத நரசிம்மமூர்த்தி வெகு உக்கிரத்துடன் தோன்றினர். தோன்றியதும் அரைநொடியில் அசுர சேனைகள் யாவும் யுத்தத்திற்குத் திரண்டன. திரண்டு மென்! அவை யாவும் தீயுற்ற பஞ்சுப் பொதிபோல் சீக்கிரத்தில் சாம்பலாயின. அக்காலை அரக்கன் தன் உடைவாளை உருவி, அவதாரமூர்த்தியைத் தாக்கச் சென்றான். உடனே பிரகலாதன் தன் தந்தையின் அடியிணைகளில் வீழ்ந்திறைஞ்சி, "இதோ தோன்றி

நிற்கும் அவதார மூர்த்தியின் தோற்றத்தையும் வலியையும் கண்ணாரக்கண்டும், ஒன்றும் உணராது, மதி மோசம் போனது என்ன ஆச்சரியம்? இச்சமயம் தவறின், வேறு சமயம் வாய்ப்பதரிது. ஆதலின் இப்போதே இம்மூர்த்தியின் பாதகமலங்களில் வீழ்ந்து வாயார வாழ்த்தின், நாம் கடைத்தேற மார்க்கமுண்டு, இல்லையேல மடிந்துபோகவேண்டும்,'' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டான்.

செவிடன்காதில் சங்கூதிப் பயனென்ன! அதுவே போல், பிரகலாதன் எடுத்துரைத்த வார்த்தைகள் ஒன்றையும் அக் கொடியோன் கவனியாமல் தன் மைந்தனை நோக்கிக் கூறுவான் :—

"பேதாய்! யாரையடா வணங்கச் சொன்னாய்! என்முன் நிற்கும் இச்சிங்கத்தை ஆவிதுணித்து உன்னையும் நமனுலகனுப்பி, அதன் பின்னர் என் வெற்றிவாளைத் தொழுவேன்! வேறு எவரையும் வணங்கேன். இது திண்ணம். எனக்குள்ள வரத்தின் வன்மை நீ அறியாய்போலும்! ஆதலின், கூறக்கேள். எனக்கோ மண்ணின் இரண்டிலுஞ் சாவில்லை. ஆண், பெண், அலி இவராலும் அழிவில்லை.

"சுராசுரராலும் சாவு நேராது, நீர் நெருப்பு காற்று இவைகளாலும் அழியேன். அஸ்திர சஸ்திரங்களாலும் மாய்ந்துபோகேன். பகல் இரவு ஆகிய இருநேரத்திலும் ஒழியேன். வீட்டிற்கு வெளியிலும் உள்ளிலும் உயிர் போகாது. முடிவாகச் சொல்லின், மும்மூர்த்திகளாலும் முடிவில்லை. ஆதலின் என்னைக் கொல்வதென்றால் எவராலுமாகாது.

"நான் இச்செங்கட் சீயத்தால் ஆவியிழப்பேன் என்பதாய் நீ கனவிலும் கருதவேண்டாம்! மூவுலக வாசிகளும் என்னை வணங்குகின்றனரென்றால், கேவலம் இம் மிருகத்தை யான் வணங்குவது எவ்வாறு ஏற்கும்?"

இவ்வாறு அவுணன் இயம்பி, எதிரே தோன்றி நிற்கும் அவதார மூர்த்தியைத் தாக்கச் சென்றான்.

உடனே இருவருக்கும் பிரமாதமான யுத்தம் நடந்தேறியது. முடிவில் மாலைப்பொழுது கிட்டியதை யுணர்ந்த மூர்த்தி இரண்யனைத் தன்னொரு கையால் வாரியெடுத்து, அரண்மனை வாயிற்படியில் தள்ளித் தன் தொடையின்மீதிருத்தி, கூறிய நகங்களால் அவன் வயிற்றைக் கீறி நின்றார்.

அச்சமயம் தேவாதி தேவனுக்குத் தோன்றியிருக்கும் கோபக்கனல் கொழுந்து விட்டெரிவதைக்கண்டு, அயன் முதல் தேவர் அனைவரும் ஒருங்கே திரண்டு, பாற்கடலில் தோன்றிய திருமகளுடன் விரைந்துவந்து, மனம் வாக்கு காயம் ஆகிய முக்கரணங்களாலும் ஆடிப்பாடித் துதித்து அபயம் வேண்டி நின்றனர்.

அதனால் ஒரு சிறிது கோபந்தணியப் பெற்ற திருமால் பிரகலாதனை நோக்கி, "அன்ப! இனி உன்குலத்தோர் எல்லையில்லாக் குற்றங்கள் புரிந்தனரே யானும், உன்மீதுள்ள கருணை வெள்ளத்தால் அவர்களைக் கொல்லேன்! என்பால் உனக்குள்ள பக்தியைக் கண்டு மெச்சினேன். யாது வரம் வேண்டும்! அங்ஙனமே அளிக்கின்றேன்" என்று கேட்டனர்.

உடனே பிரகலாதனும் சொல்வான் :—

"பக்தபராதீனராகும் பாஞ்சுடரே! நின் நாமம் தருவதைக் காட்டினும் நீ தருவது வேறுமுண்டோ? முன்பே நான் பெற்றிருக்கும் பேறுகள் பலவுள. இனி யான் வேண்டுவது ஒன்றே! அது யாதெனில், விதிவசத்தால் என்பில்லாத புழுப்பிறவி எய்தியகாலத்தும், உன்னிடத்து பக்தி மறவாதிருக்கவேண்டும். இதுவே என் வேண்டுகோள்."

இங்ஙனம் இயம்பித் தன் பாதபங்கயத்தில் விழுந்து கிடக்கும் பக்தனை வாரியெடுத்து நிறுத்தி, "பஞ்சபூதங்கள் முடியுங்காலத்தும் நீ என்போல் அழியாதிருக்கக் கடவாய். என்னைத் தொழுது ஏத்துபவர் யாது பலன் அடைவரோ, அங்ஙனமே உன்னைத் தொழுது வணங்குபவரும் அடைவர்.

"ஆதலின் நீ அஸுரர்க்கு அரசனென்பது தகாது, இனி ஸுரர்க்கும் நீயே தலைவன். மேலும் நானே நீ! நீயே நான்!" என்று வாமருளிய பின்னர்,

மலரவன் ஓமமியற்ற, முனிவர் ஆசிகூற, அரம்பையாதி மங்கையர் ஆடிப்பாட, ஆகாயத்தினின்று பூமாரியும் பொன் மாரியும் பொழியத் தன் கைம்மலரால் பிரகலாதனுக்கு முடிசூட்டினர் பகவானாகிய ஸ்ரீமந் நாராயணன்.

துருவ சரிதம்

பால பக்தன்

திருமகளின் உறைவிடமாய் விளங்கும் நம் இந்திய நாட்டின் வடபாகத்தில் மதுராபுரி என்றொரு நகருண்டு, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அந்நகரில் உத்தானபாதன் என்னும் மன்னன் அரசு புரிந்து வந்தான். அவனுக்கு மனைவியர் இருவர். அவர்கள் ஸுருசி, ஸுநீதி என அழைக்கப்பட்டனர்.

ஒருவனுக்கு இருமனைவியர் இருப்பின், அவன் அவர்களில் ஒருத்தியிடத்து அன்பு பாராட்டுவதும், மற்றொருத்தியிடத்து அவ்வளவு அன்பில்லாதிருப்பதும் உலகவியற்கை. எனவே, உத்தானபாதன் ஸுருசியினிடத்து மிக்க அன்புகொண்டு அவளை ஆர்வமுடன் காதலித்து வந்ததுபோல், ஸுநீதியை நடத்தவில்லை.

அம் மன்னவன் ஸுருசியினிடமாக உத்தமன் என்னும் குமரனையும், ஸுநீதியினிடம் துருவன் என்ற மகனையும் அடைந்தான். அம்மக்களிருவரும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தனர். ஒருநாள் அரசன் அத்தாணி மண்டபத்திலிருந்த அரியணையில் வீற்றிருந்தான்.

அச்சமயம் மன்னவனது மடியில் மகிழ்வுடன் உத்தமன் வீற்றிருப்பதைக் கண்ட துருவன் தானும் அவ்

விதமே தந்தையின் மடிமீதேறி உட்கார விரும்பினன். அப்பொழுது அரசனது ஆர்வமுள்ள பத்தினி ஸுருசி அருகேயிருந்தனள். த்ருவன் அவ்வாறு விரும்பியதும் தந்தையினருகே சென்று, மடிமீது மகிழ்ச்சியுடன் வீற்றிருக்க யத்தனிக்கையில், ஸுருசியின் மனம் கோணிவிடுமோ வெனப் பயந்த பார்த்திபன் தன் மகன் த்ருவனுடைய விருப்பத்தை ஏற்றுக் கொண்டானில்லை. ஆதலின் த்ருவன் திடீரென நின்று விட்டான்.

உடனே, அருகே நின்ற ஸுருசி த்ருவனைப் பார்த்து "அடே த்ருவா! முடவன் கொம்புத் தேனுக்கு ஆசை கொண்டது போல் நீ அரசன் மடியில் அமர்ந்திருக்க விரும்புகின்றாய்! இது கிட்டாத காரியம். நீ மகிபாலனது மகனென்பது உண்மையே! ஆயினும் உனது துரதிர்ஷ்டவசத்தால் என் வயிற்றில் புதல்வனாய்ப் பிறவாது, பாக்கியமற்ற ஸுநீதியின் வயிற்றில் தோன்றினாய். அதனை யோசித்துப் பார்ப்பாயானால், அரியணையில் வீற்றிருக்கும் பெரும்பேற்றைக் கனவிலும் கருதல் கூடாது. வீணான மனோரதங்கொண்டு மனத்தைப் புண்படுத்திக் கொள்ளாதே" என்று வெகு கடுமையாய்ப் பேசினாள். அச்சமயம் த்ருவனது மனநிலைமை எவ்வாறு இருந்திருக்குமென்பதை நம் நண்பர்களே தெரிந்து கொள்வார்களாக!

மிதமிஞ்சிய பதட்டம் படைத்த மடந்தையாம் ஸுருசியின் கொடுமை ஒருபுறமிருக்க, மன்னவனது மதியீனத்தை நாம் என்னென்று சொல்வது! அவனது மனம் கருங்கல்பாறை யென்றே சொல்லவேண்டும். குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்தில்

என்பது பழமொழியன்றோ? ஐந்து வயதுகூட அமையப்பெறாத த்ருவன் தன் மாற்றாந்தாயின் கடூர வசனங்களை எவ்வாறு ஸகிப்பான்?

ஆகவே அவன் கோபம் மேலிட்டு, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாய்த் தேம்பித்தேம்பி, பெருமூச்செறிந்துகொண்டு, தன் அன்னையின் மாடஞ்சென்றான். மிகுந்த மனவருத்தத்தினால் வாடிய முகத்துடன் வரும் தன் புதல்வனை ஸுநீதி வாரியெடுத்து மடிமீதிருத்தி, முன்தானையால் கண்ணீரைத் துடைத்து, "அப்பா மகனே! உன்னை இக்கோலங் கண்டவர் யாவர்? அவரை உடனே எனக்கறிவிப்பாயானால், இக்கணமே அரசனிடம் அறிவித்து ஆக்ஞை செய்கிறேன் பார்" என்று பலவாறு தன் குழந்தையைச் சாந்தப்படுத்தினாள்.

ஆயினுமென்ன? த்ருவனுக்குத் தோன்றியிருக்கும் துக்கமோ தன் தாயைக் கண்டவுடன் அதிகரித்ததேயொழிய அடங்கின பாடில்லை. ஆகலின் மறுபடியும் ஸுநீதி தன் பாலனைப் பரிவுடன் தேற்றவே த்ருவன் ஒருவாறு துயரந்தணிந்து நடந்த விருத்தாந்தங்களை அறிவித்தான்.

தனது பரிதாபமான நிலைமையை நினைத்து நினைத்துப் பொருமியிருக்கும் ஸுநீதியின் வருத்தம் த்ருவனது வாய்மொழியைக் கேட்டதும் பொங்கத் தலைப்பட்டது. ஆயினும் அதனை ஒருவாறு அடக்கிக்கொண்டு தன் மகனைப்பார்த்து, "குழந்தாய்! ஸுருசி சொன்னது மெய்தான். இட்டாருக்கு இட்டபலன் என்றவண்ணம், அவரவர் முன்செய்த பாபபுண்ணியங்

களுக்கு ஏற்றவாறே மறுஜன்மத்தில் ஸுகதுக்கங்களே அனுபவிக்க வேண்டுமென்பது வேதமொழி. தீவினே யிருக்க, நாம் நம்மையே நொந்து கொள்ளவேண்டும். பிறர்மீது நோவதில் பயனில்லே. முற்சன்மத்தில் நற்கருமங்களே இயற்றியதனுல், அவள் ஸுகானுபவ முடையவளாய் இருக்கின்ருள். அதுபொருட்டு வருந்துவது புத்திசாலிகளின் தன்மையாகாது. இனியேனும் நற்காரியங்களேச் செய்து நற்பதவி யடையும் வழியைத்தேடுவது அவசியமாகும்" என்று அறிவுறுத்தினுள்.

த்ருவன் இவ்வசனங்களேச் செவியுற்றதுதான் தாமதம். உடனே எழுந்து நின்று, தன் தாயின் மலரடிகளில் வீழ்ந்து வணங்கி, "அன்னுய்! தவத்தளவேயாகும் தான் பெற்ற செல்வம் என்று எனக்கு அறிவு புகட்டினுய். ஸுருசி பேசிய வார்த்தைகளே நினேக்க நினேக்க என் துயரம் நெய்பெய்த கனல்போல் பொங்குகின்றது. அவள் புதல்வனுன உத்தமன் தன் தந்தையின் செல்வத்தைப் பெற்று ஒரு குடைக்கீழ் இப்பூவுலகத்தை ஆளினும் அது எனக்குச் சந்தோஷமே! ஆனுலும், அப்புதல்வனது பதவியைவிட மேலான பதவியை அடைய நான் முயலப்போகிறேன். அப்பொழுதே அவளுடைய கர்வமும் ஒருவாறு குறைந்துபோகும். அனேத்துயரையும் படைத்துக் காக்கும் பரமனது பாதத்தில் என் சித்தத்தை நிலேநிறுத்தி நான் கொண்ட மனக்கோளேப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வருகிறேன் என்மீது கருணே கூர்ந்து விடையளிக்க வேண்டும்" என்று வேண்டினுன்.

தாயும் தன் தநயனுக்கு உதித்திருக்கும் மனத்திடத்தை யோசித்து அவ்வாறே செல்லும்படி அன்புடன் உத்தரவளித்தனள். சாண் பிள்ளையாயினும் ஆண் பிள்ளையல்லவா? ஆதலின் அஞ்சு வயதேனும் நிரம்பப்பெறாத த்ருவன் சரேலென மாளிகையினின்று வெளிப்பட்டு, காடு, மலை முதலியவைகளைக் கடந்து, கடைசியில் ஒரு கானகத்தை யடைந்தான்.

அங்கு ஒரு மூலையில் மிகவும் அழகாய் விளங்கிய ஒரு கொடி வீட்டைக் கண்ணுற்று அவ்விடம் விரைந்து சென்று பார்க்கையில், ஏழு முனிவர்களைக் கண்டனன். கண்டதும் ஆர்வமுடன் அவர்களுக்கு அஷ்டாங்க தண்டனிட்டு, "சிறியேனுய்ய யான் ஈடேறும்படி கடாட்சித் தருளுக," என்று வேண்டி நின்றான்.

முனிவர்களோ வாலிபனது அடக்க ஒடுக்கத்தையும், முகத்தில் ராஜதேஜஸையும, அவனிடத்துள்ள பயபக்தியையும் கண்டு களித்து அவனைப் பார்த்து "அப்பா! உன்னைப் பார்த்தால் அரசகுமாரனெனத் தோன்றுகிறது. நீ யார்! உன் ஊர் எது? நாமம் என்ன? அதுவுமன்றி மனித ஸஞ்சாரமில்லாத இக்கானகத்தில் தன்னந்தனியே வரக் காரணமென்ன?" என்று வினவினர்.

உடனே த்ருவன் சொல்வான் :—

"ஐயா! தாங்கள் எண்ணியபடி நான் அரசகுமாரனே. என் தந்தையின் பெயர் உத்தானபாதர். அவர் மதுராபுரி மன்னவன் என்பது தாங்கள் அறியாததல்ல. என்னை த்ருவன் என்று அழைப்பார்கள். ஒருநாள் என்

தந்தை அரியணையில் வீற்றிருக்க, எனது மாற்றாந்தா யின் மைந்தன் உத்தமன் அவரது மடியில் அமர்ந்திருப் பதைக் கண்டேன்.

" காணவே அப்பேற்றையடைய நான் விரும்பி னேன். ஆயினும், அது கிட்டாப்பழத்திற்குக் கொட் டாவி விட்டதுபோல் முடிந்தது. என்னை மடியினி லேற்றுக்கொள்ள என் தந்தைக்கு மனமில்லை. அது ஒருபுறமிருக்க, என் மாற்றாந்தாயான ஸுருசி என்னை ஏசிப் பேசியது எனதகத்தை இன்னும் பிளந்துகொண் டிருக்கிறது.

" ஆதலின், உலகத்தார் இதுவரையடையாத பதவி யைப் பெற்று வருவதாக என் அன்னையிடம் உறுதி மொழிகூறி, உடனே நாட்டைவிட்டுக் காடடைந்தேன். நான் கொண்ட காரியம் முடியும் உபாயத்தை எனக்கு அறிவிப்பீர்களென்றே தங்களை நாடிவந்தேன். பெரி யோர்களின் பேரருளால் ஆகாத காரியம் ஒன்றுமில்லை? என்னைக் காப்பாற்றுவது தங்கள் கடமையாகும்."

இவ்வசனங்களைக் கேட்ட துறவிகள் ஒவ்வொரு வரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து, த்ருவனு டைய விசுவாஸம்பத்தைக் குறித்து அகமகிழ்ச்சி யடைந் தனர். பின்பு, 'க்ஷத்திரிய குமாரனென்றால் இவனுக்கே தகும்,' என்றார் ஒருவர்.

மற்றொருவர் 'பிள்ளையென்றால் எல்லோரும் பிள்ளை களா? இவனே பிள்ளை! மற்றப் பிள்ளைகளெல்லாம் வீண் பிள்ளைகளே' என்றார்.

வேறொருவர் "ஆ! ஐந்து வயதுள்ள பாலனுயிருக்

தானும் ரோஷமுள்ளவன் அப்பா! புலிக்குப் பிறந்தது பூனையாய்ப் போகுமா'' என்றியம்பினர்.

பின்னும் ஒருவர் "தீயினுற் சுட்டபுண் உள் ஆறும்; மாறாதே நாவினுற் சுட்டவடு. மேலும், பெண்பிள்ளை ஏசியதை ஆணுய்ப் பிறந்தவன் ஸகிப்பதெப்படி ?" என்று வருந்தினர்.

மற்றும் ஒருவர் "குழந்தாய்! வருத்தப்படாதே! நீ நினைத்த காரியம் விரைவில் கைகூடும்'' என்று வாழ்த்தினர்.

இவ்வாறு த்ருவனைப்பற்றிப் பலவாறு புகழ்ந்தும், பரிந்தும், வருந்தியும் பேசிய முனிவர்கள், முடிவில் அவனைப் பார்த்து "அப்பனே! நீ வேண்டுவது என்ன?" என்று வினவினர். அதற்கு அவன் "அந்தணர்களே! என் மனத்தில் குடிகொண்டிருக்கும் எண்ணத்தை முன்பே நான் ஸமுகத்தில் தெரிவித்துக் கொண்டேன். மறுபடியும் நீ வேண்டுவதென்னவென நீங்கள் என்னைக் கேட்பினும், முன் சொன்னதையேதான் நான் திரும்பச் சொல்லவேண்டும்'' என்று வணக்கமுடன் பதிலுரைத்தான்.

உடனே முனிவர்கள் இனி காலதாமதஞ் செய்தல் கூடாதென்று நினைத்து, "அப்பனே கேட்பாய், தாமரை மலரில்வைகும் நான்முகனுக்குப் பிதாவான திருமாலே உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளையும் காத்தருளும் பொறுப்பை வகித்துவருகிறார். வேண்டினர் வேண்டிய வண்ணம் வாமளிக்கும் வள்ளலும் அவரே? அவரை ஆராதித்து வந்தால், எக்காரியமும் இனிது நிறைவேறும். தேவர்களுக்கு இடுக்கண் நேர்ந்த காலத்தும்,

அதனைப் போக்குபவர் அவரே. அவரை நீ அடைக்கலமாகக் கொள்ளுதலே சிறந்தது" என்று சொல்லி, அவரை ஆராதிக்கும் வழியையும் உபதேசித்தார்கள்.

அக்கணமே அப்பாலன் முனிவர்களின் மலரடிகளில் வீழ்ந்திறைஞ்சி, விடைபெற்றுச்சென்று, யமுனாநதி தீரத்திலுள்ள மதுவனஞ்சேர்ந்து, திருமாலினிடம்பக்தி பூண்டு தவஞ்செய்யத் தொடங்கினான். அச்சமயம் அவனுக்கிருந்த மனவுறுதியையும், அவன் செய்த தவத்தின் மகிமையையும் எடுத்துச் சொல்வதற்கு ஆயிரம் நாப்படைத்த ஆதிசேடனாலும் ஆகாதென்றே சொல்லலாம்.

எனினும், தபோவன்மையில் மிகச்சிறந்த கௌசிகர், இராவண கும்பகர்ணாதிகள், ஹிரண்யன் முதலியோரும் த்ருவனைப்போல் அவ்வளவு மனவுறுதியுடன் தவஞ்செய்திருக்க மாட்டார்களென்னலாம்.

ஏனெனில், த்ருவன் செய்யும் தவத்தின் கடுமையைக் கண்டு தாங்காத தேவர்கள் ஒன்று கூடி, அவன் செய்யும் தவத்தைக் கலைக்க முயன்றனர். எவ்வாறெனில், அவர்கள் பலவிதமான பூதப்பிரேத பைசாசரூபங்களுடன் த்ருவன் முன்பு தோன்றி, அவனை அதட்டி, வெருட்டி உறுமிப் பார்த்தனர்.

ஆயினும், த்ருவன் எள்ளளவும் கலங்கினானில்லை. ஒரு தேவன் ஸுநீதியைப்போல் த்ருவன் முன்னிலையில் தோன்றி "என் கண்ணே! என் குழந்தாய்! உனக்கேன் இத்தலைவிதி! நாட்டில் பலர்போற்ற வைபவத்துடன் விளங்கும் நீ, இவ்வாறு காட்டில் வந்து ஆகாரநித்திரையின்றி வருந்தவேண்டாம். உனக்கே பட்டத்தைக்

கொடுப்பதாக உன் தந்தை வாக்களித்துவிட்டார், மேலும் உன்னை அவமதித்த மாற்றாந்தாய்க்குவேண்டிய சிட்சை விதிப்பதாகவும் உறுதி கூறியிருக்கிறார். உன்னைப் பிரிந்து நான் ஒருகணமும் காலந்தரியேன். நான் உயிருடன் இருக்கவேண்டுமாயின், இப்பொழுதே நீ என்னுடன் வந்து அரசைக் கைகொண்டு, அரியணையில் வீற்றிருந்து, என்னை மகிழ்வித்தல் வேண்டும். இல்லாதுபோயின், உன் காலண்டை இப்போதே உயிரைப் போக்கிக் கொள்வேன்" என்று நயமாயும் பயமாயும் சொல்லி வேண்டியும்,

"எத்தொழிலைச் செய்தாலும், ஏது அவஸ்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே" என்ற வாக்கின்படி த்ருவன் தவத்தினின்று கலங்காமலிருந்தான். தங்கள் முயற்சியொன்றும் பலிக்காததுகண்ட தேவர் வெட்கமுற்றுப் போயினர். முடிவில் த்ருவனது தவத்தின் தூய்மையையும், மனத்தின் கலங்கா நிலைமையையும் கண்ட பெருமாள் பெரிதும் மகிழ்ந்து, த்ருவன் முன்பு தோன்றி, "பக்த! உன் பக்தியைக் கண்டு மெச்சினேன். நீ வேண்டும் வரம் யாது?" என்று அன்பாய் வினவினர்.

ஈசனைக் கண்ணெதிரே காணப்பெற்ற த்ருவன் ஒன்றுந் தோன்றாது, பரமனது புகழையும் பெருமைகளையும் வாயார நன்கு வாழ்த்தவும் அறியாதவனாய், வாய்க்கு வந்தவாறெல்லாம் ஆடிப்பாடி ஆனந்தத்திலாழ்ந்தான்.

அப்பொழுது திருமகள்கொழுநன் மீண்டும் த்ருவனை நோக்கி "அன்ப! நீ வேண்டுவதென்ன?" என்றார்.

"பக்தபராதீனராகும் பரஞ்சுடரே! தங்களையே
கண்ணாரக் கண்டபின்னும், நான் விரும்புவது என்ன?
என் எண்ணத்தைத் தாங்கள் அறியீர்களோ?" என்று
பதிலளித்தான் பால பக்தன்.

உடனே திருமால் பக்தனைப் பார்த்து "பூர்வத்தில்
ஒருவரும் அனுபவியாத உன்னதப் பதவியைப் பெற
விரும்புகிறேனென்று முனிவர்களிடம் நீ சொன்னா
யல்லவா! அவ்வாறே நீ என்னருளினால், மூவுலகங்
களுக்கும் மேலானதாய், ஸகல தாராக்கிரக நட்சத்திரங்
களுக்கும் ஆதாரமாய், சூர்ய சந்திராதி பதவிகளுக்கும்
ஸப்தரிஷிகளின் மண்டலத்திற்கும் விமானமாய், ஸித்
தாதிகள் ஸஞ்சரிக்கும் ஸ்தானத்துக்கும் அதி உன்
னதமாய் விளங்கும் மேலான பதவியை யடைந்து,
ஸுகமேயிருப்பாய். தேவர்கள் பலரும் யுகாதிமுடிவில்
இருக்கமாட்டார்கள். ஆயினும், நீயோ என்றும்
சலியாது அந்த உன்னதப் பதவியில் வாழ்ந்துவருவாய்.
அதுவுமல்லாமல், உன்னை ஈன்றெடுத்த தாயோ நட்சத்
திர ரூபமாய்ப் பிரகாசித்துக்கொண்டு, எக்காலத்தும்
உன்னுடன் உன்னருகிலேயே இருக்கும்படி அருளி
னேன். மேலும், எவனொருவன் உனது மகிமைக
ளைப் புகழ்கின்றானோ அவன் மகாபுண்ணிய புருஷனாய்
விளங்குவன்" என்று வரமருளினார்.

ஈசனிடத்துப்பக்திபூண்டு, சித்தத்தை நிலைநிறுத்தித்
துதி செய்பவர் இறைவனுடன் ஒன்றாய்க் கலந்து
விடும்படியான மகிமை பெறுவது நிச்சயம். அன்றி
யும் கடவுளிடத்து உண்மையாய்ப் பக்தி பூண்டிருப்ப
வர் விரும்பிய காரியத்தை விரும்பிய வண்ணமே பெறு

வரென்பதற்கும் தடையில்லை. இனி, த்ருவன் எட்டும் இரண்டும் அறியாத பாலனாயிருந்தும், தபோ முயற்சியினால் பெற்ற பெரும்பேற்றை யாவரும் மறவாது, அவனைப்பின்பற்றி நற்கதி பெறுவார்களாக!

சீர்மிகப்படைத்த சிபி சரிதம்

பறவைக்கு உயிர் வழங்கிய பரம புருஷன்

கடல்சூழ்ந்த இக்காசினியில் நம் பாரத வருஷத்தினுள்ள மன்னுயிர்களை யெல்லாம் தன்னுயிரேபோல நினைத்துப் பாதுகாத்துவந்த சூரியகுலத்தரசர்கள் முன் ஒரு யுகத்தில் நமது நாட்டை ஆண்டுவந்தனர். அவர்களது தலைநகர் அயோத்தி. அது கங்காநதியின் அருகிலுள்ளது. அவ்வமிசத்தில் திலகம்போல விளங்கி வந்தான் சிபி யென்னும் சக்கரவர்த்தி.

அவன் தர்மசாஸ்திரங்களை ஐயந்திரிபறக்கற்றவன். குடிகளிடமிருந்து ஆறிலொருகடமையே வாங்கி வந்த குணசீலன். அழகு, ஆண்மை, பெருமை, வீரம், தீரம், இவைகளில் ஈடில்லாதவன். கதிரவனது காந்தி பரவும் இம்மாநிலம் முழுவதும் அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. அவனுடைய நாடெங்கணும் புலியும் மானும் ஒரு துறையில் நீர் பருகி வந்தனவென்றால், அவனது செங்கோலைப்பற்றி நாம் என்னென்று சொல்வது?

முடிவாகச் சொல்லின், மனுநெறியின் முறையைக் கற்கவேண்டுபவர் அவனுடைய அரசாட்சியில் பிரத்தியக்ஷமாகத் தெரிந்து கொள்ளலாம். நிற்க, ஒரு நாள் மாலைப்பொழுதில் அம்மன்னவன் தனதரண்மனையின்

பூங்கா ஒன்றில் உலாவிக்கொண்டிருந்தான். அப்போது தென்றலோ மிகவும் வாசனையுடன் வீசியது. அச்சமயம் மிகுந்த பரபரப்புடன் பயங்கொண்ட புறாவொன்று அப்பார்த்திபன் மடியில்வந்து வீழ்ந்தது.

உடனே இறைவன் அப்பறவையை அன்புடன் எடுத்து, அதன் உடலில் காணப்பட்ட வியர்வை நீரினைத் துடைத்து, அதற்கு வேண்டிய உபசாரங்கள் பலவும் செய்தான். அப்பொழுது ஒரு பெரிய பருந்து ஆகாயத்தில் தோன்றி, அவ்வேந்தர் வேந்தனை நோக்கி, தெளிவான மானிட வாக்கினால் சொல்லத் தொடங்கியது—

"மன்னர் மன்ன! தங்கள் கைதனிலிருக்கும் புறாவை நான் வெகுதொலைவினின்று துரத்திவருகிறேன். சென்ற மூன்று நாட்களாய் நான் அப் புறாவின்மீதே கண்ணாயிருந்ததனால், இதுவரையில் எவ்வித உணவும் எடுத்துக்கொள்ளவில்லை. இதைப்போன்ற அற்பப் பறவைகளின் மாமிசங்களையே ஈசன் எனக்கு ஆகாரமாக விதித்திருக்கின்றான். இதைத்தவிர வேறுவித உணவை அப்பரமன் எங்களுக்கு விதித்திருப்பதாகத் தெரியவில்லை. அதுவுமன்றி, எங்கள் கூட்டத்தார் அனைவரும் மாமிசபட்சணிகளென்பது யாவரும் உணர்ந்த விஷயம். ஆகவே, எனது உணவாகிய இப்புறாவைத் தட்டச்செய்தல் தர்மவிரோதமாகுமென்பதை நான் சொல்லவேண்டுமோ? இரவிகுலத்தரசர்களோ தருமத்தினின்றும் பிறழாதவர்கள். அதுவே அவர்களுக்கு ஆபரணம். இனி, எவ்வகுப்பினரும் தங்கள் தங்கள் குலத்திற்குரிய தொழிலையே செய்ய வேண்டுமென்

பது வேதவிதி யாகும். அதிலிருந்து தப்பியவர்களுக்குத் தண்டனை யளிக்கத் தங்களது தர்மசக்கரம் காத்திருக்கின்றது. நிற்க, நானோ தங்களுக்கு விருந்தாளியாயினேன். என்னை ஏமாறிப்போகச் செய்தல் தர்மமல்ல, ஆண்மையுமல்ல."

சொற்செறிவும், பொருட் பொலிவும் பொருந்திய இவ் வசனங்களைச் செவியுற்ற அரசன் அப்பருந்தை நோக்கி, "நீ விருந்தாளி யென்பது மெய்தான். உன் பசியைப் போக்குதல் என் கடமையே! நினது உணவு மாமிசம் என்பதையும் நான் அறிவேன். உன் வாயினின்று வெளிப்பட்ட வசனங்களைப்பார்த்தால், உன்னை மேலான மனிதப்பிறவியிலே சேர்த்தெண்ண வேண்டுமேயன்றிப் பறவை என்று சொல்லுதல் பொருந்தாது.

"ஆதலினால் நான் சொல்லப்போகும் வார்த்தைகளை அவசியம் கவனிப்பாயாக. நீ இப்பறவையை இச்சிக்கின்றாய். அவ்வண்ணமே நீ அடைகின்றாய் என வைத்துக்கொள்வோம். அதன் இறைச்சி உனக்கு ஒருவேளைக்குத்தான் போதும். உன் ஆயுள்பரியந்தம் இப்பறவை உன் பசிப்பிணியைப் போக்காது. இப்பறவையைத் தின்றபின்னும், வேறு உணவை நீ தேடவேண்டும். புறாவோ என்னை அடைக்கலமாக அடைந்தது. ஆபத்தென்று அஞ்சிவந்தவர்களைக் காப்பாற்றாமல் கைவிடுதல் மாபாதக மாகுமல்லவா?

"மேலும், நீயோ இப்புறாவின் பகைவன். உன்னிடம் சபயத்தில் காட்டிக் கொடுப்பின், நான் தருமத்தில் தவறநேரும். ஆயினும் பசித்துவந்த உன்னை வீணே அனுப்புதலும் முறையன்று. ஆகையினால், இப் புன்

புறுவைத் தவிர்த்து, மற்று எதை நீ விரும்பினும், அதனே உடனே உதவுகின்றேன். நீ விரும்புவது என்ன ?" என்று வினவினன்.

பின் பருந்து சொல்லும்:—"இராஜதிலக! பிற வுயிர்கள்மீது தமக்கிருக்கும் கருணையை நான் என்னென்று புகழ்வது! தாங்கள் கூறிவந்த மொழிகள் ஒவ்வொன்றும் பொன்போல் போற்றத் தக்கது. இதனு லன்றோ தங்கள் குலத்தின் பெருமை உலகெங்கும் பரவி யிருக்கின்றது! அறத்தைப் போற்றி மறத்தைக்கடிந்து பெரும்புகழ் கொண்டது தமது ஆக்ஞா சக்கரம்.

"அதன் கீழ் வாழும் நான், தாங்கள் கூறிய தற்கு மாறுகக் கூறும் ஆற்றலுடையேனுவதெப்படி? தமது நல்லருளினுலன்றோ ஞாலம் முழுவதும் சுகமே வாழ்ந்து வருகின்றது! புறுவின் இறைச்சியைத் தவிர வேறு எதை விரும்பினும் தட்டாது கோடுப்பேனென் றதால், இப்புறுவுக்குச் சரியான எடையளவு மாமிசம் தங்கள் உடலிலிருந்து தந்தருளவேண்டும். அறத்தின் வேலியாகிய தாங்கள், என் வேண்டுகோளைப் பூர்த்தி செய்யாது, என்னை வறிதே யனுப்பிவிடமாட்டீர்களெ ன்று நம்பி யிருக்கிறேன்."

இவ்வாறு எள்ளளவும் பயமில்லாது பருந்து புகன்ற மொழிகளைச் செவியிலேற்ற அரசன் சிறிதேனும் கால தாமதஞ் செய்தனனே? இல்லை இல்லை! அக்கணமே பூபதி பருந்தைப் பார்த்து, "நீ கேட்டவண்ணமே புறு வின் எடையளவு இறைச்சியை என் உடலிலிருந்து அரிந்து தருகின்றேன்" என்றியம்பி, தராசு ஒன்று தரு வித்தான்.

பின்னர் அரை நொடியும் தாழ்க்காது, கூறிய கத்தியொன்றை எடுத்து, அதனால், புறாவின் எடைக்குச் சரியான மாமிசத்தைத் தன் தொடையிலிருந்து அரிந்து, துலைக்கோலின் ஒரு தட்டில் புறாவையிட்டு, மற்றொரு தட்டில் மாமிசத்தினை வைத்தான்.

ஆயினும், அது புறாவின் எடைக்குச் சரியாக இல்லை. கொஞ்சம் குறைவாயிருந்தது.

ஆதலினால், இராஜதிராஜன் மறுபடியும், ஒரு சிறிது மாமிசம் அறுத்து, அதனைத் தட்டிலிட்டான். அப்பொழுதும், துலைக்கோலின் மாமிசமிட்டதட்டு மேலே கிளம்பியது.

மீண்டும் ஒரு சிறிது மாமிசத்தை அரிந்து வைத்தும், துலைக்கோலின் தட்டுகள் சரியாக நிற்க வில்லை.

"மறுபடியும் மறுபடியும் மாமிசத்தினை அரிந்து அரிந்து தட்டிலிட்டுப் பார்த்தும், துலைக்கோல் சமனுகாதது கண்ட அரசன்,

"இதென்ன! தேவர்களின் சூழ்ச்சியோ? நமது உடலிலுள்ள சதை முழுவதையும் அரிந்து தட்டிலிட்டும், புறாவின் எடைக்குச் சரியான மாமிசம் கொடுக்க முடியாது போயிற்று.

"க்ஷத்திரிய குலத்தில், அதிலும் சூரியவமிசத்தில், தோன்றிய ஓர் அரசன், கேவலம் ஓர் அற்பப் பறவைக்குக் கொடுத்த வாய்மொழியை நிறைவேற்ற முடியாது போயினனென்றால், அதனினும் இழிவானது வேறில்லை. யாது நேரினும் வாய் மொழியை மெய்ப்பித்தலே மேலோரின் கடமை. அங்ஙனமிருக்க, அக்

கடமையினின்று தவறுதல் ஒவ்வாது" என்று சிந்தித்து முடிவில் தானே துலைக்கோலில் ஏறினன்.

அக்கணமே அந்தரத்தினின்று பூமாரியும் பொன்மாரியும் பொழிந்தன. தேவர்களும் சித்தர்களும் ஆகாயத்தே தோன்றி அரசனை ஆசீர்வதித்தனர். துந்துபி முதலிய பல்வகை வாத்தியங்களும் கடல்போல முழங்கின.

இவ்வாறிருக்கையில், அனைவரும் கண்டு அதிசயிக்கும் வண்ணம், புறவும் பருந்தும் முறையே யமனாகவும், இந்திரனாகவும் இந்திர ஜாலத்தியற்கைபோல் உருமாறின.

உடனே நகரிலுள்ளார் அனைவரும் ஆங்கு வந்து குழுமினர்கள். பின்பு, பருந்தாகத் தோன்றி நின்று முன்பு வாதித்த இந்திரன், கருணைக்கடலாகிய சிபிச் சக்கரவர்த்தியைப் பார்த்து,

"அண்ணலே! உனது ஜீவகாருண்யத்தை நான் எவ்வாறு எடுத்துரைப்பேன்! கிருபா சமுத்திரமென்றால் உனக்கே தகும்! மிகவும் அற்பப் பறவையாகிய புறுவைக் காப்பாற்ற வேண்டி, உன் உடலினுள்ள சதை அவ்வளவையும் அரிந்து வைத்ததோடு நில்லாமல், துலைக்கோலினும் ஏறி நின்றாயே! மன்னுயிரைத் தன்னுயிர் போல் பாவித்துப் போற்றிவரும் உனது பெருமையை விண்ணுளோரும் மண்ணுளோரும் ஒருங்கே அறிந்து கொள்ளுமாறு, துலைக் கோலின் தட்டுகளைப் பேதப்படுத்தியது நாங்களே. உன் உயிரையும் ஒரு பொருளாக நினையாமல், உன்னை வந்து அடைந்தோரைக் காப்பாற்றிய பெருந்தன்மையைக் கண்டு அகமகிழாதார்

யாவருளர்! அரசே! நீயன்றோ மனுநெறி தவறாது உலகத்தைப் புரக்கும் அரசன்!"

என்று பலவாறு துதிக்கவே, மற்றைத் தேவர்களும் மனமகிழ்ந்து, அரசனுக்கு வச்சிர உடல் உண்டாகுமாறு வரமருளினர்.

அதன்பின் அரசன் பன்னெடுங்காலம் சுகஜீவியாய் வாழ்ந்து செங்கோல் செலுத்தி வந்தான்.

இக்காலத்தே எழுத்து வாசனை யில்லாத பெண்டிர் பலரும்,

"பறவையாம் மன்னுயிர்க்குத் தன்னுயிரைமாறாக வழங்கிய சிபிச்சக்ரவர்த்தியன்றோ அரசன்!"

என்று மனங்குளிர்ந்து வாயார வாழ்த்துவது அனைவரும் அறிந்த விஷயம்.

உத்தம மாணவனும் ஏகலைவன்

குரு பக்தி

மண்மகளின் மங்கலநாண்போல் விளங்கும் நம் பரத கண்டத்தை முன்னம் அரசு செலுத்தி வந்தான் திருத ராஷ்டிரன் என்னும் மன்னவன். அப்பார்த்திபனுக்கு நூறு புதல்வர் உண்டு, அவர்கள் நூற்றுவரும் கௌர வர் என அழைக்கப்பட்டனர். அவ்விறைவனுக்கு, பாண்டு என்னும் சகோதரன் ஒருவன் இருந்தான். அப்பாண்டுவுக்கு மைந்தர் ஐவர். அந்த ஐவரும் பாண்டவர் எனப்படுவர்.

அக்குமரர் அனைவரும் துரோணர் என்னும் நாமம் பூண்ட வேதியரிடம் அரசர்க்குரிய அஸ்திர சஸ்திரப் பயிற்சி பெற்று வந்தனர். சிலைப்பயிற்சியில் துரோ ணரை ஒப்பார் எவருமிலர். துரோணர் தம் கைத னில் வில்லையேந்தி, நாண்பூட்டி, அம்புதொடுத்து, நிற் பாராயின், தேவர் பலரும் அவரை எதிர்த்து நிற்கும் ஆற்றலுடையராகார்.

ஆதலின், அஸ்திர வித்தையில் துரோணருக்கு ஈடா வார் முக்காலத்திலும் இல்லையென்பதை மறுக்க யாவ ராலுமாகாது.

முன்னம், பாரதயுத்தத்தில் கௌரவர் பக்கம் துரோணர் சேனைத் தலைமை வகித்து, கடும்போர் புரிந்த காலத்தில், கண்ணபிரானய் அவதரித்த திருமாலும், துரோணரது வில்லாண்மையைக் கண்டு தியங்கி நின்றனரென்றால், அத்துரோணரின் சிலைவன்மையை நாம் விரித்துரைப்ப தெங்ஙனம்?

பாண்டவர் கௌரவர் ஆகிய அனைவரும் துரோணரிடம் அஸ்திரசஸ்திரப் பயிற்சி பெற்று வந்தகாலத்து, இப்பரதகண்டத்தே யுள்ள அரசிளங்குமரர் அனைவரும் அவரையே ஆசிரியராக அடைய விரும்பினர்.

அவ்வாறு, அரசிளங்குமரர் பலர்க்கும் துரோணர் வில்வித்தை புகட்டி வந்தும், பாண்டவர் திலகனும் அர்ஜுனனிடமே அவர் மிகுந்த அன்பும் ஆர்வமும்கொண்டிருந்தனர். இது இவ்வாறாக, ஹஸ்தினபுரத்தே ஹிரண்யதனுஸ் என்னும் வேடவனொருவன் வசித்து வந்தான். அவனுக்கு ஏகலைவன் என்றொரு புதல்வன் உண்டு. தனுர்வித்தையிற் சிறந்து விளங்கும் துரோணரிடமே அக்கலையை நன்கு பயிலவேண்டுமென்ற ஆவல் அவனுக்கு உண்டாயது.

ஆகவே அவர்பாற் சென்று, அஷ்டாங்க தண்டனிட்டு, "மறையவர் திலகமே! சரணம்! யான் ஒரு வேடவச் சிற்றரசின் மைந்தன். என்னை ஏகலைவன் என அழைப்பர். என் குலத்திற்குரிய கலைத்தொழிலைக் கற்கத் தங்களை நாடியடைந்தேன்," என்று வேண்டி நின்றான் ஏகலைவன்.

அவ்வேடவச் சிறுவனது வேண்டுகோளை யுணர்ந்து

---

* ஏகலவன் எனவும் வழங்கும்.

கொண்ட துரோணர் சிறிதுநேரம் மௌனஞ் சாதித்திருந்தனர்.

ஏனெனில் அப்பெரியவரிடம் அரசிளங்குமரர் அனைவரும் கலை பலகற்று வருகின்றனர். ஆகவே அவர்களுடன் வேடுவச்சிறுவனுக்கும் கலை பயிற்றல் ஒவ்வாது. ஆயினும், வித்தையை நாடிவந்து அடைந்தவனை வறிதே அனுப்பிவிடுதலும் ஆகாது.

எனவே, துரோணர் சிறிது நேரம் சிந்தித்து, முடிவில் ஏகலைவனை நோக்கி, "அப்பா! மன்னிளங்குமரர் பலர்க்கும் பல்வலகத்தான கலைகளைப் பயிலுவித்து வருவதனல், நீ விரும்பியவண்ணம் வித்தை கற்பிக்க எனக்கு அவகாசமில்லை. ஆயினும், நீ வில் வித்தையில் கீர்த்திபெறுவாய்," என்றருள்மொழி கூறினர்.

தனுர்வித்தை கற்பிக்கத் தமக்கு அவகாசமில்லையென்று துரோணர் கூறியும், அவரது அருளை மிகவும் பெரிதென மதித்த ஏகலைவன், சிறிதும் மனச்சோர்வு கொள்ளாது, சரேலென வீடுசென்று, துரோணரைப் போல் ஓர் உருவச்சிலை அமைத்தான். அமைத்ததும் தன் வீட்டின் ஒருபுறத்தே நன்கு அலங்கரிக்கப் பெற்ற ஓரிடத்தில், அச்சிலையை ஸ்தாபித்து, அச்சிலையையே மெய்யான துரோணரென மதித்து, குருவினிடம் பணிவாய் இருப்பதுபோல், அதனிடம் நடந்து வந்தான்.

மேலும், நாள்தோறும் அதிகாலையில் எழுந்து, காலைக் கடன்களை முடித்தபின்னர், அச்சிலை உருவத்திற்குத் தூபதீப நைவேத்தியங்கள் செய்து, தானே தனுர்வேதத்தைக் கற்றுவந்தான்.

துரோணரது அருள் மொழியாலும், அவரிடத்துத் தான் கொண்டிருக்கும் பயபக்தி வினயத்தாலும், துரோண உருவமே குருவென மதித்துவந்த மேன்மையினாலும், நாளடைவில் ஏகலைவன் வில் வித்தையில் எவரும் நிகரில்லை யென்னும்படி தேர்ச்சிபெற்றான்.

ஆகவே, ஏகலைவன் பூண்டிருந்த குருபக்தி புகழத்தக்கதென்று சொல்லத் தடையுமுண்டோ?

நாள்தோறும் கலைமதிவளர்வதே போல், ஏகலைவனது கலைப்பயிற்சியும் வளர்ந்துகொண்டே யிருந்தது. ஈதிங்ஙனமிருக்க,

துரோணரிடம் தனுர்வேதம் கற்று வந்த சிஷ்யர்களாம் அரசிளங்குமரர்களில் அர்ஜுனனே அனைவரினும் மேம்பட்டு விளங்கினான். மேலும் பாணத்தை எடுப்பதிலும் தொடுப்பதிலும் விடுப்பதிலும் அவனை மிஞ்சுவார் எவருமிலர். அவ்வர்ஜுனனது புத்தி நுட்பத்தையும் வில்லாண்மையையும் கண்டு துரோணரே களிகொண்டனரென்றால், அவனது அஸ்திரப் பயிற்சியைப்பற்றி நாம் என் புகல்வது!

அப்பாண்டவரும் கௌரவரும் ஒருநாள் துரோணரது அனுமதிபெற்று, வேட்டையாடக் காட்டையடைந்தனர். அச்சமயம் அர்ஜுனனது அருமை நாயும் அவர்களுடன் காடு சென்றது. அந்நாயோ கானகத்தை இங்குமங்கும் அலைந்து திரிந்து, கடைசியில் ஏகலைவனது சிலம்பக்கூடம் சேர்ந்து, அங்கிருந்த துரோண பிம்பத்தை அசுத்தப் படுத்தியது. அதனை யறிந்த ஏகலைவன், "அந்தோ! நமது குருவுக்கு இத்தகைய அபராதம் புரிந்த சுணங்கனைச் சும்மாவிடுதல்

கூடாது" என்று சினந்து, உடனே நாணேற்றி, அந்நாயின்மீது அம்பு தொடுத்தான். ஏகலைவன் எய்தது ஓர் அம்பேயாயினும், அது அந்நாயின் ஆகமெங்கும் பாய்ந்து அதன் வாய்வழியே வெளிச் சென்றது.

ஆதலின், அவ்வேதனையைப் பொறுக்கமுடியாத அந்நாய் பட்டபாட்டைக் கண்ட பாண்டவர்கள் வியப்பும் வருத்தமும் ஒருங்கே எய்தினர். ஏனெனில், ஓரம்பு நாயின் உடலெங்கும் ஊடுருவிச் சென்றிருந்ததனால், அவ்வரிய பெரிய பயிற்சியைப் பெற்றிருப்பவன் வில்லாளிகளிற் சிறந்தவனாயிருக்க வேண்டுமென்னும் வியப்பு. ஆயினும், தங்களது அருமைநாய் படாதபாடு படுவதனால், இங்ஙனம் அதனை நோவச் செய்தவன்மீது வருத்தம்.

அத்தகைய வில்லாளியைக் காணவேண்டுமென்ற அவா மேலிடவே, அப்பாண்டவர் ஐவரும், நாய் வழி காட்ட, ஏகலைவனது சிலம்பக்கூடம் எய்தினர். பாண்டு மைந்தர்களின் வரவைக் கண்ட ஏகலைவன் அன்புடன் அவர்களை வரவேற்றான்.

அவனை இன்னானென அவர்கள் அறியமுடியவில்லை. ஆகவே, அச்சிறுவனை நோக்கி, "யார் நீ?" எனலும், 'அரசிளஞ்சிங்கங்களே! துரோணருடைய சிஷ்யர்களில் நானும் ஒருவன். இம் மாநிலத்தே வேடுவர்க்கரசாய் விளங்கும் ஹிரண்யதனுஸ் என்பவருடைய புதல்வன். என்னை ஏகலைவன் என்று அழைப்பர்" என்றான் அவ்வேடுவச் சிறுவன்.

பின்னர், அப்பாண்டவர் ஐவரும் அங்கிருந்து புறப்பட்டு துரோணரை யடைந்து, நடந்தன யாவும் நவின்

றனர். இனி, தம்மினும் கற்றாரை நோக்கிக் கருத்தழிக, கற்றவெல்லாம் எற்றேயிவர்க்கு நாம் என்னும் முதுமொழிக்கிணங்க, அஸ்திரப் பயிற்சியில் தன்னை விட ஏகலைவன் சிறந்து விளங்குவதை உணர்ந்து கொண்ட அர்ஜுனன் பெரிதும் வருந்தி, தனியே துரோணரை யடைந்து,

"பரம குருவே! வந்தனமளிக்கின்றேன். ஓரம்பு ஆகமெங்கும் பாயும் அரிய பிரயோகத்தைச் சிலதினங்களுக்குமுன் எனக்குமட்டுமே தாங்கள் கற்பித்திருக்க, ஏகலைவன் என்னும் தங்கள் மாணவன் ஒருவன் அவ்வித்தையில் என்னினும் சிறந்து விளங்குகின்றான். அவன் அப்பயிற்சியை அறிந்தது எங்ஙனம்?" என்றான்.

அது கேட்டு, அர்ஜுனனது முகவாட்டத்தையும் மனத் தளர்ச்சியையும் நன்கறிந்துகொண்ட துரோணர், உடனே அவனுடன் புறப்பட்டு, ஏகலைவனது கூடஞ் சேர்ந்தனர். ஆசிரியர் வரவைக் கண்ட ஏகலைவன் மிகவும் அகமகிழ்ந்து, எதிர்கொண்டு சென்று வணங்கி, அவரை ஆதனத்தே இருத்தி, வாய் புதைத்துக் கை கட்டி வணக்கமுடன் நின்றான்.

அப்போது துரோணர் ஏகலைவனை நோக்கி, "அப்பனே! உனக்கு வில்வித்தை கற்பித்தது யார்?" எனலும், ஏகலைவன் சொல்லுவான் :—

"தேவரும் புகழ்தற்குரிய தேவே! சரணம்; அஸ்திரப்பயிற்சியைப் பெறும் ஆவல்கொண்டு, அன்று தங்களை நாடினேன். ஆயினும், 'இச்சமயம் எனக்கு அவகாசமில்லை' என்று தாங்கள் சொல்லிவிட்டீர்கள். என்றாலும், தங்களையன்றி வேறெவரிடமும் வில் வித்தை

கற்றுக் கொள்ள மனமில்லாத யான், அக்கணமே தங்களைப்போல் ஓர் உருவம் செய்து, அதனையே தாங்கள் என்று பாவித்து, இன்றளவும் வணங்கிவருகின்றேன். தங்களுடைய ஆசீர்வாதத்தால் ஏதோ ஒரு சிறிது அவ்வித்தையில் தேர்ச்சி பெற்றேன். தங்களுடைய அருளிருப்பின் கிட்டாத காரியம் ஏதேனும் உளதோ? எல்லாம் தங்களுடைய ஆசீர்வாதமே!"

இம்மொழிகளைக் கேட்ட துரோணர் மிகவும் மனங்களித்தார். அவரிடத்து அளவற்ற அன்பு பூண்டிருப்பது தானே என்று தருக்கியிருந்த அர்ஜுனனும் ஏகலைவனது குருபக்தியைக் கண்டு ஒருவாறு உணர்ச்சி பெற்றான்.

பின்பு, துரோணர் ஏகலைவனை நோக்கி, 'நீ எனது சிஷ்யனாயின் உனக்குரிய குருதட்சிணையைக் கொடுக்க வேண்டாமோ?" என்று கேட்டார்.

அதற்கு ஏகலைவன் "அப்படியே! அதற்கென்ன தடை! தாங்கள் குருதட்சணையாக எதைவிரும்பினும், அங்ஙனமே ஆர்வமுடன் அதனைக் கொடுக்கச் சித்தம்" எனலும்,

"நான் விரும்புவது வேறொன்றுமில்லை. உனது வலக்கைக் கட்டைவிரலே" என்றார் துரோணர்.

இக்கடுஞ்சொல்லைக் கேட்ட வேடுவச் சிறுவன் சிறிதேனும் தாமதித்தனனோ? இல்லை. இல்லை.

வில்லை நாணேற்றி அம்பு தொடுப்பதற்கு வலக்கைக் கட்டை விரலே அதியவசியமானது. வில்லாளிகட்கு அக்கட்டை விரல் இல்லாது போயின், நகமும் பல்லும் இழந்த ஆண்சிங்கம்போல் அவர்கள் ஆண்மையற்றுப்

போவர். விற் பயிற்சியில் எவ்வளவு சிறந்திருப்பினும், அவ்விரலின்றி ஒரு சிறிதும் பயனில்லை.

இவ்வாறிருந்தும், ஏகலைவன் கொஞ்சமேனும் வருந்தாது, "ஆ! இம்மஹானது பேரருளினாலன்றோ நான் தனுர் வேதத்தில் தேர்ச்சி பெற்றேன்! அங்ஙனமிருக்க, அவர் குருதட்சணை விரும்பும்பொழுது, இக்கட்டைவிரலன்றி, உயிரை விரும்பினும், அவ்வண்ணம் அளிப்பதே சாலச்சிறந்தது. மேலும், வில்வேதத்திற் சிறந்த பரமகுருவாகிய துரோணருக்குக் குருதட்சிணை கொடுக்கும் பாக்கியமும் பெற்றேன்" என்று அகமும் முகமும் ஒருங்கே மலர்ச்சியுற்றான்.

பின்னர், ஒருகணமும் தாழ்க்காது, வாள் கொண்டு விரலை வெட்டி, ஆசிரியருக்கு ஈந்தான். அப்பொழுதே அந்தரத்தினின்று "குருபக்தியிற் சிறந்தவன் ஏகலைவனே!" என மும்முறை அசரீரி உண்டாயிற்று.

துரோணரும் மனம் பூரித்தார். அர்ஜுனனும் "ஆ! ஆ! குருபக்தியில் ஏகலைவன் சிறந்திருக்க, நாம் எந்த மூலை" என்று ஏங்கி, அவனது பக்தியை நினைத்து நினைத்து மகிழ்ந்தான்.

ஏகலைவன் ஜாதியில் வேடுவனாக இருந்தும், அவன் கொண்டிருந்த குருபக்தி மிகவும் மெச்சத் தக்கதன்றோ? அவ்வாறு அவன் துரோணரிடம் பக்தி பூண்டிருந்ததனாலல்லவா எப்பயிற்சியையும் தானே உணர்ந்துகொண்டான்! ஆகவே, அனைவரும் ஆசிரியரிடத்து மிகுந்த பக்தி பூண்டிருப்பது அவசியமென்பது நன்கு விளங்கும்!

பரீக்ஷித் சரிதம்

விதியை வெல்வதெங்ஙனம்?

முன்னொரு காலத்தில் பரீக்ஷித்தென்னும் பெயருடைய அரசர் ஒருவரிருந்தார். அவர் ஹஸ்தினாபுரத்திலிருந்து மனுநெறி தவறாது செங்கோல் செலுத்தி வந்தார். குடிகளுக்குத் துன்பம் செய்யுந் துஷ்டப் பிராணிகளை வதைத்து அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டியது க்ஷத்திரியர்களுடைய கடமையாகையால், அம்மன்னவர் அடிக்கடி காடு சென்று வேட்டையாடி, பொல்லாத விலங்குகளைக் கொன்றுவருவது வழக்கம். அவ்வாறே ஒருநாள் காட்டிற்குச் சென்றிருக்கையில், ஒரு மானைக்கண்டு அதன்மேல் அம்பொன்றை ஏவ, அவ்வம்பு தைத்தும் அம்மான் இறந்து விழாமல் ஓடி விட்டது.

ஆதலின் அதைத்தேடி, நாளெல்லாம் அலைந்தும் அது அகப்படவில்லை. காட்டின் நடுவே ஒரு பசுக் கொட்டிலிலிருந்து, கடவுளைச் சிந்திப்பதிலேயே கருத்தைச் செலுத்தித் தவம் செய்துகொண்டிருந்த சமீகர் என்ற ரிஷியைக் கண்டார்.

கண்டதும், அவர்பாற்சென்று, தாமடித்த மானைக் கண்டதுண்டோவென்று வினவ, மௌன விரதம் பூண்டவராகிய அம் முனிவர் பதிலுரையாது வாளாவிருந்

தனர். மானகப்படாத வருத்தத்தால் கோபமுற்றிருந்த அவ்வரசன், சமீகர் பதில் அளியாதது கண்டு, சினங்கொண்டு, "பேசாது செத்த பிணம்போலிருக்கும் நீர் இச்சவத்தையும் சுமந்திரும்" என்று சொல்லி, அங்குக் கிடந்த ஒரு செத்த பாம்பை அம்பின் நுனியால் எடுத்து அம்மகானுடைய கழுத்தில் மாலையாகப் போட்டார்.

அதை அறிந்த முனிவர் அப்பொழுதும் தம்மன வுறுதிகெடாது, அரசரையும் கோபியாது, அச்சவத்தையும் எடுத்தெறியாது, தியானத்திலேயே இருந்து விட்டார். அவருடைய சாந்த குணத்தைக் கண்ட பார்த்திபர் வெட்கமும் வருத்தமுமடைந்து தன்னகர்போய்ச் சேர்ந்தார்.

சமீகருடைய கழுத்தில் செத்த பாம்பு இருந்ததைக் கண்ட பார்ப்பனச் சிறுவர், அதை அச்சமயம் காட்டினின்று திரும்பிவந்து கொண்டிருந்த அவருடைய குமாரரான சிருங்கி என்பவருக்குச் சொல்லிப் பரிகாசஞ்செய்தனர். அவருங் கொடிய தவத்தைச்செய்து சாபானுக்கிரக சக்திவாய்ந்தவர். இளம்வயதினராகையால் பொறுமை யில்லாதவராயிருந்தார். ஆகையால் அச்சிறுவர் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு மனம் பொங்கி, "இறந்த பாம்பை யன்றோ அவ்விறைவன் பரமஞானியாகிய என் தந்தையின் கழுத்திலிட்டான்! அவனை இற்றைக் கேழாநாள் பொழுதுபோகுமுன் சர்ப்பங்களிற் சிறந்த தக்ஷகன் கடித்துக்கொல்லக் கடவன்," என்று சாபமிட்டனர்.

அவ்வாறு சாபமிட்ட பிறகும், கோபந்தணியாது

அவர் தம் தந்தையிருந்த இடத்தை அடைந்து, தாம் கேள்வியுற்றதையும், பிறகு சபித்ததையும் அறிவித்தார்.

அதைக்கேட்ட சமீகமுனிவர் வருத்தமடைந்து, பின் வருமாறு சொல்வாராயினர்.

"வெகுபாடுபட்டு, தவத்தைச்செய்து, அதனாலடைந்த சக்தியைப் பிறர்க்குத் தீங்கிழைப்பதில் செலவிட்டுவிடுதலினும் கொடிய பாவம் வேறில்லை. அவ்வரசனோ மானைத்தேடித் திரிந்த களைப்பினால் மதிமயங்கி, தவஞ்செய்கையில் நான் மௌன விரதம் பூண்டிருந்ததை அறியாது பிழை செய்துவிட்டான். எப்பிழை செய்தாலும் அதை பொறுப்பதே நம்போன்றவரின் கடமை, பொறுமையைத் துறந்தோர் நற்கதி யடையார்.

"மேலும் அம்மன்னனுக்கு நாம் மிகவும் கடமைப் பட்டிருக்கிறோம். அவன் மனுநெறி வழுவாது ஆட்சி செய்து வருவதாலன்றோ, இடையூறின்றி நாம் தவஞ் செய்கிறோம்!

"ஆகையால் தவத்தின் பயனாக நீ பெற்றிருக்கிற சக்தியும் அவ்விறைவனால் உதவப்பட்டதல்லவோ? நீ செய்த காரியம் என் மனத்தைப் புண்படுத்துகின்றது."

இவ்வாறு தந்தை கூறியதைக்கேட்ட அந்தச் சிறுங்கி "நான் சத்தியத்தைக் கடைப்பிடித்தவன், என் சொல் தவறாது," என்று பிடிவாதமாகச் சொல்லினர்.

அதுகேட்ட சமீகர், "அதை நான் அறிவேன், சத்தியத்தைக் கடைப்பிடித்தவனாக இருப்பதுபோலவே, பொறுமையையும் கருணையையும் கடைப்பிடித்து

ஒழுக வேண்டுமன்றோ? உன் சாபத்தால் அக்காலவனு க்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்தை நான் அவனுக்கு அறி விக்கப் போகிறேன். க்ஷத்திரியர்கள் எப்பொழுதும் குடிகளைப்பற்றிய கவலை கொண்டவர்களாகையால், ஆத்தும லாபத்தை கவனிக்க அவர்களுக்கு அவகாச மில்லை.

"மரணம் திடீரென்று நேரிடுமாயின், ஈசுவரஸ்வரூப விசாரணை செய்யமுடியாது, அவர்கள் சரீரத்தை விடவேண்டியவர்கள். ஆகையாற்றான் அநேக அர சர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உரிய வயது வந்ததும் பூமியைக் காக்கும் பொறுப்பை அவர்கள் தோள்மீ தேற்றித் தவத்தை நாடிச் சென்றிருக்கின்றனர்.

"அவ்வரசனுடைய குமாரனோ இன்னும் இளவர சுக்கு உரிய வயதை அடையவில்லை. ஆகையால், மோக்ஷ சாதனமான காரியம் எதையும் அம்மன்னவன் செய்திருக்கமுடியாது.

"எனவே, தனக்குமரணம் கிட்டியிருப்பதை அவன் முன்னரே அறிவானாயின், அதைத்தடுக்கக்கூடிய வழி களைத் தேடிக்கொள்வான்; அல்லது எஞ்சியுள்ள கால த்தை ஈசுவரத் தியானத்தில் கழித்து நற்கதியடை வான்."

இங்ஙனஞ் சொன்னபிறகு முனிவர்பிரான், சிருங்கி யிட்ட சாபத்தை அரசருக்கு அறிவிக்குமாறு ஒரு சிஷ்யனை அரசன்பால் அனுப்பினர்.

அந்தச்சிஷ்யனும் அரசரையடைந்து நடந்த விஷயங் களை நவின்றான். அந்தணர் சாபத்தால் மரணம் நெரு ங்கிவிட்டதைக் கேட்ட காவலன் அதற்காக வருந்த

வில்லை யாயினும், அந்த ரிஷி மௌனவிரதர் என்பதையும், ஆகையாற்றான் தமக்குப் பதில் சொல்லவில்லை என்பதையும் உணர்ந்து, அவர் விஷயத்தில் தாம் பிழை செய்து விட்டதை நினைந்து நினைந்து துக்கப் பட்டார்.

“அறிவுகெட்டு நான் செய்ததை க்ஷமிக்கும்படி வேண்டுகின்றேன் என்று சொல்லுங்கள்”

என்று அச்சிறுவனை வேண்டிக்கொண்டு, அவனை அனுப்பிவிட்டு, அமைச்சர்களை அழைத்து, “இனிச் செய்யவேண்டியதென்ன?” என்று ஆலோசித்தார். ஈசன் எல்லா உயிர்களையும் காக்கக் கடமைப்பட்டவ ரென்று மந்திரிமார் சொல்லினர். ஆகவே, காற்றும் நுழைய முடியாத மண்டபமொன்றை அரசர் நிருமித்து, அதைச்சுற்றிக் காவலாளரை நியமித்து, அறிவிற் சிறந்த பெரியோர்களுடன் தாம் அதனுள்ளிருந்து கொண்டு அரசாட்சியிலேயே காலம் கழித்துவிட்டதையும், ஈசுவரவிசாரணை செய்யாது போனதையும் சொல்லி வருத்தப்பட்டார்.

பக்தியில் அரசருக்குத் தோன்றியிருக்கும் தீவிரத்தை ஞானதிருஷ்டியாலறிந்த சுகஸ்வாமிகள் ஆங்கெழுந்தருளி, அரசரைத் தேற்றி, சித்தசுத்தியுடையோருக்குப் பகவானையறிய ஒருகணமே போதுமென்று கூறி, ஜகந்நாதனாகிய திருமாலைச் சரணமடைந்து மோட்ச பதவிபெற்ற மகா புருஷர்களின் சரிதங்களையும், அடியார்க் கெளியவனாகிய அத்திருமாலின் குணாதிசயங்களையும் அவருக்குப் புகட்டுவாராயினர்.

இஃது இவ்வாறிருக்க, சிருங்கியிட்ட சாபத்தால்,

தட்டியெழுப்பியது போல், தக்ஷகன் திடீரென்று எழுந்து, பரீக்ஷித்தைக் கடிக்கும் எண்ணங்கொண்டவனாய், வேதியர் வேடம்பூண்டு, அரசனிருந்த இடத்தைநோக்கிப் புறப்பட்டுச் சென்றான்.

வரும் வழியில் காட்டினிடையே ஓர் அந்தணனைக் கண்டு தன்னையறியாது அச்சமுற்று யாரென்று வினவினன். அதற்கவர், "என் பெயர் காசியபன், இந்நாட்டையாளும் நரபதியை இன்று மாலை தக்ஷகன் தீண்டப் போகிறானாம். அவ்விஷத்தை மாற்றி, அரசனைப் பிழைப்பிப்பான்வேண்டி நான் செல்கின்றேன்" என்று பதில் சொன்னார்.

தக்ஷகன் புன்னகையுடன், "நானே தக்ஷகன், மாநாகங்களின் தலைவன் யானென்பதை நீ அறியாய் போலும்! என் விஷத்தை மாற்ற உன்னால் ஆகுமோ? இதோ நிற்கும் இம்மரத்தைக் கடித்து என் வன்மையைக் காட்டுகின்றேன். மரம் மீண்டும் பிழைக்கும்படி நீ செய்வாயானால், இராஜனையும் பிழைப்பிக்கக்கூடும்" என்று சொல்லி, ஆகாயத்தை அளாவி ஓங்கி வளர்ந்து ஆங்குநின்ற ஒரு மரத்தைக் கடித்தான்.

உடனே அம்மரம் எரிந்து சாம்பலாய்ப் போயிற்று. அதைக்கண்ட தக்ஷகன் செருக்குற்று "அந்தண! என் வன்மையைக் கண்டாயல்லவா? எரிந்து போய்விட்ட மரத்தைப் பிழைப்பிக்க உன்னால் கூடுமோ?" என்று கேட்க,

காசியபர் அவனுக்குப் பதிலுரையாது, தம்கையிலிருந்த பாண்டத்திலிருந்து சிறிது நீரை எடுத்து, அச்சாம்பலின் மீது தெளித்தார். உடனே அதில் ஒரு

முளை தோன்றி, இரண்டிலைவிட்டு, செடியாய் வளர்ந்து, முன்போல் ஆகாயத்தை அளாவிய மாமாய்ப் பருத்து ஓங்கி நின்றது.

அதைக்கண்ட தக்ஷகன் தன் கர்வங்குலைந்து, காசியபரைப்பார்த்து, "என் விஷத்தை மாற்றி அரசனைப் பிழைப்பிக்கக் கூடிய சக்தி உமக்குண்டு. ஆனால் ஸாதுக்களுடைய சொல் தவறாது. தவறாமல் செய்ய வேண்டியதும் என் கடமையாகும். ஆகையால் பரீக்ஷித்தை நான் கடித்தே தீரவேண்டும். நீர் என் விஷத்தை மாற்றக் கூடாது. எதை விரும்பி நீர் அரசனுக்கு உபகாரஞ் செய்யச் செல்கின்றீர்?" என்று கேட்டான்.

இவ்வசனங்களைச் செவியிலேற்ற அந்தணர் "பொருளாசையால் செல்லுகின்றேன்" எனலும், விலை மதிக்க முடியாத மணியொன்றை அவர் கையில் ஸர்ப்பராஜன் கொடுத்து, "இதைக் கொண்டுபோய் உமது வறுமையைப் போக்கி, இனிது வாழ்வீர்" என்று சொன்னான். வேதியரும் மகிழ்வுடன், வந்தவழியே திரும்பிப் போனார்.

பின்பு தக்ஷகன் அரசனிருக்கும் இடத்தை யடைந்து அங்குக் காவலாளர் மிகுந்திருப்பதைக் கண்டு, சில நாகர்களை அழைத்து, "நீங்கள் அந்தண வடிவங் கொண்டு பழங்களுடன் சென்று, பார்த்திபனைக்கண்டு, அவற்றைக் கொடுத்து விட்டுத் திரும்பி விடுங்கள்" என்று ஏவ, அவர்களும் அவ்விதமே பொய்யுருவுடன் மண்டபத்துக்குட் சென்று, மன்னவரைக் காணவந்தவர்கள்போல் அவர் கையில் பழங்களைக் கொடுத்தனர்.

பிறகு அரசரால் உபசரிக்கப் பெற்று அவர்கள் திரும்பி விட்டனர். கதிரவனும் கடலிற்குளிக்கும் நோக்கிட்டியது. சிருங்கி குறித்த ஏழாம் நாள் அது வாகையால், அரசன் அப்பழங்களை அங்கிருந்த ஸாதுக் களுக்குக் கொடுத்துத் தாமும் புசிப்பதற்காக ஒன்றை அரிந்தார்.

விதிவசத்தால் அதில் சிறிய புழு ஒன்றிருந்தது. அதைக்கண்ட அம்மன்னன், "ஏழுநாளும் சென்றன. சூரியனும் மறைகின்றான். வேதியருடைய சாபமும் தவறலாயிற்று. நீயேனும் என்னைத் தீண்டு" என்று சொல்லி, அப்புழுவை எடுத்துத் தன் கழுத்தில்இட்டுக் கொண்டார். விதியின் வலியைத் தடுக்க வல்லார் யாவர்?

உடனே அப்புழு பயங்கரமான பெரிய நாகமாக நீண்டு, அவருடைய கழுத்தைச் சுற்றிக்கொண்டு அவரைத் தீண்டியது. அப்பொழுதே அரசர் இறந்து போனார்.

அதைக்கண்ட மற்றவர்கள் அஞ்சி நடுங்கி வெளியே ஓடிப்போய் விட்டனர். அக்கொடிய நாகத்தின் விஷாக் கினியால் அந்த மண்டபம் முழுவதும் வெந்து சாம்ப ராயிற்று.

பிறகு அமைச்சர்களும் ஜனங்களும் கூடி, இறந்த அரசருக்கு உரிய ஈமக் கடன்களைச் செய்வித்தனர்.

இதுவே பரீட்சித் மகாராஜாவின் சரிதம். சத்தியம் தவறாது ஆயுள் முழுமையும் அவர் ஆட்சி செய்தும், ஒரு சிறு பிழையால் மரணமடைய நேர்ந்தது. எவ்வ

ளவு செல்வம் இருந்தும் பாவச் செய்கையால் விளையக் கூடியதைத் தடுக்க முடியாது.

அவரைக் காப்பாற்றக் கூடிய சக்தி வாய்ந்த காசிய பரையும் அப்பாவம் வழிமறித்துத் தடுத்து விட்டது. தவஞ் செய்வதையே மேற்கொண்ட சமீகர் அரசரை மன்னித்தும், தர்மதேவதை மனம் பொறாது, அவருடைய மகனுக்குக் கோபத்தை மூட்டி விட்டு, அரசரைச் சபிக்கும்படி செய்தது. ஆதலால் மறந்தும் பிழை செய்யாதிருக்க வேண்டியதே மனிதர்களின் கடமையாகும்.

துர்வாஸர் சரிதம்

கெடுவான் கேடு நினைப்பான்

பஞ்சபாண்டவர்கள் துரியோதனனுடன் சூதாடி, நாடிழந்து, கானகமடைந்து, பலவேதியர்களுடன் சாஸ்திரவிசாரணை செய்துகொண்டு காலங்கழித்துவந்தனர். அவ்வாறிருக்கும் நாளில், சடைமுடியும், மரவுரியும் முப்புரி நூலுங் கொண்டு, கோபக்குறியே பொருந்திய கண்களும், சபித்தலும் வாழ்த்தலுமுடைய நாவும் படைத்த மாதவராம் துர்வாஸர் என்பவர் பல முனிவர்களுடன் ஒருநாள் பாண்டவரிடஞ் சேர்ந்தார்.

அப்பொழுது நாழிகை பதினைந்திருக்கலாம். தவமுனியின் வரவைக்கண்டுகளித்த தருமபுத்திரர் உடனே எழுந்துசென்று, முனிவரை எதிர்கொண்டழைத்து வந்து, வேண்டிய உபசாரங்களுடன் ஆசனத்திருத்தி, அவரது அடியிணைகளில் பணிந்து நின்றார்.

உடனே, முனிவர் மன்னவனைநோக்கி, "அரசே! பொழுதோ நடுப்பகலாய்விட்டது. நாங்கள் அனைவரும் பசியால் வாடுகின்றோம். ஆதலின், எங்களுக்கு வயிறார நல்லன்னம் அளித்தல்வேண்டும்" என்றியம்பினர்.

மெய்யே விரதமெனக்கொண்ட தருமர் "ஐயா! தாங்கள் இன்று என்னை நாடிவந்தது நாங்கள் செய்த தவப்பேறேயாகும். தாங்கள் விரும்பிய வண்ணமே, அன்ன

மளிக்கச் சித்தமாயிருக்கின்றோம். ஆதலின், சடுதியில் எழுந்தருளி அருகேயிருக்கும் வாவிசென்று நீராடி நித்தியக் கடன்களை முடித்துவருக" என்றுபதிலளித்ததும், துர்வாஸர் அங்ஙனமே மற்ற முனிவர்கள் தம்மைப் பின்பற்றிவர அக்குளக்கரை சேர்ந்தார்.

பின்பு தருமர் பாஞ்சாலியை விளித்து "நாம் எவ்வளவுகாலம் தவமியற்றினும் கிடைக்கப் பெறாத தவ முனிவர், தாமே இன்று நம்மை நாடிவந்தார். ஆகவே, இன்றுமுதல் நமக்கு நற்காலம் பிறந்துவிட்டது. அவர் நீராடித் திரும்புவதற்குள், விருந்தினைத் திட்டப் படுத்துவாய்" என்று கட்டளையிட்டார்.

பாஞ்சாலியோ "அரசே! கதிரவனால் அளிக்கப்பெற்ற அட்சயபாத்திரம் நம்மிடம் இருப்பினும், வேண்டியபடி நல்லுண்டிகளை நடுப்பகல் வரையில்தான் அது கொடுக்கும். ஆதலின் என்செய்வேன்!" என்று ஏங்கினள்.

இம்மொழிகளைச் செவியிலேற்ற காவலர் ஒன்றுந் தோன்றாது தியங்க நேர்ந்தது.

அச்சமயம் பீமன் சொல்வான்:—

'அண்ணா! ஏன்மனக்கவலை! இப்பொழுதே நான் காடுசென்று, கந்தமூலங்கள் கொணர்கின்றேன். முனிவர்களும் அவ்வுணவையே பெரிதும் விரும்புவர். விடைகொடுங்கள். கணப்பொழுதில்திரும்பிவருவேன்' என்றான்.

மல்யுத்தத்தில் மகிமைவாய்ந்த பீமனது வாய்மொழியைக் கேட்ட தருமர் மனமகிழ்ந்தாராயினும், "தம்பி பீமா! நீ சொல்வது மெய்யே! ஆனாலும் அறுசுவையுடன் நல்லுணவு புசிக்கும் நாம், நம்மை வந்தடைந்

தோர்க்குக் காய் கனிகளை வழங்குவது முறையல்ல. காம்புசிக்கும்வண்ணமே அதிதிகளுக்கும்உருசிகொண்ட அன்னமளிப்பதே சாலச்சிறந்தது. இச்சமயம் அட்சய பாத்திரம் நம் கைவசமிருந்தும் பயன்படவில்லை. சிறிது நேரத்திற்கெல்லாம் முனிவரோ தம் கூட்டத்தாருடன் திரும்பி வந்துவிடுவர். அவரது மனங்கோணாது அன்ன மளிக்க நாம் காலதாமதஞ் செய்யின், இன்றோடு நாம் நாசமடைவோம் என்பதற்கு ஐயமில்லை.

" அவரோ கோபத்தில் பேர்படைத்த கொடிய முனி, அவருக்கு வெகுளி தோன்றிவிடுமாயின், உருத்திர மூர்த்தியின் சினத்தைவிடப் பன்மடங்கு அதிகமா யிருக்கும். அவர் கோபத்தினால் நமக்கு விளையக்கூடிய தீங்குகள் ஒருபுறமிருக்க, பசித்துவந்து அன்னமெனக் கேட்டோர்க்கு அவ்வாறே அளிக்கப் பஞ்சபாண்டவர் தவறிப்போயின ரென்றால், அதைவிட நம் குலத்திற்கு இழிவு வேறென்ன வேண்டும் ?

" தற்சமயம் முனிவர் நம்மை நாடியடைந்தது யாவ ருடைய சூழ்ச்சியோ ? அறிகிலேன் !" என்று கவலை கொண்டனர்.

அச்சமயம், அறிவிற்சிறந்த சகதேவன் தருமாது பாதம்பணிந்து கூறுவான் :—

" தந்தையை நிகர்க்கும் தமயனே ! துர்வாஸர் வேளை தப்பிய வேளையில் நம்மிடம் வந்து உணவளிக்க விரும் பியதை உற்றுநோக்கின், நமது பகைவரின் தூண்டுத லால், அவர் இவ்வாறு வந்தனரென்றே சொல்லவேண் டும். நிற்க,

" அவரை நீராடிவரச்சொல்லி அனுப்பிவிட்டு, நாம்

வாளாவிருத்தல் அறிவுமன்று, அழகுமன்று. தாங்களோ உண்மையே உறுதியெனக் கொண்டு ஈசனையே நம்பியிருக்கின்றீர். இச்சமயம் நாம் திக்கற்றவர்களாயினேம். அகதிக்குத் தெய்வமே துணை. ஆதலால், எப்பொழுதும் நமக்கு நன்மை புரிவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கும் கண்ணபிரானே நம்மை இப்பொழுது காக்கக்கடவன். அவனையன்றி வேறு துணை நமக்கு ஒருவருமில்லை.

"மேலும், 'என்னுடைய அன்பர் எவ்விடத்தில் என்னை எப்போது நினைத்தாலும், அப்போதே நான் அவ்விடம் விரைந்து சென்று அவர்களுக்கு அருள் புரிவேன்' என அப்பரமன் பகர்ந்திருப்பதைத் தாங்கள் மறந்து விட்டீர்களோ? மறந்திருக்கக் காரணமில்லையே! ஆதலின், நாமனைவரும் அவ்வுத்தமனை நினைப்பின், தற்காலம் நமக்கு நேர்ந்துள்ள கவலை கதிரவனைக் கண்ட பனிபோல் நீங்கிவிடும்."

இவ்வாறு இளைஞன் உரைத்ததைக் கேட்ட தருமர் அகமகிழ்ந்து, அவனை மார்புறத்தழுவி, ஒருவாறு கவலை நீங்கி, திருமகள் மார்பனைத் தியானித்தகாலையில்,

"அஞ்சேல்! அஞ்சேல்! உங்கள் ஆபத்தைப் போக்க வந்தேன் வந்தேன்" என்று சொல்லிக் கொண்டே கண்ணபிரான் பாண்டவர்களின் முன்பு தோன்றினர்.

உடனே அப்பரமன் பாஞ்சாலியை நோக்கிப் "பூங்கொடியே! தினகரன் அளித்த பாண்டத்தில் ஏதேனும் ஒன்றிரண்டு அன்னமுளதோ பார்" என்று வினவ, அப்பெண்மணியும் அங்ஙனமே சென்று அட்சயபாத்திரத்தைப் பார்த்த வளவில், ஒரு பருக்கை

ஒட்டிக்கொண்டிருப்பதை யெடுத்துக்கொண்டு ஓடி வந்து, அதனை அப்பரமன் கையிலிட்டனள்.

தேவர் தேவனாகிய திருமால் அந்தப் பருக்கையை வாங்கித் தம் வாயிலிட்டதும், தடாகத்திற்குச் சென்றிருந்த துறவிகள் பலரும் தெவிட்டாத தேவாமுதம் உண்டதுபோல் பசியாறித் திருப்தி யடைந்தனர்.

திடீரென வயிறும், வாயும் உள்ளமும் வடிவும் குளிர்ந்ததைக் கண்ட திசயித்த மாமுனிவர் பலரும் வாவியைவிட்டுச் சடுதியில் திரும்பிவந்து பஞ்சபாண்டவர் இருக்குமிடஞ் சேர்ந்தனர்.

சேர்ந்ததும், பாண்டவரில் மூத்தோனை நோக்கி,

"அரசே! தேவர்களுக்கும் கிடைக்கப்பெறாத நல்லுண்டியை இன்று உன்னருளால் பெற்றோம். அதுவுமன்றி, கோடானு கோடிகாலம் தவம்புரிந்தும் காணப்பெறாத கண்ணனையும் கண்களால் இன்று காணப்பெற்றோம். இனி எங்களுக்கு வேண்டுவது முண்டோ? இல்லை! ஆதலின் நீயும் உன் உறவினரும் சுகமே வாழ்ந்து வருக," என்று எல்லா முனிவர்களும் பாண்டவர்களை ஆசீர்வதித்தனர்.

உலகத்தையும் உலகத்திலுள்ள ஸகல சராசரங்களையும் படைத்துக் காத்துவரும் அமலநாதனது அருளால் கிட்டாத காரியம் யாதுளது?

சிறிது நேரத்திற்கு முன் முனிவர்களுக்கு அமுதளிக்க வகை காணாது 'அந்தோ! முனிவரின் சாபத்தால் நாசமடைய நேரிடுமே! என் செய்வோம்' என்றேங்கியிருந்த பஞ்சபாண்டவர்கள் அளவிலா ஆனந்தமடைந்தனரென்பது வெளிப்படை.

நிற்க, துர்வாஸமுனிவர் பாண்டவர்களை நோக்கிப் பகர்வார் :—

"மதி குலதிலகமே! நேற்று நான் துரியோதனனது அவைக்களமடைந்தேன். அக்காலை அக்காவலன் முப்பழமொடு பாலன்னம் பரிவுடனளித்தனன். நாங்களும் பசிதீர்த்து களிப்பெய்தினோம். அச்சமயம் அக்கொடியோனை நோக்கி, யாது வரம் விரும்புகின்றனை என்று கேட்க,

'தவத்தூய்மை வாய்ந்த துறவியே! தாங்கள் என்பாலடைந்து போஜனம் அருந்தியதுபோல், எனது சகோதரர்களாகிய பாண்டவரிடமும் சென்று, நாங்களிட்ட விருந்தின் ஏற்றத்திற்குக் குறையாது அவர்களிடம் நல் விருந்து பெற்று வரவேண்டும்!' என்றுரைத்தான்.

"அச்சமயம் அவன் சிந்தையில் குடிகொண்டிருந்த குரோதத்தை அறிந்திலோம். ஆயினும் அவன் கொண்டிருந்த துர்ப்புத்தி இப்பொழுது வெளியாகின்றது. அஃதென்னவெனில்,

"நாட்டைத் துறந்து காட்டையடைந்து வேளாவேளைகளில் வேண்டிய அன்னம் கிடைக்கப்பெறாத நீங்கள், என்னை ஏற்றபடி வரவேற்று உபசரிக்க முடியாது விழிப்பீர்கள்; கோபமே குடிகொண்ட நான் உடனே உங்களைச் சபித்துவிடுவேன் என்பதே அத்தீயோன் சிந்தையில் தங்கியிருந்த எண்ணம்.

"ஏற்றந்தன்னில் வேறொருவர் இப்பேருலகில் இலரென்னும் தோற்றம் படைத்துப் பொய்யே மலர்ந்த திருமுகத்தோனாகிய துரியோதனனது சூழ்ச்சியை

அறிந்தேன்! அறிந்தேன்! பாண்டு மைந்த! உங்களிற் சிறந்தோர் எவரேனும் உளரோ இப்பூவுலகில்?

"உம்பருக்கும் கிட்டப்பெறாத இன்னமுதை உங்களருளால் உண்டதனாலும், மறைகளும் கண்டறிய முடியாத மலர்மகளின் மகிழ்நனைக் காணப்பெற்றமையாலும், நீங்கள் சிறிது காலத்திற்குள் அரசைப் பெற்று இன்பமுடன் வாழ்வீர்; உங்களுக்கு என் மூலமாய் ஆபத்தைத் தேடிய அப்பாதகனும் அவனது உறவினரும் ஈராண்டில் மாண்டுபோக இட்டேன் சாபம்! என் மொழி பழுதுபடாது. இது நிற்க, நீங்கள் வேண்டும் வரம் யாது? அவ்வாறே அளிக்கக் காத்துளேன்" என்றார்.

தவமுனியின் வாய்மொழியைக் கேட்ட பாண்டுவின் மூத்த புதல்வர் உடனே அம்முனிவரது கமலவடிகளில் வீழ்ந்து, "முனிவர் திலக! நான் விரும்பும்வரம் யாதெனில் இனி எக்காலத்தும் தாங்கள் பிறர்மீது அருள் புரிந்து வாழ்த்த வேண்டுமேயல்லாது, கோபங்கொண்டு சபித்தலாகா தென்பதே! தாங்கள் முன்பே கூறியுள்ள ஆசிகளால் நாங்கள் அகமகிழ்ந்தோம். எக்காலத்தும் தங்கள் கருணை எவ்வுயிர்களிடத்தும் குடிகொண்டிருக்க வேண்டும்."

என்று வணக்கமாய்ப் பதிலளித்தனர். துர்வாஸரும் அவ்வாறே யாகுக என்று அவர்களுக்கு ஆசி கூறி, முகுந்தனிடம் விடைபெற்றுக் கானகமேகினர்.

முனிவரிட்ட சாபத்தின் வண்ணமே, துரியோதனாதியர் இரண்டு வருஷங்களுக்குள் மடிந்துபோயின

ரென்பதை அனைவரும் நன்கறிவர். ஆதலின், எக்காலத்தும் பிறர்க்குத் தீமை புரிய மனத்தாலும் சிந்தியாதிருப்பதே சாலச் சிறந்தது.

உயர்பதம்பெற்ற புறாக்களின் சரிதம்

அபகாரத்திற்கு உபகாரமே புரிந்த மேன்மை

நம் பரதகண்டத்தின் நடுப்பாகத்தில் விந்தம் என்றொரு மலையுண்டு. அக்கிரியின் சாரலில் விண்ணுற வோங்கி மண்ணுற விழுதுவிட்டுத் தழைத்த ஆல மரம் ஒன்று இருந்தது. அதில் ஆணும்பெண்ணுமாய் இரண்டு புறாக்கள் வசித்துவந்தன. பூவும் அதன் மணமும் போல் அவ்விரு புறாக்களும் ஒன்றைவிட்டு ஒன்றுபிரியாது, ஒற்றுமையுடன் வாழ்ந்துவருகையில் ஒருநாள் தன் பேடைக்கு இரைதேடிவர ஆண்புறா வெளிச்சென்றது.

இது இவ்வாறிருக்க, அவ்வனத்திலுள்ள விலங்குகளையும் பறவைகளையும் தினந்தோறும் கொன்று குவிக்கும் வேடவனொருவன், அன்று காலையிலேயே கானகமடைந்து, பகற்பொழுது வரையில் சுற்றிப்பார்த்தும் ஒரு ஜந்துவேனும் அவன் கண்ணிற் படவில்லை.

ஆதலின், தெய்வமே இனி யென்செய்வேன் என்றேங்கிய அவன், முடிவில் அம்மரத்தையடைந்து சற்றே இளைப்பாற அதன்கீழ் உட்கார்ந்தான். பின்பு அவன் ஒருவாறு களைதீர்ந்து ஆகாயத்தை நிமிர்ந்து

பார்க்கையில், ஆண்புருவின் வரவை ஆவலுடன் எதிர் பார்த்திருக்கும் பெண்புறுவைக் கண்டனன். கண்டதும் பரமானந்தமடைந்து, தன் வலையை எடுத்து விரித்து, தானியமணிகளை இறைத்து, ஒரு மூலையில் பதுங்கியிருந்தான்.

அச்சமயம், நிரம்பிய பசியுடனிருந்த பெண் புறுவிருந்த ஆவலுடன் அவைகளைப் பொறுக்கித்தின்ன மரத்தினின்று இறங்கிவந்தது. இரங்கியதுதான் தாமதம்! அம்மணிகளிலொன்றை அலகினால் கொத்தியதும், வலையிற் சிக்குண்டு விழிக்க நேர்ந்துவிட்டது.

அதைக்கண்ணுற்ற வேடன், இனியும் பறவைகள் பல வந்து வலையிற் படுமென நினைத்து, அவ்விடத்திலேயே மறைந்திருந்தான். உடனே வானில் மேகங் குவிந்து, இடியும் மின்னலுமாய் மழைபொழியத் தலைப் பட்டது.

ஆதலின், வலையிலகப்பட்டுழலும் புறுவைத் தன் பைதனில் அடக்கிக்கொண்டு மாரியின் மிகுதிக்கு அஞ்சி, அவ் வடவிருட்சத்தின் ஒரு மூலையிலேயே ஒதுங்கியிருந்தான். காற்றும் மழையும் கலந்தடித்து, சாரலும் ஜில்லென்று வீசியதனால், ஆடையின்றி இருந்தவேடன் கையுங்காலும் விரைத்து, உயிரற்ற உடல்போல் சோர்ந்து கிடக்க நேர்ந்தது. நன்மை செய்வார் நலம்பெறுவர், தீமைசெய்வார் தீமை பற்றி நலிவர் என்னும் பழமொழி பொய்க்காதல்லவா?

ஆகாரத்துடன் திரும்பிவந்த ஆண்புறு தன்பேடையைக் காணாது பெரிதும் பிரலாபித்து, இங்கு மங்கும் ஓடிப் பார்த்தது. ஆயினுமென்ன? தன்

நாயகியைக் காணவில்லை. ஆகவே, பெருமூச்செறிந்து, சிறிதுநேரம் வரையில் அசைவற்றுச் சுருண்டு கிடந்தது. வேடுவன் பையில் சிக்குண்டு ஏங்கியிருந்த பெண் புறுவோ தன்னைக் குறித்து ஆண் புறு அலறுவதையும், சோர்ந்து கிடப்பதையும் கண்டு, அடங்காத் துயரங்கொண்டு, தன்நாயகனை நோக்கிச்சொல்லும் :—

"என்னரசே! இச்சமயம் நானே வேடன் கையில் அகப்பட்டுக் கொண்டேன். என்னைப்பற்றி நீங்கள் வருந்துவதனால் பயனில்லை. வருந்தின், மெய்வருத்தம் ஒன்றைத்தவிர வேறெதுவும் கிட்டாது. வினைப்பயனை வெல்வதற்கு யாராலாகும்? நாமோ விதியின் வசத்தால் பிரிய நேர்ந்துவிட்டது. ஆதலின், இனி நடக்கவேண்டிய காரியங்களைச் சிந்திப்பதே கற்றோரின் ஒழுங்காகும்."

இவ்வாறு பெண்புறு விளம்பியதைக் கேட்டதும், பழையதனம் மீண்டும் கிடைக்கப் பெற்றவரைப் போல், ஆண் புறு அகங்களித்து, "என் அன்பே! பாதகனாகிய வேடன் கையிலிருந்து தப்பும் மார்க்கம் என்ன?" என்று ஆவலுடன் வினவியது.

உடனே அப்பேடை தன் பதியை நோக்கிக் கூறியதாவது :—

"இனி நீங்கள் என்னுறவைத் துறவெனக்கொள்வதே தகுதியாகும். ஏனெனில் வேடன் கையிலிருந்து உய்யும் வகையை நான் அறியேன். நிற்க,

"வனசரனோ வாடையினால் வாடி, உடல் மெலிந்து, உள்ளந் தளர்ந்து, உணர்வற்றுக் கிடக்கின்றான். அவன் ஓய்ந்து கிடப்பதைக் காணின், மாய்ந்து விட்டான்

என்றே சொல்லவேண்டும். மேலும் அவன் பசிப்பிணி யினால் மிகவும் வாடியிருக்கின்றான். அல்லாமலும், தன் பசிநோயைப் போக்கிக் கொள்வதற்கென்றே அவன் நமது இல்லமடைந்தான். ஆதலின், அவன் நமக்கு விருந்தாளியாயினன்! நாம் அவனது பெரும் பசியை நீக்காது போயின், படுநரகிற்கு ஆளாவோம். அதிதியின் ஆயாசத்தைக் களைந்து, அன்புடன் அன்ன மளிப்பின், நற்பதவி பெறலாம்.

" ஆதலின் இக்கணமே தாங்கள் எங்கேனும் சென்று தீக்கொணர்ந்து, விருந்தாளியின் குளிரைப் போக்க வேண்டும். பின்னர், அவன் எண்ணியவண்ணம், நாம் அவனுக்கு இரையாவதே சிறந்தது. இனி,

" ஆறிலும் சாவு நூறிலும் சாவு. ஆகவே, நாம் என் றைக்காயினும் ஒருநாள் இறந்தே தீரவேண்டும். இள மை, யாக்கை இரண்டும் நில்லா, வளவிய வான் பெருஞ் செல்வமும் நில்லாது. மிக்க அறமே விழுத்துணையாகும் என்பது முன்னோர் மொழிந்த முதுமொழி யாதலின், அவரவர் செய்த பாவபுண்ணியம் ஆகிய இரண்டுமே உடன்வந்து பயனை ஊட்டுவிக்கும். கூற்றுவன் ஆவியைக் கொண்டு ஓடும்பொழுது, காதற்ற ஊசியும் உடன்வரா தென்பது திண்ணம். இத்தகைய ஆன்றோர் அமுத மொழிகளைத் தாங்கள் அறியீரோ? நுண்ணறிவுடை யோர் நூலொடு பழகினும், பெண்ணறிவென்பது பெரும்பேத மைத்தாதலின், எதுவுமறியாத யான், எல்லாமறிந்த தங்களுக்கு, இவ்வளவு தூரம் பெண் புத்திகொண்டு எடுத்துரைத்தேன். எனினும், என்

வார்த்தைகளின் பயன்களைக் கவனித்து, என் வேண்டு கோளை நிறைவேற்றவேண்டும்."

இவ்வண்ணம் பெண் புறா போதித்த வசனங்களை மனத்திலேற்றுக்கொண்ட ஆண் புறா, அக்கணமே அதி விரைவுடன் பறந்து சென்று, கானகத்தே கொழுந்து விட்டெரிந்துகொண்டிருந்த கனலிலிருந்து ஒரு சிறிய கொள்ளிக் கட்டையை மூக்கினால் கொத்திக்கொணர்ந்து, அதை வேடன் முன்னேயிட்டு, அங்குச் சிந்திக் கிடந்த சிறிய குச்சிகளைச் சேகரித்து, இறகை வீசித் தீமூட்டி வேடனது குளிர்நடுக்கத்தை யகற்றிச் சூடுண்டு பண்ணியது.

சூடுண்டுபண்ணவே, அவன் குளிர்நீங்கி யெழுந்ததும் அப்புறா அந்தரத்தே கிளம்பி, அதிக விசையுடன் பறந்துவந்து, அத்தீயிலேயே வீழ்ந்து, வேடனுக்கு இரையாயது.

வேடனோ அவ்வற்பப் பறவையின் உதார குணத்தையும் அறிவையும் கண்டு அதிசயித்தானாயினும், ஆண் புறா மாண்டதைக்குறித்து ஒருபுறம் வருந்தி, பசிப்பிணியினால் மற்றொரு புறம்வாடி, என்செய்வதென்றேங்கி யிருந்தான். எனினும், பசிவந்திடப் பத்தும் பறந்து போமாகையால், வெந்துகிடக்கும் புறாவைத் தின்று பசி தணிந்தான் அப்பாதகன்.

பின்பு நல்லோர் உணவு நாவினில் கிடைக்கப்பெற்ற வேடன் சிந்திப்பானாயினன்.

"அந்தோ! யான் மனிதப்பிறவி யெடுத்திருந்தும் பகுத்தறிவின்மையால் விலங்கிற்குச் சமானமாயினேன். இப்புறாவோ புன்பறவையாயிருந்தும், அறிவு நிரம்பிய

காரணத்தால், என்னினும் மேம்பட்டதாய்விட்டது. என் பைதனிற் கட்டுண்டு பரிதபிக்கும் பெண் புறாவின் சோகத்தையும் ஆண் புறா ஒரு பொருட்டாக மதியாமல், பசியினால் வாடிக்கிடக்கும் என் ஆவியைக் காக்கக் கருதி, காடு சென்று, நெருப்பைக் கொணர்ந்து, தீ மூட்டி என்னைத் தெளியவைத்த பின்னர், தன்னையே ஆகாரமாக எனக்கு வழங்கியது! ஆதலின் இப்புறாவினும் நான் கடையனாயினேன். இனி, இதன் பேடையைப் பையிலிருந்து எடுத்து வெளிவிடுதலே சிறந்தது.''

இவ்வாறு, பெரிதும் வருந்திய வேடன் உடனே பெண் புறாவை எடுத்து விட்டுவிட்டான். நல்ல வேளையாய் நமனிடமிருந்து தப்பினோம் என்றெண்ணி அப்புறா தன்னிஷ்டப்படி எங்கேனுஞ் சென்றதோ! இல்லை! ஆனால் அப்பெண் புறாவோ,

"இது காறும் நாம் இல்லறமே நல்லறமெனக் கொண்டு கணவனுடன் சுகித்திருந்தோம். பசியினால் மெலிந்திருந்த வனசரனுக்கு நம் கணவர் ஆகாரமாக உயிரைக் கொடுத்தார். நாதன் பிரிந்தபொழுதே நமது நாதமும் போயினது.

"மணாளன் மடிந்தபொழுது வாழ்வும் மடிந்தது: பர்த்தாவுக்கு ஏற்ற பதிவிரதையாயின், கணவன் செய்த வண்ணமே, நாமும் வேடனுக்கு விருந்தாதலே மேன்மையாகும். புருஷனங்கும் பெண் இங்குமாக இருத்தல் பொருந்தாது!

"மேலும், கொண்டானிற் சிறந்த தெய்வமுளதோ? இல்லை! ஆதலின் புருஷனுடைய அருகிலேயே இருந்து வாழ்வது கற்புடைய மங்கையரின் கடமை.

எனவே நாமும் நம் கணவன் சென்ற வழியைப் பின் பற்றிச்செல்வதே உத்தமம்."

என்று தீர்மானித்து, ஆகாயத்தே கிளம்பி, ஆண் புறு வீழ்ந்திறந்த நெருப்பில் தானும் விழுந்து, ஆவியை மடித்துக்கொண்டது.

அக்கணமே வானத்தினின்று துந்துமி முழங்கிப் பூமாரியும் பொன்மாரியும் பொழிய, அவற்றின் நடுவே அவ்விரு புறுக்களும் திவ்விய தேகம்பெற்று, தெய்வீக விமானத்தில் தேவர்கள் வாழ்த்தெடுப்பப் பரமனது பாதபங்கயஞ் சேர்ந்தன.

புறுக்கள் எய்திய பெரும்பேற்றைக் கண்ணாரக் கண்ட வேடன், "ஐயகோ! புத்தியீனத்தால் மாபாதகம் புரிந்து படுநரகு எய்தவும் நமக்கு விதி நேர்ந்துவிட்டதே! தெய்வமே! யாது செய்வேன்! இனி யான் இருந்தென்ன! இறந்தென்ன?"

"எள்ளளவும் பாவத்திற்குப் பயப்படாது, கொலைத் தொழிலையே மேற்கொண்டு, பாழும் வயிற்றை வளர்த்து வந்த பாவியேனுக்கு நற்கதி கிட்டுவதெப்படி? முத்தியளிக்கும் பதியாம் காசிக்குச் செல்லினும் இக்கருமந் தொலையாதே!"

"ஆயினும், நல்லோரைக் காணினும், அவர் குணங்களைப் புகழ்ந்து பேசினும், அவர் புத்திமதிகளைக் கேட்டு நடப்பினும், அவரோடு இணங்கி இருப்பினும் நற்கதி சேரலாமென்பது வேதமொழி யல்லவா? ஆகவே, அத்தகைய நல்லோரையே பாழ் வயிற்றிலகப் படுத்திக்கொண்ட எனக்கு நற்பேறு கிட்டாதா?"

என்று பலவாறு நினைத்து, உள்ளமுருகி, ஏங்கியே

ங்கி, நெஞ்சம் புண்ணாகி, அங்கே கொழுந்து விட்டெரியும் காட்டுத்தீயில் தானும் வீழ்ந்து ஆவியை மடித்துக் கொண்டான்.

தட்சணமே, வேடனும் உயர்பதவியடைந்து கடைத்தேறினன். என்றால், முகமும் அகமும் ஒருங்கே மலர்ந்து, வந்த விருந்தினரை வைகலும் உபசரித்து வாழின், யாவரும் எய்தற்கரிய பெறும்பேறு பெற்று இன்பமுடன் வாழ்ந்திருக்கத் தடையில்லை!

புறக்களோ பகுத்தறிவில்லாத பிறவி யெடுத்திருந்தும், தம்மைப் பிரித்து உண்ணவந்த வேடனை விருந்தினனாகப் பாவித்து ஆவியை அளித்து, அவன் பசிப்பிணியைப் போக்கி, இமையவரும் எய்தற்கரிய பரமபதம் பெற்றனவென்றால், மனிதராகிய நாம் எவ்வாறு நடந்து உய்யலாமென்பதை நமது நண்பர்களே அறிந்து கொள்ளக் கடவர்.

கல்வியிற் பெரிய கவிச் சக்கரவர்த்தியாம் கம்பரும் "பேடையைப் பிடித்துத் தன்னைப் பிடிக்கவந்தடைந்த பேதை, வேடனுக்குதவிசெய்து விறகிடை வெந்தீமூட்டிப், பாடுறி பசியை நோக்கித் தன்னுடல் கொடுத்த பைம்புள், வீடு பெற்றுயர்ந்த வார்த்தை வேதத்தின் விழுமிதன்றோ"

என்று கூறியிருப்பதை இங்கு எடுத்துரைப்பது முற்றிலும் பொருந்தும்.

கிரிப்பிள்ளையின் கதை

விருந்தின் சிறப்பு

முற்காலத்திலே, பொதிய மலையினருகிலுள்ள விந்தம் என்னும் நன்னாட்டில் விபுலர் என்ற வேதியரொருவர் நல்லறந் தவறாது இல்லறம் நடத்தி வந்தார். அவர் மனைவி மங்காளம்பிகை, தன் கணவனது குறிப்பறிந் தொழுகும் நற்குணம் நிறைந்தவள். அவர்களுக்கு ஒரே புதல்வனிருந்தான். அவன் பெயர் குணசீலன்.

அக்குமாரனும் அவனில்லாளாம் ஜானகியும் அம்முது குரவரிருவரையும் காணக்கிடைத்த கடவுளர் போல நினைத்து அன்புடனும் அச்சத்துடனும் தாய் தந்தைகளுக்குரிய பணிவிடைகளை நிறைவேற்றி வந்தனர். அந் நால்வரும் ஒரு மனதாயிருந்ததால், இல்லறம் சிறப்புற்று விளங்கியது.

அவ்வாறிருக்குநாளில், மழை பெய்யாது புல், பூண்டு, பயிர், செடி, கொடி, மரம் முதலிய யாவும் கரிந்து போயின. பச்சைத் தழையைப் பார்ப்பதரிதாயிற்று. காய்கனிகள் கிடைத்தில. ஆறு குளங்கள் வறண்டு போயின. மழையின்றி மாநிலத்தார்க்கில்லை யாதலின் மக்களும் விலங்கும் பசிப்பிணியாற்றாது உயிர் நீத்தன. தானமுந் தவமும் பறந்துபோயின. காடுகளிலுள்ள கிழங்குகளுக்காக நிலத்தை ஜனங்கள் தோண்டினமையின் காடுகளெல்லாம் குழிகளாய் விட்டன.

இவ்வாறு பஞ்சம் வாட்டிய காலத்தும், அவ்வந்தணரும் அவர் மனையிலுள்ளாரும் "எதுவும் ஈசன் செயல்" என்றும், "அவனன்றி ஓரணுவு மசையாது" என்றும், உறுதி கொண்டு, நன்னெறி தவறாது, காயோகிழங்கோ கிடைத்ததைக் கொண்டு, கால் வயிறோ அரை வயிறோ உண்டு, உடல் மெலிந்தனராயினும் மனஞ்சலியாது வாழ்ந்து வந்தனர்.

ஒருநாள் அவர்கள் உணவு தேடிச் செல்லுங்கால், கழனியொன்றில் பால்போன்ற வெண்ணிறமான நெல்மணிகள் கிடக்கக் கண்டு, கடவுளை வாழ்த்தி நால்வரும் அம்மணிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கி வீடுகொணர்ந்து, குத்தி அரிசியாக்கி வருத்து மாவாக அறைத்தனர். பிறகு தம் அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, அம்மாவை நான்கு கூறாகச் செய்து உண்ணவிருக்குங்கால், தவக்கோலத்துடன் முனிவர் ஒருவர் தோன்றி, "மிகுந்த பசிப்பிணியால் வருந்துகின்றேன்" என்றனர்.

அவரைக்கண்ட அந்தணர் அகமகிழ்ந்து முகமலர்ந்து இனிய மொழிகளைச் சொல்லி, அவரடிகளை நீரால் கழுவி, அந்நீரைத் தம் தலைமீதும் தம்மகத்துளார் தலைமீதும் தெளித்து, அவரை ஆசனத் திருத்தி, தம் பங்கு மாவைக் கொணர்ந்து, அவர் முன் வைத்து,

"ஐய! தாம் வரப்பெற்றது எம் தவப்பயனேயாம். அறுசுவைவுண்டி யளித்து நும்பசியைத் தீர்க்க நான் பேறு பெற்றிலேன். ஆயினும் மாவொன்றே யுளது. இதனை யுண்டருள் வீராக" என்று சொல்லிவேண்டினர்.

முனிவர் அதனையுண்டு, சிறிதும் பசி தணியாராகி வேதியரை விளித்து, "நாடெல்லாம் வருத்தும் இக்

காலத்தில் என் பசிக்குதவிய இந்த மா அமுதுபோல என்னுயிரைக் காப்பாற்றியது. ஆயினும் நான் புசித்து வெகு நாளாயினமையின், பசி தணியவில்லை. இன்னஞ் சிறிது மா தருவீராயின், இக்கொடிய பசியினின்று தப்புவேன்" என்றனர்.

அதுகேட்ட அந்தணர் விருந்தினர்க்கு வயிறாரப் படைக்கத் தமக்கு சக்தியில்லாதது நினைத்து வருந்தி நிற்க, அவர் மனைவி அவரை யழைத்து, "என் பங்கு மாவையும் முனிவர்க்கீந்து, தர்மந் தழைக்கச் செய்யுங்கள்" என்று வேண்டினள்.

அதற்கு வேதியர், "நீ புசித்தும் நெடுநாட்சென்றன. மனைவியைக் காப்பதும் கடனென்று நூல்கள் கூறும். விருந்தினர் வருந்தப் பார்ப்பதினும் பாவம் வேறில்லை. யான் என்செய்வேன்" என்று சொல்லி வருந்தியதைக் கண்ட அவர் மனைவி சொல்வாளாயினள் :—

"குலமகட்குக் கொழுநனே தெய்வமென்பதை நான் மறந்தேனில்லை. நீங்கள் பசித்திருக்க யான் உண்ணத் தகுமோ? உங்களுடைய விரதம் என் விரதமல்லவோ? விருந்தினர் வாடியிருப்பதைப்பொறுது, நீங்கள்நொந்து நிற்கையில், நான் வயிறாரவுண்டு உடலை வளர்க்க அற நூல் கூறியுளதோ? என்பங்கு மாவையும் முனிவர்க்கீந்து, அவர் பசியைத் தணித்து, தர்மந்தவறாது செய்யுங்கள்."

இவ்வாறு அவ்வுத்தமியுரைத்த சொற்களைக் கேட்ட அந்தணர் தம் மனைவியின் உறுதியை உணர்ந்து களிப்பெய்தி, அவள்பங்கு மாவையும் அன்புடன் முனிவர்க்குப் படைத்தனர்.

அதை அம்முனிவருண்டும் பசியொழியாது வருந்துவதை முகக்குறியாலறிந்த அவ்வேதியர் புதல்வன், தந்தையை வணங்கி,

"ஐய, இன்றே நம் வாழ்வு பெருமிதமடைந்தது! ஸகல ஸம்பத்தும் நிறைவுற்றிருக்குங்கால் விருந்தினர்க்களித்தலினும், வறுமையால் வாடும்போது அளித்தலே சிறப்புடைத்து! இக்கொடிய பஞ்சம் நீங்கி நாம் வயிறாரப் புசித்திருக்கக் கூடும். ஆயினும் இப்பெரியாரைப் போன்ற விருந்தினரை அடைதலரிது. தன்னுடுசெல்வது வேண்டின் அறஞ்செய்க, என்றே நூல்கள் கூறும். "ஆதலின், என்பங்கு மாவையும் அவருக்கு அளித்து அறநெறிவழுவாது நில்லுங்கள்" என்று சொல்லினன்.

புதல்வன் பசித்திருக்கப் பொறாராயினும், விருந்தினர்க்குணவு கொடுத்தலினும், சிறந்தது வேறொன்றுமில்லை யென்றறிந்த அந்தவேதியர் தம் மகனை வாழ்த்தி, அவன் பங்கு மாவையும் அதிதிக்கு ஈந்தனர். அவர் அதனையுமுண்டு அரைவயிறு கூட நிரம்பவில்லை யென்று ஏங்கியிருந்தார்.

அப்பொழுது அப்புதல்வனுடைய மனையாள், வேதியரின் அடிபணிந்து, "ஐய! நம்முடைய புண்ணியமே இந்த விருந்தினராக வந்திருக்கின்றதுபோலும்! என் பங்கு மாவையும் அவருக்கு உதவி, அவரைத் திருப்தி செய்வித்து, இக்கலியினையில் எனக்கும் பங்கு கிடைக்குமாறு செய்யுங்கள்" என்று வேண்டினள்.

தம் மருமகள் பசித்திருப்பதைப் பார்க்க அம்மறையவர் விரும்பாராயினும், அவள் கேட்கவில்லை. "மீதியுள்ள மாவை மாதவர்க்கீந்து விரதத்தைக் காத்

துக்கொள்ளுங்கள். இல்லையேல் நீங்கள் மூவரும் உண்ணுதிருக்கையில் என் வயிறு பெரிதென்று நான் அதனை யருந்தமாட்டேன்"

என்று அவள் ஒரேசொல்லாகச் சொல்லி விட்டதைக்கேட்ட அந்தணர், அவளுக்கு ஆசிகூறி, மாவையெடுத்து மனம் பூரித்து, விருந்தினர்க் கிட்டனர். அவரும் அதைப் புசித்து முகமலர்ந்தார். உடனே நால்வரும் களிகூர்ந்தனர்.

அப்பொழுது ஆகாயத்திலிருந்து பூமாரிபொழிந்தது. தேவர்கள் அறந்தழைத்ததென ஆசிகூறினர். கந்தருவர் பாடினர். விருந்தாய் வந்தவர் வேதியரைப் பார்த்து,

"நான் அறக்கடவுள். உங்களது பெருமையை உலகிற்குக் காட்ட இவ்வாறு வந்தேன். துன்பத்தை மதியாது, தர்மமொன்றையே உறுதியெனக் கொண்ட உங்களை விண்ணுலகிற் கழைத்துச்செல்ல, தேவர்கள் வந்திருக்கின்றனர்"

என்று சொல்லியதும், அவர்களைத் தேவர்கள் ஒரு விமானத்திலேற்றிச் சென்றனர். "மேற் கூறிய இவ்வதிசயத்தை நான் கண்களாற் கண்டேன். அந்த மாவில் ஒருதுகள் காற்றினுல் எனதுடம்பின் வலப்பக்கத்தில் பட, அப்பக்கமெல்லாம் பொன்னிறம் பெற்றது. ஆகவே விருந்தோம்பல் இவ்வாறு மேன்மையுடைத்து" என்று யுதிஷ்திர மகாராஜனுடைய அசுவமேதயாக மகாமண்டபத்தில் கூடி யிருந்த பெரியவர்களைப் பார்த்து அங்குத் தோன்றின கீரிப்பிள்ளை சொல்லிவிட்டு, மறைந்து போயிற்று.

அமரரும் போற்றும் அரிச்சந்திரன்

சத்திய விஜயம்

பூமகளின் திலகம்போல் விளங்கி வந்த கோசல நாட்டில் அரிச்சந்திரன் என்னும் அரசன் அரசுசெலுத்தி வந்தான். அயோத்தி யென்னும் அணிநகர் அவனுக்கு அரசிருக்கையாக விளங்கியது. தனது குடிஜனங்களுக்கு எவ்விதமான குறைவுமின்றி, மனுநெறியின் வண்ணம் அம்மன்னவன் செங்கோல் செலுத்தி வருநாளில் ஒருநாள், தூதுவர் விரைந்துவந்து, அரசனது கைம்மலரில் திருமுகமொன்றையிட்டனர்.

அத்திருமுகத்தை இறைவன் வாங்கிப் பார்க்கவே, "கன்னமாபுரிக்குக் காவலனான மதிதய மன்னவன் புதல்வியாம் சந்திரமதி சுயம்வரம் கொள்ள நிச்சயித்தனள் ஆதலின், அரசிளஞ் செல்வர் அனைவரும் மனமுவந்து வருக" என அதில் வரையப் பட்டிருந்தது.

ஆகவே, அரிச்சந்திரன் தன்னை ஆடையணிகளால் அலங்கரித்துக்கொண்டு, அந்நகர்க்குப் பயணமாயினான். அதுபோலவே, மற்ற நாட்டுவேந்தரும் அக் கன்னமாபுரியை அடைந்தனர். பின்பு, முகூர்த்தகாலத்தில் அரசிளங்குமரர் பலரும் சுயம்வர மண்டபஞ்சேர்ந்தனர்.

முகூர்த்தகாலங் கிட்டியதை யறிந்து பாங்கியர் சந்-

திரமதியை நன்கலங்கரித்து, அம்மண மண்டபத்திற்கு அழைத்துவரவே, "அழகிற் சிறந்த சந்திரமதி யாருக்கு மாலை சூட்டுவளோ என அரசிளங்குமரர் பலரும் மயங்கியிருந்தனர்.

உடனே, தோழியர் அம்மங்கையர் திலகத்தை மண்டபத்தின் நடுவே அழைத்துச் சென்று, அங்குள்ள ஆதனங்களில் ஆடம்பரமாய் வீற்றிருக்கும் மன்னிளங்குமாரைத் தனித்தனியே சுட்டிக்காட்டி, அவர்களது நாடு நகரம், குலத்தின் அருமை பெருமை, முதலியவற்றை விரித்துக்கூறி, முடிவில் அரிச்சந்திரனருகே சென்று கூறுவர்.

"பெண்கள் நாயகமே! இங்கே மன்மதனேபோல் பொற்புடன் விளங்கும் புரவலன் கோசல நாட்டுக் கோமான், இரவிகுலத்துதித்த சூரன். திரிசிங்கு மன்னனின் தவப்புதல்வன், அரிச்சந்திரன் என்னும் நன்னாமமுடையோன்" எனவும்,

சந்திரமதி மிகவும் மகிழ்ந்து அம்மன்னர் மன்னனைக் கடைக்கணித்து நோக்கினள். இரவிகுலத் தோன்றலும் அவ்வுத்தம நங்கையைப் பரிவுடன் பார்க்கவே, அவளது அழகிய கழுத்தில் திருமாங்கல்யம் விளங்குவதைக் கண்டனன்.

கண்டதும், நெஞ்சம்பதைத்து, மற்றைய மன்னரை நோக்கி, "அரசர்காள்! இம்மங்கையை நாமனைவரும் கன்னிகையென்று கருதினோம். ஆயினும், அவள் முன்னரே ஒருவனுக்கு மாலை சூட்டியதற்கு ஆதாரமாக, அவளது திருமிடற்றில் திருமாங்கல்யம் திகழ்கின்றது.

"இதென்னவிந்தை! மதிதயமன்னவன் நம்மை மயக்

கப் பார்த்தனன் போலும்! முன்னமேயே ஒருவர்க்கு மாலை சூட்டிய இவள், மீண்டும் ஒருவர்க்கு உரியவளாவது எங்ஙனம் பொருந்தும்" என்று சினந்தான்.

அதுகேட்ட மதிதயன் அகமிக மகிழ்ந்தானாயினும் அதனை வெளியே காட்டாது, "வேந்தர்காள்! அரிச்சந்திர மன்னவன் விளம்பிய வார்த்தை மெய்யோ, பொய்யோ? நீங்களே தேர்ந்துகொள்ளுங்கள்" எனலும் அக்குமரர் "இதென்ன புதுமையினும் புதுமை! அந்நங்கை தன் கழுத்தில் மங்கலநாண் விளங்குவதை நாங்கள் கண்டிலோம்" என்றுரைத்தனர்.

உடனே, மதிதயன் அரசிளஞ் செல்வரைப் பார்த்து, மன்னர்காள்! சிவபெருமானது அருளால் நான் இச் செல்வியை அடைந்தேன். அச்சமயம் எல்லாம் வல்ல எம்பெருமான் என்னை விளித்து, இக்கன்னியின் கழுத்தில் மங்கலநாண் விளங்குவதைக் காண்பவரே இவளுக்கு மணாளனாவர்? என்றருளினர். இவளது கழுத்தில் ஆபரணம் விளங்குவது இதுவரையில் யாருக்கும் தென்படவில்லை. "ஆதலின், நம்பெருமான் அருளியவண்ணமே, அரிச்சந்திரன் என் மகளை யடையவேண்டியது வெளிப்படையல்லவா?"

என்றதும், மண்டபத்தேயிருந்த மன்னர் பலரும் மதியின் வரவைக்கண்ட மரைமலர் போல் பொலிவிழந்தனர்.

பின்னர், மதிதயன் தன் புதல்வியாம் சந்திரமதியை வேதவிதிப்படி அரிச்சந்திரனுக்கு மணம் புரிவித்தான். மணவினை நிறைவேறியதும், அரிச்சந்திரன் தன்காதலியுடன் புறப்பட்டுக் கோசல நாடடைந்து, இனிதே

வாழ்ந்து வந்தான். பின்பு நாளடைவில், அவ்விருவரும் செய்த தவப்பயனால் தேவதாஸன் என்னும் புதல்வன் தோன்றினான். அம்மைந்தனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்துவந்து, உரிய காலத்தே கல்விகற்பித்தனர்.

ஈதிங்ஙனமிருக்க, பொன்னாட்டிற்கு இறைவனாகிய தேவேந்திரன், ஸப்தரிஷிகளும் ஸபையில் வீற்றிருக்கக் கொலுவமர்ந் திருந்தான். அப்பொழுது இமையவர் தலைவன் அருந்தவமுனிவரை நோக்கி, "மாமுனிகாள்! மனத்தொடுவாய்மை பேசும் அருங்குணத்தோனாகிய மன்னவன் மண்ணுலகில் உளனோ" என்று பணிவுடன் வினவினன்.

உடனே முனிவர்திலகமாம் வசிஷ்டர் "மகபதியே! கேள்! கடல் சூழ்ந்த காசினியில் பொய்ம்மையைக் கனவிலும் கருதாதான் அரிச்சந்திரன் என்னும் அரசன் மெய்ம்மையில் அவனை நிகர்ப்பார் யாருமிலர்," என்று பதிலளித்தனர்.

அதுகேட்ட விசுவாமித்திர முனிவர் உள்ளங்கொதித்து, "அவ்வரிச்சந்திரன் பொய்யே நிறைந்த உள்ளத்தான். அவனை மெய்யனென்று புகழ்ந்துபேசல் ஒவ்வாது" என்றனர்.

எனவே, வஷிஷ்ட முனிவர் பெரிதும் வெகுண்டு "மாசிலாமணியேபோல் விளங்கும் அம்மன்னர் மன்னன்மீது அடாப் பழிகூறுதல் அழகன்று. அவனைப் பழுது சொல்லல் மாபாவமாகும்" என்று சொல்லி மகபதியை நோக்கி, "அரிச்சந்திரன் ஸத்தியவிரதனாய் இருப்பதுமன்றி, நன்னடக்கையினின்று எள்ளளவும்

தவருன். தவறின், யான் இதுவரை இயற்றியுள்ள தவப்பயனை இழந்து, புலையனாய் விடுவேன்" என்று வஞ்சனங் கூறினர்.

விசுவாமித்திரரோ, விண்ணவர் இறைவனை விளித்து "யான் கூறியமாற்றம் பொய்க்குமாயின், என் தவத்திற் பாதியை அரிச்சந்திரனுக்கு அளித்துவிடத் தடையில்லை" என்று பதிலுரைத்தனர்.

உடனே விசுவாமித்திர முனிவர் விண்ணுலகைவிட்டு மண்ணுலகையடைந்து, தாம் கூறிய கட்டுரையை நிலைநாட்டுமாறு, வேண்டிய முயற்சிகள் செய்யத் தலைப்பட்டனர். ஆகவே அரிச்சந்திரனது மாளிகையடைந்து "அரசே! யான் வேள்வியொன்று இயற்ற நிச்சயித்தேன். அதற்கு அளவிறந்த திரவியம் தேவை," எனவும்,

அரசன் அகமகிழ்ந்து, "முனிவர்பெருமானே! என் தவப்பயனால், இன்று உங்களைக் கண்ணாரக்கண்டு தரிசிக்கப்பெற்றேன். வேள்வி இயற்ற எத்துணை நிதியம் வேண்டுமாயினும், அங்ஙனமே அளிக்கத் தடையில்லை" என்றனன்.

வேண்டும்பொழுது தனத்தைப் பெற்றுச் செல்வதாக வாக்களித்துவிட்டு முனிவர் போயினர்.

பின்பு முனிவர் கானகமடைந்து, அங்கு திரிந்தலையும் கொடிய விலங்குகளை அயோத்தியிலுள்ள பயிர் பச்சைகளை நாசமாக்கும்படி ஏவினர். அவை அவ்வாறே பயிரைப் பாழாக்கின.

விலங்குகள் புரியும் கொடுமையை ஜனங்கள் அரசனுக்கு அறிவித்துக் குறையிரந்தனர். ஆகவே, அம்

மன்னவர் பெருமான் நால்வகைச் சேனையுடன் காடடைந்து, அங்குள்ள துஷ்டப் பிராணிகளைக் கொன்று குவித்த பின்னர், அக்கானகத்தின் ஒரு புறத்தே இளைப்பாறி யிருந்தான்.

தமது முயற்சிகள் பாழாயினமை கண்ட துறவியோ, ஒரு காட்டுப் பன்றியை ஏவினர். அதுவும் பயிரை யழிக்க ஓடிவருவதை அறிந்த அரசன் வெகு பாடு பட்டு அதைக் கொன்று தீர்த்தான். அது கண்ட முனிவர் உடனே இரண்டு பெண்களை ஏவி, அரிச்சந்திரன் பாற் சென்று, அவன் களிக்கும் வண்ணம் ஆடிப் பாடி, அவ்விறைவனது சந்திரவட்டக் குடையை பரிசிலாகப்பெற்று வருமாறு விடுத்தார்.

வேட்டையாடிய களைப்பினால் இளைப்பாறி யிருக்கும் காவலனைக் கன்னியர் அணுகி, அனைவரும் மெச்சும் வண்ணம் அபிநயங்காட்டி நடித்தனர். அதனால் மகிழ்பூத்த மன்னவன், "யாது வேண்டும்" என்று அம்மங்கையரை வினவ, "சந்திரவட்டக் குடையின்மீது விருப்பம்" என்றனர் அப்பெண்மணிகள். பரம்பரையாய் இருந்துவரும் அக்குடையை அளிக்க அரசனுக்கு மனமில்லை.

ஆகவே, அதனைத் தவிர்த்து வேறெதை விரும்பினும் தருவதாக வாக்களித்தான். அதற்கு அப்பெண்கள் விளம்புவர் :—

"அரசகேசரி! யாங்கள் விரும்பிய வண்ணம் சந்திரவட்டக் குடையை அளிக்க மனமொப்பாவிடினும், எங்களை மணம் புரிந்துகொள்ளவேண்டும். இதுவே நாங்கள் ஆவலுடன் விரும்புவதாகும்."

எனவே, அருகில்நின்ற அமைச்சனும் ஸத்தியகீர்த்தி சினங்கொண்டு, அப்பெண்களை அகற்றிவிட்டான். அதனால் மனம் நொந்த மாதர்கள் அழுகுரலுடன் முனிவரையணுகி நடந்தனயாவும் நவின்றனர். உடனே முனிவருக்குக் கோபம் பொங்கிவிட்டது.

ஆகவே, நெற்றியில் புருவமேறி, கண்களிரண்டினும் மிகுந்த கோபாக்கினியுடன் வந்த முனிவரைக் கண்ட கொற்றவன், அவரது அடிபணிந்து,

" அருந்தவம் முயன்ற முனிவர் பெரும! தங்களுடைய கோபத்தைத் தேவர்களும் தாங்கமுடியாராயின், அடியேன் எந்த மூலை?" என்றேங்கி நிற்க,

முனிவரோ அடங்கா வெகுளியுடன் " அடே அரிச்சந்திரா! நயம்படப்பேசுவதில் நீ சமர்த்தன் என்பதை நான் நன்கறிவேன். அருமை அரிவையர் ஆடிப் பாடியதற்கு நீ பரிசில் அளிக்காது போயினும், அவர்களைக் கடிந்து பேசி யனுப்பிய காரணம் என்ன? உனது நீதிமுறை நன்று நன்று!" என்ற அளவில், அரிச்சந்திரன் வேடனைக் கண்ட மான்பேடு போல், நடு நடுங்கி, " முனிவர் திலக! எனது கண்ணை வேண்டினும், அல்லது நான் காத்தளிக்கும் மண்ணை வேண்டினும், விருப்பமுடன் கொடுப்பேன். ஆனால் பறைக்குலப் பெண்ணை மணம்புரிந்து கொள்ளேன்" என்றுரைத்தனன்.

இவ்வாறு அரிச்சந்திரன்விளம்பவே, கௌசிகமுனிவர் " அரசே! உன் தந்தையின் புலைத்தன்மையைப் போக்கி, அவனைத் தேவருலகிற்கு யான் அனுப்பியதை மறந்தனை போலும், அஃதிருக்கட்டும். 'யான் காத்

தளிக்கும் மண்ணை வேண்டினும் ஈவேன்," எனப்புகன்ற நீ அவ்வாறே, நினது நாட்டின் அரசுரிமையை எனக் களிக்கலாமே " எனலும்,

மன்னவன் சற்றேனும் தாமதமின்றி, அவ்வாறே அர சுரிமையைத் தாரைநீர்வார்த்துத் தத்தஞ் செய்தனன். செய்ததும், முனிவர் அங்ஙனமே நாட்டைக் கைக் கொண்டனர். ஆகவே, அரசன் தன்மனைவி, மைந்தரு டன் கானகமேகத் துணிந்துவிட்டான். அதனைக்கண்ட குடிமக்கள் ஆற்றொணுத் துயர்கொண்டு மன்னனது மல ரடிகளில் வீழ்ந்து வணங்கிப் பெரிதும் பிரலாபித்தனர்.

ஆயினும், அரிச்சந்திரன் ஏற்றவாறு ஆறுதல்சொல்லி அவர்களை அனுப்பினன். நாடு, நகரம், ஆடையணிகள், முதலிய யாவற்றையும் துறந்த அரிச்சந்திரன் ஒரு சிறிதும் மனச் சோர்வடைந்தானில்லை.

அதுகண்ட முனிவர் அக்கொற்றவனை எவ்விதத்தி லேனும், நன்னிலைமையினின்று பிறழும்படி செய்ய வெண்ணினர்.

ஆதலின், அந்நிருபனை யடைந்து, " கொற்றவா ! நீ கூறியவண்ணம் நின் அரசாட்சியை எனக்களித்தனை. ஆயினும், முன்னம் வேள்வியின் பொருட்டு நீ எனக் களித்த தனத்தை உன்னிடமே வைத்துப் போயினே னல்லவா ? அதனை நீ இப்பொழுது எனக்குக் கொடுத் தல் வேண்டும்" என்றனர்.

அதற்கு அரிச்சந்திரன், " மாதவத்தீர் ! அப்பொ ருள் அனைத்தும் பொக்கிஷத்தில் உளது," எனலும், விசுவாமித்திரர் " நிருப ! நீ எனக்கு நாடளித்தபொ ழுது, அப்பொருளும் அதனுடன் அடங்கி விட்ட

தாதலின், வேள்விக்கு வாக்களித்த பொருளைத் தருவது கடமையாகும்" எனவே, மன்னவன், "அங்ஙனமாயின் ஐயனே! எனக்கு நாற்பது நாள் தவணை கொடுப்பின், அதற்குள் தந்து விடுகின்றேன்" என்று கூறினன்.

அந்தோ! அரசன் நிலைமையை நாம் என்னென்று சொல்வது! நாடு முழுவதையும் முனிவருக்கீந்தபின்னர், காவியுடைபொன்றுடன் புறப்பட்டிருக்கும் பார்த்திபன் துறவிக்கு எங்ஙனம் பணம் கொடுக்க இயலும்? அத்தொகையோ கொஞ்சமன்று. வல்லானொருவன் யானையின் மீதேறிக் கவண்கல்லெறியின், அக்கல் எத்துணை உயரஞ்செல்லுமோ, அத்துணை உயரம் குவிக்கத்தகுந்த பொன்னளிக்க வேண்டுமே! இது நிற்க,

அரசனுடன் எக்காலத்தும் இணைபிரியாது வாழ்ந்து வந்த அமைச்சர் திலகமாம் ஸத்தியகீர்த்தியும் தன் தலைவனை விட்டுப்பிரிய மனமில்லாது, அரசனுடன் கானக மேகினன்.

அரிச்சந்திரனே பலபல நியாயங்களை எடுத்துக்கூறித் தன்னுடன் வருவது உசிதமல்லவென்று சொல்லியும், அமைச்சன் மனமொப்பாது, நிழல்போல் மன்னனுடன் செல்ல நிச்சயித்தான்.

இதற்குள் நாட்டிலுள்ள அமைச்சர், பிரதானிகள், தளகர்த்தர் முதலியோர் அரிச்சந்திரனை அடைந்து, "அரசே! எங்களுக்கு உத்தரவு கொடுப்பீரேல் இக்கணமே அக்கொடிய முனியைக் கூற்றுவனுக்கு இரையாக்கி, உமது அரசுரிமையை மீட்கத் தடையில்லை" என்று வேண்டினர்.

புலி பசித்தால் புல்லைத்தின்னுமோ? தின்னாதாதலின், அரிச்சந்திரன் அவர்களுக்கு நீதி மொழிகளை எடுத்துரைத்து, சாந்தப் படுத்திய பின்னர், நகருக்கு அருகிலுள்ள கானகத்தில் தங்கியிருப்பின், பிரஜைகளின் பிரிவைச் சகிக்க முடியாதென்று, வேறொரு கானகஞ் சேர்ந்தான்.

குடிகள் கொற்றவனைக் கண்டு கூறியதையும், அதற்கு அம்மன்னவன் பதிலளித்ததையும் உணர்ந்த கௌசிகர் மிகவும் வியந்தாரெனினும், அரசனை நன்னெறியினின்று தவறச்செய்தல் வேண்டுமென்று தீர்மானித்துவிட்டனர்.

கானகத்தே காதலியுடன் போகும் காவலனோ, தன் மைந்தன், மனைவி, இவர்களின் சௌகரியங்களைக் கவனிக்காது போயினும் முனிவர் பணத்தைத் தண்டுவதற்கு உடன்வரும் நக்ஷத்திரேசனுக்கு வேண்டிய சௌகரியங்களை ஒரு சிறிதும் குறைவின்றி நடத்தி வந்தான்.

எங்ஙனமாயினும் அரிச்சந்திரனைப் புல்லொழுக்கமுடையவனாகச் செய்து விடவேண்டுமென்று முனிவர் கூறியிருப்பதனால், நக்ஷத்திரேசன் சமயம் வாய்த்தபோதெல்லாம், அரிச்சந்திரனை வருத்தத் தலைப்படுவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தனன்.

கடைசியில் அரிச்சந்திரன் கங்கா தீரத்திலிருக்கும் காசி நகரை நோக்கிப் பயணமாயினன். அவன் மனைவி சந்திரமதி, மைந்தன் தேவதாசன், அருமை அமைச்சன் ஸத்தியகீர்த்தி, இன்னல் விளைக்கும் நக்ஷத்திரேசன் ஆகிய நால்வரும் அவனுடன் சென்றனர்.

செல்லும் வழியில் பொல்லாப் பாலைவனமொன்று

குறுக்கிட்டது. மலரினும் மேன்மை வாய்ந்த அடிகள் கொண்ட சந்திரமதி அதனைக் கடப்ப தெங்ஙனம்? ஆகவின் அரசன் என்செய்வதென்று ஏங்கியிருந்தான். என்றலும் மந்திரி தைரியங்கூறி மைந்தனைத் தோளில் தூக்கிக்கொள்ள, மன்னவன் மெல்லமெல்லத் தன்மனைவியை அழைத்துச் சென்றான். மன்னன் படுந்துபாத்தைக் காண மனம் பொறாதவன்போல் சுதிரவனும் மேற்கடலிற் குளித்தான்.

உடனே ஆகாயத்தில் மேகங்கள் திரண்டு மழை பொழியத் தலைப்பட்டன. அன்றிரவு அனைவரும் ஆடையின்றி வாடையால் மெலிந்து ஒரு மரத்தண்டை தங்கியிருந்தனர். குளிரைத் தாங்கமாட்டாதவன் போல் நக்ஷத்திரேசன் நடிக்கவே, அரசன் அங்குச் சிந்திக்கிடக்கும் குச்சிகளைத் தேடிக்கொணர்ந்து தீமூட்டி அவனுக்குச் சூடேறக்கப் பண்ணினான்.

மறுநாள் பொழுது விடிந்ததும், அரசன் காய்கனிகள் சேகரித்து வந்து நக்ஷத்திரேசனுக்கு அளிக்க, அவன் "ஐயனே! நான் அன்னம்புசிப்பதே தவிர, கந்தமூலத்தைக் கனவிலும் தின்றறியேன். எனக்கு அறுசுவை கொண்டநல்லுண்டி யளிக்காதுபோயின், என்னுவி என்னுடலைவிட்டோடிவிடும்" என்று பாசாங்கு பண்ணினான்.

அறுசுவையுள்ள உணவுக்கு அரசன் எங்குப்போவான்? ஆயினும், ஸத்தியகீர்த்தியும் ஸத்தியவானும் அவனுக்கு உபசாரமொழிகள் கூறியபின்னர், அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிய நக்ஷத்திரேசன் அப்பழங்களைத் தின்று பசியாறியதும் சொல்வானாயினன் :—

“அரிச்சந்திர! ஏன் இவ்வளவு துன்பம் அனுபவிக்க வேண்டும்? மனைவியும் மைந்தனும் படுந் துயரத்தைக்கண்டு என்னெஞ்சம் புண்ணாகின்றதே! இக்கொடிய வறுமையினின்று தப்புவதற்கு மார்க்கமொன்றுண்டு. அஃதென்னவெனின், கௌசிக முனிவருக்குக் கொடுத்த நாட்டைக் கொடுத்ததில்லையென ஒரு வார்த்தை விளம்பின், இப்பாடனைத்தும் பறந்துபோமே! வேண்டாம்! வருத்தமொழிந்து இன்பமாய் வாழலாம். நான் சொல்வதைக் கவனி”

கடூரமான இம்மொழிகளைக் கேட்ட காவலன், “ஐயனே! உமது புத்திமதி வெகுநன்று! இன்னலுக்கஞ்சி, மெய்ம்மையைத் துறக்க, ஒருக்காலும் துணியேன். என் உயிர் போவதாயிருந்தாலும் உண்மையைக் கடைப்பிடித்து வாழ்வதே எனது விரதம். அவ்வரிய நெறியினின்று தவறுவது கீழோர் இயற்கையன்றோ? ஒருவேளை யான் பிறழினும், எனக்குத் தாங்கள் அறிவு புகட்டி, நல்வழிப்படுத்த வேண்டியிருக்க, மெய்யைத்துறந்து பொய்யைக் கொண்டு ஒழுகும்படி போதிப்பது பொருந்துமோ?’ எனலும், விசுவாமித்திர முனிவர் அவ்விடம் தோன்றினர்.

தோன்றவே அரசன், “அந்தோ! குடி ஜனங்கள் முனிவரது மொழிக் கிணங்காது போயினரோ” என்று நடுநடுங்கி, அவர் அடிகளில் தனது முடிபட வணங்கி நின்றான். உடனே முனிவர் “அரசர் பெரும! ஏன் இவ்வாறு நீயும் நின்மனைவியும் மைந்தனும் வருந்துகின்றீர்! யான் சொல்வதைத் தட்டாது கேள். உனது நாட்டை உன்னிடம் இக்கணமே ஒப்புவித்து விடுகின்றேன். அவ்

வாறே அரசுரிமையை ஏற்றுக்கொண்டு இன்பமுடன் வாழ்வாய் அப்பனே!" எனவும்,

அரிச்சந்திரன் அவரை நோக்கி "முனிபுங்கவ! தானமாகக் கொடுத்த நாட்டைத் திரும்பப் பெறுதல் விதியுமன்று, அழகுமன்று" என்று மறுத்துவிட்டான். உடனே முனிவர் மறைந்து போனார். பின்னர் இவரும் யமுனை நதியைக் கடந்து காசியம்பதியை யடைந்தனர்.

நக்ஷத்திரேசனோ பின்வருமாறு சிந்திப்பானாயினன்:—

"இச்சமயமோ அரிச்சந்திரன் நாட்டை இழந்து காட்டை யடைந்து மனைவி மைந்தனுடன் உண்ண உணவும், நிற்க நிழலுமின்றி வருந்துகின்றான். இங்ஙனம் அவன் வாதைப்பட்டும், நன்னிலைமையினின்று தவற ஒரு சிறிதும் மனமிசைந்தானில்லை. ஆயினும் இக்காலம் அடைந்திருக்கும் வறுமையானது அவனைப் பொய்சொல்லும்படி தூண்டிவிடக் கூடும். பேராசையையும் உண்டாக்கும். ஆகவே, விசுவாமித்திர முனிவருக்குச் சேரவேண்டிய வேள்விப்பணத்தை உடனே கொடுத்து விடும்படி நாம் வற்புறுத்தினால், நிச்சயமாய் அவன் நிலைமை தவறுவான். அங்ஙனமாயின், நமது எண்ணமும் பலித்துவிடும், ஆதலினால், நம்மாலான வரையில் அவனைத் துன்புறுத்தவேண்டும்."

இவ்விதம் நக்ஷத்திரேசன் மனப்பால் குடித்தானாயினும், பாவமும் பழியும் வருவதற்கு அஞ்சிய மேலோர் உயிரைத் துறப்பரேயல்லாது, தமது நிலைமையிற் றவறார் என்பதை அறியாது போனது மடமையே யாகும். இது நிற்க,

நக்ஷத்திரேசன் தான் தீர்மானித்தபடி அரிச்சந்திரனை நோக்கி "மாதனம் கொடுப்பதாக நீ கேட்டுக் கொண்ட தவணை நாளையுடன் முடிவாகின்றது. ஆதலின், இப்பொழுதே அப்பணம் முழுவதையும்கொடுத்துத் தீர்க்க வேண்டும். இல்லையேல், ஒரு காரியமும் செய்ய முடியாவண்ணம் உன்னைத் தடுப்பேன். எத்துணை நாள் நான் உன்னுடன் வந்துகொண்டேயிருப்பேன் ? பசி தாகத்தையும் பாராட்டாது, பாடுபடவேண்டுமென்று எனக்கும் தலைவிதியுண்டோ ? மரியாதையாய்ப் பணத்தைச் செலுத்திவிடு" என்று பேசக்கேட்ட பார்த்திபன் இன்ன செய்வதென்று தோன்றாமல் மயங்கி நின்றான்.

தன் பதியின் பரிதாப நிலைமையைக் கண்டு கண்ணீர் சொரிந்த சந்திரமதி அவனை நோக்கி, "ஐயனே! யாவும் விதியின் பயன். சற்றேனும் அஞ்சவேண்டாம். என்னையும் நமது அருமைமகனையும் விற்று அதனால் கிடைக்கும் விலையைக் கொண்டு, முனிவரின் கடனைத் தீர்த்துவிடுங்கள்" எனலும்,

அரசன் மனமொடிந்து, "காதலி! நீ கூறுவது அழகன்று. ஆடவர் அடிமைப்படுதல் பொருந்துமேயன்றி, பெண்டிர் அடிமைப்படுதல் பொருந்தாது" என்று பதிலளித்தான்.

அச்சமயம் காலகண்டன் என்னும் வேதியனொருவன் வேலைக்காரியொருத்தி தேவையென்று அவ்வழியே வர, சந்திரமதியை அவருக்கு அடிமையாக விற்றுவிட உடன்பட்டான் அரிச்சந்திரன்.

ஆகவே, மன்னவன் விரும்பிய வண்ணம் முனிவர்க்

குத் தரவேண்டிய தனமவ்வளவும் தருவதாக அவ்வந்தணன் ஒப்புக்கொண்டானாயினும், தேவதாசன் என்னும் மைந்தனையும் தாயுடன் அடிமையாகத் தரல்வேண்டுமென்று விரும்பினன். அந்தோ! விதியின்றி வேந்தனும் அதற்கு மனமிசைந்தான்.

காலகண்டனிடமிருந்து கருந்தனம்பெற்று நட்சத்திரேசனிடம் அதனைக் கொடுத்தபின்னர், மன்னன் மனக்கவலை ஒருவாறு நீங்கியது. ஆயினும் நட்சத்திரேசனோ மீண்டும் மன்னவனை வருத்துவான் எண்ணி, அரிச்சந்திரனை நோக்கி "அரசர் பெரும! முனிவர் கடனைத் தீர்த்ததுபற்றி நான் களிக்கின்றேன். மனைவி மைந்தனை விற்றாயினும் பட்டகடனைத் தீர்க்கவேண்டுமெனத் துணிவார் நின்னையன்றி ஒருவருமிலர்! இந்த நாற்பது நாள்களும் ஆகாரநித்திரை யின்றி, உன்னுடன் அலைந்து திரிந்த எனக்கு நீ ஏதேனும் தரவேண்டுமன்றோ? இல்லையென மறுத்துவிடின், நான் சும்மாபோய்விடுகிறேன்" என்று சிறிதும் இரக்கமின்றி உரைத்தான்.

உடனே இறைவன் சிறிதும் தாமதியாது, ஸத்தியகீர்த்தியை நோக்கி, "அமைச்சர் திலக! என்னை யாவர்க்காயினும் அடிமைப்படுத்தி, அப்பொருளை நட்சத்திரேசனுக்கு அளிக்கவேண்டும்" என்று வேண்டினன். அதற்கு ஸத்தியகீர்த்தி "அரசர்பெரும! என்னைத் தாங்கள் விற்றுவிட்டு அப்பொருளைக்கொண்டு கடன் தீர்ப்பதே சாலச்சிறந்தது. ஆதலின் அங்ஙனமே செய்க" என வேண்டியும், அரசன் ஸம்மதியாதது கண்ட அமைச்

சன் காசிமா நகரின் வீதி நடுவே அரிச்சந்திரனை அழைத்துச்சென்று விலைகூறினன்.

அதுகேட்ட வீரவாகு என்னும் புலையர் தலைவன் யாது விலை யெனவே, பதினுயிரம் பொன் எனலும், அத்தொகையை வீரவாகு கொடுத்து, வேந்தனை அடிமையாகக் கொண்டனன். நட்சத்திரேசனும் அத்தனத்தைப் பெற்றுச்சென்று கௌசிக முனிவனை யடைந்து, தன் எண்ணம் ஈடேறவில்லை யென்று அறிவித்தான்.

நிற்க, வீரவாகுவோ, அரிச்சந்திரனை அழைத்துக் கொண்டு மயானஞ் சென்று சொல்வான் :—

" அரிச்சந்திர ! சவத்தைக் கொளுத்த வருவோர் காற்பணமும் முழத்துண்டும், உழக்கரிசியும் கொடுக்க வேண்டும். அதில் முன்னைய இரண்டையும் எனக்குக் கொடுத்துவிட்டு, எஞ்சிய உழக்கரிசியை நீ எடுத்துக்கொள்ளலாம். ஆகவே, நீ இச் சுடுகாட்டை காத்திருந்து, அங்ஙனமே செய்தல்வேண்டும்.''

அரிச்சந்திரனும் அங்ஙனேயாகுக என்று ஒப்புக் கொண்டான். ஸத்தியகீர்த்தியோ தன் அருமை அரசனை விட்டுப்பிரிய மனம் பொறுது, மன்னவனுடன் மயானத்தில் காலங்கழித்துவந்தான்.

இனி, அந்தணனுக்கு அடிமையான சந்திரமதியைப் பற்றி விசாரிப்போம். அம் மாதரசியும் மைந்தனும், விடிய ஜாமத்திற்குமுன் நித்திரை தெளிந்தெழுந்து, வீடுவாயில், மாட்டுக் கொட்டில் முதலிய இடங்களைப் பெறுக்கி மெழுகிச் சுத்தஞ்செய்தபின்னர், சாணத்தைக் கொண்டு எருமுட்டை தட்டவும், உலக்கை கொண்டு

நெல்குத்தவும் வேண்டும். அதுவுமன்றி ஏவியவேலைகளை இமைப்பொழுதில் செய்து முடிக்கவேண்டும். இனி, மைந்தனே, கானகமடைந்து, வீட்டில் சமையலுக்கு வேண்டிய விறகு சேகரித்து வருவதுமன்றி, அந்தணரியற்றும் நித்தியகருமங்களுக்கு ஏற்ற மாவிலை தருப்பை முதலியனவும் கொணரவேண்டும்.

இங்ஙனம் அவ்விருவரும் ஏவல்புரியாது போயின் சவுக்கடி கிடைக்கும். அந்தோ! விதியின்பயன் இருந்தவாறென்னே! இவ்வண்ணம் அவ்விருவரும் குற்றேவல் புரிந்துவருகையில், ஒருநாள் தேவதாசன் கானகஞ்சென்று தருப்பை சேகரித்து வரப்போனவன், பொழுது சாய்ந்தும் வீடுவந்து சேரவில்லை.

ஆகவே, தன் மைந்தனது கதி என்னவாயிற்றோவென்று சந்திரமதி மிகவும் ஏங்கியிருந்தனள். அப்பொழுது அண்டைவீட்டுச் சிறுவர் சந்திரமதியினிடம் கண்ணுங் கண்ணீருமாய் ஓடிவந்து "அம்மையே! உன்புதல்வனைப் பாம்பு தீண்டியது. அவன் காட்டினிடையே மாமரத்தண்டையிலிருக்கும் புற்றினருகே கிடக்கின்றான்" என்றியம்பிப் போயினர். அச்சமயம் சந்திரமதியின் மனநிலைமையை நண்பர்களே தெரிந்துகொள்ளுங்கள்.

உடனே அப்பெண்மணி காலகண்டனை யணுகி, அந்தணர்திலக! என் மைந்தன் பாம்புகடித்துக் காட்டில் கிடக்கின்றானென்று அயல் வீட்டுப்பிள்ளைகள் அறிவிக்கின்றனர்,' எனலும்,

"பேதாய், உன்மகன் மாண்டுபோயின், நானன்றோ

நஷ்டமடைபவன்? விலைகொடுத்து வாங்கிய பண்டம் போய்விட்டது? உனக்கேன் கவலை?' என்றனன்.

இவ்வாறு அக் கல்நெஞ்சன் கூறவே, சந்திரமதியின் துயரம் பொங்கத்தலைப்பட்டது. ஆகவே, மீண்டும் அந் தணனைக் கெஞ்சிக் கொண்டதன்மேல், எஞ்சியிருக்கும் வீட்டு வேலைகளைச் செய்துவிட்டுப் போகும்படி உத் தரவளித்தான் காலகண்டன். சந்திரமதியும் அவ்வாறே வேலைகளைப் புரிந்ததும், காற்றினும் கடுகிநடந்து, கானகமடையவே, அங்கு அரவு கடித்து அரசிளங் குமரன் இறந்து கிடப்பதைக் கண்டு, அச்சவத்தை வாரியெடுத்து மடிமீது போட்டுக்கொண்டு, "ஐயோ மைந்தனே! பனியால் நனைந்து, வெயிலால் உலர்ந்து, பசியால் அலைந்து, பரிதபித்ததும் போதாமல், அரவந் தீண்ட ஆருமின்றி இக்கானகத்தே இறந்துவிடவும் தலை விதியோ! அப்பா மகனே! இனி யாரை நம்பி உயிர் வாழ்வேன்? செங்கோல் ஏந்திய மன்னன் மகனு ய்த் தோன்றி, வேதியனுக்கு அடிமையாளாகிக் குற் றேவல் புரிய மனம்பொறுது உயிர் துறந்தனையோ? ஐயோ! நீ இறந்து கிடக்கக் கண்டும் என் உயிர் போக வில்லையே!"

என்று பலவாறு புலம்பி விம்மி விம்மி யழுதனள்.

அச்சமயம் நரிகள் பல, அவனையணுகி மைந்தனைத் தின்ன முயன்றன. பேய்கள் சில சூழ்ந்து பிணத்தைத் தின்ன நாவை நீட்டின. இவற்றையெல்லாம் கண்ட கற் பாசி மிகவும் பயந்து, இனி அங்கிருந்து புலம்புவதில் பயனில்லை யெனத்தேர்ந்து, அவ்வாறே மைந்தனைத் தோளில் தூக்கிச்சுமந்து கொண்டுபோய், சுடுகாட்டை

ந்து அவ்விடம் சிந்திக்கிடக்கும்கொள்ளிக்கட்டைகளைச் சேகரித்துத் தீமூட்டி மைந்தனைக் கொளுத்த யத்தனித்தனள்.

தன் விதியை நினைந்து நினைந்து பொருமியிருக்கும் அரிச்சந்திரன், நடுயாமத்தில் காட்டில் யாரோ உத்தரவின்றிப் பிணஞ்சுடுகின்றனரெனக் கண்டு, அவ்விடம் நோக்கிப் புறப்பட்டான்.

பாம்பு தீண்டிப் பாலன் மாண்டானென்பதை அரிச்சந்திரன் அறிந்தானில்லையென நாம் சொல்லவும் வேண்டுமோ? ஆகவே, விரைந்து சென்று 'மூளி! கொடுக்கவேண்டிய பணத்தைத் தராமல், தனியே இந்தக்கடுமையான இருட்டில் சவங்கொணர்ந்து, கபடமாகச் சுடுவதுனக்குத் தகுமோ?''

என்று கூறிக் கோபத்துடன் கான்முளையை யெடுத்தெறிந்தான்.

உடனே சந்திரமதி திடுக்கிட்டு, அலறி வீழ்ந்து ''ஐயையோ! நான் ஆருமில்லாப் பாவியானேன். கானகத்தே அரவம் கடித்திறந்தமகனைக் கொளுத்தவந்தேன். தரவுரிய பொருள் இன்னதென்றும் அறியேன். அறிந்திருப்பினும், கையிலொரு காசுமில்லா அகதியாகிய நான் என் செய்வேன்! எனக்கு உற்றார் பெற்றார் இருப்பின், நள்ளிரவில் தனியே பாலனைச் சுமந்து வந்து சுடுவேனோ? ஆதலின், என் மைந்தனைச் சுட உத்தரவளிப்பாய்'' என வேண்டி நின்றாள்.

அதற்கு அரிச்சந்திரன் சொல்வான் :—

''பெண்ணே! பிணஞ்சுடுவோர் முழத்துணியும் உழக்கரிசியும் காற்பணமும் கொடுத்தல் வேண்டும். அம்மூன்

றில் துணியும் பணமும் என் தலைவனைச் சேரவேண்டும். எஞ்சியுள்ள அரிசியே எனக்கு உரித்தாகும். உன் வேண்டுகோளுக் கிணங்கி, எனக்குச் சேரவேண்டிய அரிசியைக் கேளாது விடுகின்றேன். ஆயினும், எனது எஜமானனுக்குச் சேரவேண்டியதைக் கொடுத்தே தீர வேண்டும்' எனலும்,

"ஐயோ காற்பணத்துக்கும் முழத்துண்டுக்கும் எங்குப் போவேன்" என்றனள் சந்திரமதி.

அரிச்சந்திரனே சந்திரமதியின் கழுத்தில் அழகு வாய்ந்த மங்கலநாண் ஜொலிப்பதைக் கண்ணுற்று,

'நல்லை நல்லை! அறச் சமர்த்தி நீயே கண்டேன்
நன்னுதலார் அனைவரினும் இந்த்ரஜாலம்
வல்லை வல்லை! விறகுகளும் களவே! செம்பொன்
மங்கலநாண் உன் கழுத்திலிருக்க, ஏதும்
இல்லையெனச் சொல்லுவது சற்றும் ஏலாது,
இதனை எனக்கு ஈவாய், ஏன் றியம்ப, வேடர்
பல்ல முயர் நிலைவாயிற் பட்ட மான்போல்
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்
தாள்.'

பின்னர், ஒருவாறு தெளிந்து "ஐயோ! உத்தமனும் ஸத்தியவான் அரிச்சந்திரர்க்கல்லாது யாவர் கண்ணினும் தென்படாத என் மங்கல நாண் அந்தோ! சுடுகாட்டுப் புலையன் காணவும் நேர்ந்து விட்டதே! ஈசா! என் செய்வேன்" என்று உள்ளமுருகி நெஞ்சம் பதைத்தாள்.

மேனியின் வாட்டத்தாலும், மனக் கவலையினாலும், உருவழிந்திருந்த சந்திரமதியை நள்ளிரவில் தன்

மனைவியென உணராத இறைவன், அம்மொழிகளைக் கேட்டதும்,தீயில் விழுந்த புழுவேபோல் துடித்து, வீசியெறிந்த புதல்வன் தனதருமைச் செல்வனெனத் தேர்ந்து, துயரக்கடலுள் ஆழ்ந்து, மெய்ம்மறந்து, அடியற்ற மரம்போல் நிலத்தில் விழுந்தான்.

புலையனாய்த் தோன்றியவன் தன்கணவனென்று அறிந்த சந்திரமதியும் அவன்மீது சாய்ந்து கோவென்றலறினள்.

பின்னர் 'அரிச்சந்திரன் சிந்தை தெளிந்தெழுந்து, "பெண்ணே! விதிவலி இவ்வாறாயின், நாம் செய்வதென்ன? நம்மாலாவதொன்றுமில்லை! .மெய்ம்மையைக் கைவிடாதிருப்பதே நமது கொள்கை. யானோ, இச்சுடலைகாக்கும் புலையர்க்கு அடிமையானேன். அவருக்கு உரிய பணமும் முழத்துண்டும் தரல் வேண்டும். ஆகவே, நீ சென்று, உன்னை யடிமை கொண்ட அந்தணனை இரந்து, கொள்ளியாடையும் காற்பணமும் பெற்று வருவாய்," எனவே, சந்திரமதியும் அங்ஙனமே, காலகண்டனது வீடு நோக்கிப்போயினள். இது இவ்வாறாக, முனிவரின் சூழ்ச்சியால் கள்வர் பலர் காசி மன்னன் மாளிகையிற் புகுந்து, திரவியத்தைக் களவாடி, அம்மன்னனது மைந்தனைக்கொலைபுரிந்து, சந்திரமதி வரும்வழியில் இட்டுப்போயினர். அந்தணரது இல்லம் நோக்கிச்செல்லும் சந்திரமதி வழியில் ஒரு பாலன் இறந்து கிடப்பதைக்கண்டு அவனிடத்துள்ள அங்க அடையாளங்களால் அவனைத் தன் மகனென மதித்து, அவனை மடிமீதிருத்திப் புலம்பத் தலைப்பட்டனள்.

அம்மாநகரின் காவலாளிகள் கள்வர்களைப் பின் தொடர்ந்து செல்கையில், வழியே மைந்தனை வைத்துக் கொண்டு வாய்விட்டலறுஞ் சந்திரமதியைக் கண்டனர். கண்டதும், 'பாலனைக் கொன்றவள் இவளே யாவள்' என்றெண்ணி, அவளைப் பற்றிச் சென்று, அரசன் முன்னிலையில் நிறுத்தினர்.

உடனே மன்னவன் அம்மாதரசியை நோக்கி, "நங்காய்! நீயே என் பாலனைக் கொலைபுரிந்ததாகக் காவலாளிகள் கூறுகின்றனர். யார் நீ? உன் பெயர் யாது? உள்ளதை உள்ளவாறே உரைக்கவேண்டும்," எனவும், சந்திரமதி "அரசே! கையுங் களவுமாய்க் காவலர் என்னைப் பிடித்திருக்க, நான் யாரா யிருப்பினுமென்? நினது மகனின் சதையைத் தின்று பசியாற வெண்ணினே னென்றே அனைவரும் கருதுவர். யான் அதற்கு மாறாகச் சொல்லின் பலனிராது." என்று பதிலளித்தனள்.

பின்னர் பார்த்திபன் அப்பெண்மணியை ஏற இறங்க நோக்கி, அவளது முகக் குறியால் அவளைக் குற்றமற்றவளெனத் தேர்ந்தான். ஆயினும், அருகே நின்றோர் "அரசர் பெரும! கொலைத்தொழிலிற் கைவந்தவர்கள் இங்ஙனமே மொழிவர். அவர்களிடம் கொலைக்குறியும் எளிதில் புலப்படாது. இவளை உற்று நோக்கின் அரக்கியென்றே நிச்சயிக்கவேண்டும்" என்றனர்.

உடனே, அரசன் சந்திரமதியின் மதிமுகத்தை மீண்டும் நோக்கி யோசித்தவளவில், அவள்மீது எள்ளளவும் பிழையில்லை யென்றே துணிந்தான்.

ஆனாலும், அருகேயிருந்தோரின் வாய்மொழியினாலும்

சந்திரமதிக்கு நேரவிருக்கும் விதியின் வலியினாலும் வீரவாகுவை அழைத்து, அவளைக் கொலைபுரிகவென்று கட்டளையிட்டான் காவலர் பெருமான்.

வீரவாகுவோ அரசனது ஆணையின் வண்ணம், குற்றமற்ற அந்நங்கையை மணிக்கயிறுகொண்டு கட்டி யழைத்துச்சென்று, அரிச்சந்திரனைக் கூப்பிட்டு, "இம் மங்கை நம் மன்னவனது மைந்தனைக் கொலை புரிந்தனளாம். ஆகவே, இவளை இரண்டு துண்டாக வெட்டி யெறிந்துவிடுக" என்றியம்பி, வாளையும் நீட்டினான். அங்ஙனமே அவன் மணிக்கயிறுடன் சந்திரமதியை அழைத்துச் செல்கையில், தங்களுக்குத் தோன்றிய வாறு சந்திரமதியைப் பலர் ஏசிப் பேசியதையும், அவளுக்குப் பரிந்து வேறுபலர் வருந்தியதையும் கேட்டறிந்த அரிச்சந்திரன் விதியை நொந்து கொண்டே சென்றான். இதுநிற்க,

முற்றத்துறந்த முனிவரும், தேவரும் முக்காலமும் உணரவல்லாரென்பது அனைவருக்கும் தெரிந்தவிஷயம். ஆகவே, இந்திரவுலகிலிருந்த வஸிஷ்டமுனிவர் தேவர் கோனை நோக்கி, "அமராபுரி அரசே! இதுகாறும் அரிச்சந்திரமன்னன் இம்மியும் நன்னிலைமையினின்று தவறினானில்லை கண்டாய்! விசுவாமித்திர முனிவரோ அம்மன்னவனைப் படாதபாடு படுத்தினர். ஆனால். உறைக்க உறைக்க சந்தனக் கட்டை தேயினும், கந்தத்தில் குறையாதது போலவே, அரிச்சந்திரன் தனத்தில் குறைந்திருப்பினும் சத்தியத்தையே கடைப்பிடித்து உறுதியுடன் ஒழுகிவருகின்றான். இன்னும் சிறிது நேரத்திற்குள், அவன் தன் தலைவியை இருதுண்டாக

வெட்டப்போகின்ருன். இனி, அவன் முறை பிறழ் வனே! பிறழானென்பதே எனது முடிவு" என்றதும், தேவர் பலரும் ஒருங்கே திரண்டு அவ்வதிசயத்தைக் காணுமாறு ஆகாய வீதியில் குழுமினர்.

அப்பொழுது கௌசிக முனிவர் கடைசியாக ஒரு முறை பார்த்து விடுவோமென்று தீர்மானித்து, அரிச் சந்திரனை யணுகி, "மன்னவனே! நீ இங்ஙனம் துன் புறவானேன்? முன்னம் நீ மகிழ்வுடன் எனக்களித்த அரசுரிமையை இப்பொழுது இல்லையென மறுத்து விடு வாயேல், முன்னம்போல் முடிசூடி இன்பமுடன் வாழலாமே'' என, அரசன் விளம்புவான்:—

"மக்களின் மிக்க மாதவத்தீர்! இவ்வுடலைப் புலைய னும் விரும்பான். இத்தகையவுடலைப் பெரிதென மதி த்து, உயிரினும் சிறந்த சத்தியத்தைக் கைவிடேன். எல்லாமுணர்ந்த தாங்கள் எனக்கு இவ்வாறு எடுத் துரைப்பது நீதியாமோ? நாங்களோ, பதியிழந்தனம், பாலனை யிழந்தனம், படைத்த நிதி யிழந்தனம், இனி எமக்கு உளதென நினைக்கும் கதியிழக்கினும், மெய்ம் மையைக் கைவிடோம்."

இவ்வாறு உரைக்கக்கேட்ட அருந்தவர் மதியிழ ந்து தன் வாயிழந்து மறைந்தனர். பின்பு, அரிச்சந்தி ரன் தன் மனைவியை மயானத்திற்கு அழைத்துப்போய், அவளைக் கிழக்குநோக்கி நிற்கச் சொல்லி, வெட்டுவ தற்கு வாளையுருவியதும் 'என் தலைவ! என்னுயிர் பெரி தன்று. சத்தியமே பெரியது. ஆதலின் மெய்யையே மெய்யாகக் கொள்க" என்றனள் சந்திரமதி.

உடனே அரிச்சந்திரன் உடைவாளை ஓங்கினுன். ஓங்

கவே, அவள் கழுத்தில் அவ்வெட்டானது மலர்மாலை யாக வீழ்ந்ததேயன்றி, அங்கங்கைக்குச் சிறிதும் காயம் படவில்லை.

அக்கணமே அவர்கள் முன்னிலையில் மும்மூர்த்திக ளும் தோன்றி, "உத்தமனே! சத்தியனே! உன்னை நிகர்ப்பார் யாருமிலர்!" என்று வாழ்த்தி மறைந்து போ யினர். போனதும் மயானமோ யாகசாலையாய் விளங் கியதுமன்றி, தேவதாசனும் உயிர் பெற்றெழுந்து, தன் தாய் தந்தையரையடைந்து, அடிவணங்கி நின்றான்.

உடனே தேவர் பலரும் பூமாரி பொன்மாரி பொழிந் தனர். அப்பால் விசுவாமித்திர முனிவர் தோன்றி,

" அரிச்சந்திர! மெய்ம்மையில் உன்னை ஒப்பாரு ளரோ? தேவர்களும் உனக்கு நிகராகார்! யான் உங் களுக்கு இத்தகைய மனோவியாகூலம் உண்டுபண்ணி யதை மறந்துவிடுக. புகைக்கினும் காரகில் பொல்லா ங்கு கமழாது. அதுவேபோல், உங்களை வீணை கஷ்டங்களுக்கு ஆளாக்கியும், நீங்கள் மெய்ம்மையினி ன்று எள்ளளவும் தவறாதிருப்பதை உலகத்தாருக்கு அறிவிக்கும்வண்ணம் இவ்வண்ணம் கொடுமை புரிந் தேன். நீங்கள் பட்டபாட்டிற்கு ஈடாக, யான் இயற்றிய அருந்தவத்தில் செம்பாதியை உனக்களித்தேன். அது வுமன்றி, வாரணாசி மன்னன்மகன் ஆவி பெற்றெழுவது டன், நீயும் உன்னாட்டை யடைந்து முன்னமேபோல் சுகமே வாழ்வாயாக" என்று ஆசிகூறிப் போயினார்.

இவ்வதிசய விசேஷங்களையெல்லாம் காசிமன்னன் அறிந்து, அரிச்சந்திரனையும் அவனது மனைவி மைந்த னையும் வரிசையுடன் மாளிகைக்கு அழைத்துச்சென்று

உபசரித்தான். பின்னர், அரிச்சந்திரன் தன் நாடு சென்று, அனைவரும் கண்டுகளிக்கும் வண்ணம் முடி சூடி இன்பமாக வாழ்ந்து வந்தான்.

குசேலர் சரிதம்

பரந்தாமனும் பரம ஏழைநண்பனும்.

முன்னம், தேவர்களின் வேண்டுகோளுக் கிணங்கிய திருமால் இப் பூவுலகத்தே கண்ணபிரான் என்னும் திருநாமத்துடன் அவதரித்து, வடமதுரையில் அரசு செலுத்தி வந்தார். அவர் இளமைப் பருவத்தில் சாந்தீபினி என்னும் முனிவரிடம் பல கலைகளையும் கற்றுணர்ந்தார். அக்காலத்தே சுதாமன் என்னும் சிறுவரொருவரும் அவ்வாசிரியரிடத்துப் பாடம் பயின்றுவந்தனர்.

கண்ணபிரானும் சுதாமனும் ஒத்த அன்பும் வயதும் குணமும் பொருந்தியவர்களாதலின், அவ்விருவரும் உயிர் நண்பர்களாகச் சிறந்து விளங்கினர். அந்நேசர் இருவரும் பாடசாலையில் கல்விகற்று முடிந்த பின்னர், தக்க பருவத்தில் கண்ணபிரான் அரசுரிமையை அடைந்தனர்.

சுதாமனோ தமது இல்லஞ் சேர்ந்து, அல்லும் பகலும் ஈசனைத் துதிப்பதிலேயே காலங்கழித்து வந்தார். அடக்கம், வாய்மை, பொறுமை, அன்பு, அருள், முதலிய அருங்குணங்கள் அனைத்தும் அவருக்குப் பூஷணமாய் விளங்கின. எக்காலத்தும் பரந்தாமனது பெருங் குணங்களையே சிந்திப்பதைத் தவிர, வேறெதிலும் அவர் தமது சித்தத்தைச் செலுத்துவதில்லை.

இனி, இல்லறத்தை மேற்கொள்வது உசிதமென வுணர்ந்த சுதாமன் அவ்வண்ணமே, நாணம் மடம் அச்சம் பயிர்ப்பு என்னும் நாற்குணங்களும் நன்கமையப் பெற்ற சுசீலை என்னும் பெண்மணியை மணந்து இல்லறத்தைச் செவ்வனே நடத்திவந்தார். அவரோ பரம ஏழை.

பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை என்பது பொய்யா மொழியாதலின், அத்தம்பதிகள் இருவரும் பட்டபாடு சொல்ல முடியாது. தினந்தோறும் சுதாமன் கானகஞ் சென்று, அங்கு உதிர்ந்து கிடக்கும் மூங்கிலரிசிகளைச் சேகரித்து கொணர, அதனையே தேவர் அமுதென்று சுசீலை மதித்துச் சமையல் செய்து முதன் முதல் கணவரை உண்பித்து, எஞ்சியவற்றைத்தான் உண்டு களித்திருப்பாள். அப்பால் நாளடைவில் ஈசனருளால் அவ்விருவருக்கும் மைந்தர் பலர் தோன்றினர்.

ஆகவே, சுதாமன் சேகரித்துவரும் உணவுப்பொருள் அவ்வனைவர்க்கும் கால்வயிற்றுக் கஞ்சிக்கும் பற்றாதாயிற்று.

ஆயினும், அவ்வரிசிகளைச் சுசீலை கூழாகக் காய்ச்சி, முதலில் கணவருக்கும், பின்பு மைந்தருக்கும் இட்ட பின்னரே, தானுண்பாள். சிலநாட்களில் அவ்வுணவு பற்றாது மக்கள் அனைவரும் அழுது பெருமூச்செறிவர்.

அச்சமயம் சுசீலை தன் குழந்தைகளை ஒருவாறு தேற்றுவாள். தேற்றியும் மக்கள் பசியால் வாடுவதைக்கண்டு மனம்பொறாது பெரிதும்வருந்தி, "இதுவும் ஈசனது திருவிளையாடலோ !" என்றெண்ணித் தேறியிருப்பாள். ஆனால் புதல்வர் படுந்துயரமோ பார்ப்பவர் மனத்தை

உருகச்செய்யும். அவர்கள் தரித்துக்கொள்ள ஆடை கிடையாது. மிகவும் மலினமடைந்த ஆடையொன்றைக் கொண்டே அப்பத்தினி திருப்திகொண்டிருப்பாள்.

சுதாமன் தரித்திருந்த ஆடையிலோ பொத்தல்கள் எண்ணிமுடியா. அதனால் அம் மகானுக்குக் குசேலர் என்னும் மற்றொரு நாமம் வழங்கிவந்தது. இது நிற்க,

ஒருநாள் அப்பெண்மணி தன் குழந்தைகளுக்குக் கூழ்வார்க்க யத்தனித்து, ஒரு மகவுக்கு அளித்திடும் போது, ஒரு மகவு கைநீட்டும்; முந்திமேல் வீழ்ந்து இருமகவும் கர நீட்டும், பொருமி ஒருமகவு அழும்; கண்பிசைந்து அழும் மற்றொருமகவு; பெரு நிலத்திற்புரண்டுவீழ்ந்து மற்றொருமகவு அழும். அந்தோ! எங்ஙனம் சகிப்பாள் அப்பெண்மணி?

இனி, அன்னாய்! என்வயிற்றெழுந்த பசி அடங்கிற்றில்லை என அழும் ஒருசேய்; தாயே! எனக்குச் சிந்தாத கஞ்சிவார்க்கவில்லையெனப் பொய் செப்பும் ஒரு சேய்; ஆர்வத்துடன் கஞ்சிக்கு ஒரு சேய் கை நீட்டும் பொழுது, மற்றொருமகவு அதனைத் தட்டிவிட, உடனே அக்கஞ்சி சிந்திப் போவதைக் கண்டு நகைக்கும் மற்றொரு சேய்!

இவ்வண்ணம் கலகம் விளைக்கும் மைந்தர்களை அச்சுசீலை அன்புடன் நோக்கி, இரங்கி ஏங்கியதுர், கரதலத்தால் அணைத்து, மடித்தலத்தே யிருத்திக் கண்ணீர் துடைத்து, முகம் முதுகு முதலியவற்றைத் தடவிக் கொடுத்து, மலர்போன்ற வாயின் முத்தங்கொடுத்து ஆற்றுவாள்.

மற்றொருநாள் சுசீலையோ உண்ண உணவில்லாத

தனால் கலேமேலிட்டு, புத்தி தடுமாறிச் சோர்ந்து கீழே விழுந்து விட்டாள்.

பின்னர், சற்றுநேரங் கழித்து எழுந்திருந்ததும், ஒரு வாறு மூர்ச்சைதெளிந்து யோசிப்பாளாயினள் :—

"அந்தோ! ஜகதீசா! வறுமைமிகவும் கொடிதன்றோ? என் செய்வேன்! கணவரோ எக்காலத்தும் கண்ணபி ரானைத் துதித்து நிஷ்டை கொள்கின்றனர். மைந்தர் படும் பாடுகளை அவரிடம் எடுத்துரைக்கவும் சமயம் வாய்த்திலது. ஒரு சமயம் நேரினும், அவர்முன் நின்று கஷ்டங்களை எடுத்துரைப்பின், அவரது நிஷ்டை கலேந்துவிடும். அவ்வாறு செய்ய மனமெழவில்லை.

"ஆயினும், பசிப்பிணியினால் உயிர்துறத்தல் தோஷ மாகும். ஆலகயால் அவர் சமுகம் இதனைப் பணி வுடன் பகர்தலே தகுதி."

இவ்வாறு நினைத்த சுசீலை ஒருநாள் குசேலர்பாற் சென்று, பாதமலரில் தொழுது, "என் தலைவ! வறுமை யால் மைந்தர் படும்பாடோ பகரும் தரமன்று. நான் அபரிமிதமான செல்வத்தை இச்சிக்கவில்லை.

"குழந்தைகளின் வயிறு வாடாது, கஞ்சியேனும் வார்த்தல் அவசியமன்றோ? தங்களுடன் முன்பு ஒரு சாலை மாணுக்கராயிருந்து கல்விகற்ற கண்ணபிரான், இச்சமயம் மதுராபுரியில் அரசு செலுத்தி வருகின்றார். அவர்பாற்சென்று நமது கஷ்டத்தை நீக்கிக் கொள்ளலா காதா?" என்று செப்பினள்.

அதனைக்கேட்ட குசேலர், "பெண்ணே! பக்தபரா தீனனாகும் திருமாலே கண்ணனாய் அவதரித்திருக் கின்றனர். அவரை நாடியடைந்து, என்றுமழியாத

பெருஞ்செல்வம் பெறுவதே மேலானது. சிறுவரோ மதிக்கும் செல்வத்தைப் பெறவிரும்புதல் அறிவின்மை யாகும்.

"இனி, நான் கண்ணனைக் கண்டு ஆண்டுகள் பல கழிந்தன. ஆதலின் அவரைப்பார்க்க வேண்டுமென்ற அவாவும் எனக்கு வெகு நாளாயுண்டு. நல்ல வேளை யாய் நீ ஞாபகப்படுத்தினாய். பெண்ணே! ஒரு நொடி யில் அழிந்துபோகும் செல்வத்தைத்தவிர்த்து மேலான செல்வத்தை நாம் அவரிடம்பெற வேண்டுமென்பதை மறந்து விடாதே. நிற்க,

"அங்ஙனமே அவரைக் காணச் செல்கின்றேன். தெய்வம், அரசர், குழந்தைகள், அந்தணர், ஆகிய இவர்களைத் தரிசிக்க வெறுங்கையுடன் போகலாகாது. ஏதேனும் தின்பண்டமிருப்பின் கொணர்க!" என்று ரைத்தனர்.

உடனே, சுசீலை சிறிது அவல் சேகரித்து வந்து, அதனை ஒருகந்தைத்துணியில் முடிந்து கொடுத்தனள். கண்ணனைக் காணும் களிப்பிலாழ்ந்த குசேலர் அப் பரமனது திவ்யநாமங்களை ஓதிக்கொண்டே வடமதுரை நோக்கிப் புறப்பட்டார். நம்பெருமானது நாமங்களைத் தியானித்துக் கொண்டே போகும் ஆனந்தத்தினால், வழியின் தொலையையும் அவர் ஒருபெரிதாக நினைத் தாரில்லை.

ஆகவே, காடு மலை முதலியவைகளை எளிதிற்கடந்து மதுராபுரி யடைந்தனர். அந்நகரை அணுகியதும் அரண்மனையின் மீதுள்ள கொடிகள் காற்றிலாட, "குசேலரே! வருக! கண்ணன் காத்திருக்கின்றான்

உம்மைக் காண" என்று கை நீட்டி யழைப்பது போலிருந்தது. இந் நற்குறியைக் கண்ட குசேலர் "ஜடப்பொருளாகிய இக்கொடிகளை கண்ணனுடைய கருணையை விளக்கிக் காட்டுகின்றன" என்றெண்ணி, மகிழ்ந்து, அரண்மனையைச் சேர்ந்தார்.

அங்கே காவலர் உருவின கத்தியும் கையுமாய் நிற்பதைக் கண்டு, "வாயில் காப்போரே! கண்ணனைக் காணவந்தேன்! என்னைக் குசேலன் என்றழைப்பார்கள். நாங்கள் இருவரும் ஒருசாலை மாணாக்கர்கள், என்வருகையை அரசருக்கு அறிவிப்பீராக" எனலும், அறிவிலி யொருவன் "ஐயா! இதென்ன வேஷம்? கந்தை உடை! எலும்புக்கூடுடைய உடல்! இக்கோலத்துடனா கண்ணனைக் காணவந்தீர்?" என்றான்.

உடனே அருகே நின்ற மற்றொரு காவலாளன் முன்னவனை யதட்டி வெருட்டி, "அடே! மூடா! பெரியோர் எக்கோலத்துடன் இருப்பினுமென்? இவரை யாரென்று நினைத்தாய்? இவரை உற்று நோக்கின், நம் கண்ணனது நண்பரென்றே காண்கின்றது" என்றுரைத்து, அப்பெரியவரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி, "அருமைஐயனே! அம்மூடன் மொழிந்ததை மறந்து விடுங்கள். பெரியோராகிய தாம் கோபங்கொள்ளாது, அவன் பிழையைப் பொறுத்தருள்க" என்று அரசரிடம்சென்று "குசேலர்" என்றபெயரைச் சொன்னவளவில், கண்ணன் களிகூர்ந்து, விரைந்துவந்து, வெகு பயபக்தியுடன் குசேலரை அரண்மனைக்குள் அழைத்துச் சென்றார்.

சென்றதும், நவமணிகள் இழைக்கப்பெற்ற பீடத்தே

அப்பெரியோரை அமரச் செய்து, அவரது பாதகமலங்களைத் தமது கைம்மலரால் தொட்டு வணங்கினர்.

பின்னர், பரிமளம்பொருந்திய நீரால் அவருக்கு மஞ்சனமாட்டி, பட்டாடையுடுத்தி, அறுசுவையுண்டி யளித்தார். அளித்ததும் தாம்பூலங்கொடுத்து, ஆதனத்திருத்தி, யோக க்ஷேமங்களை விசாரித்தார்.

பின்னர், குசேலர் சற்றே இளைப்பாறியிருக்கையில், அவரது பாதங்களைக் கண்ணபிரான் தம் தொடையின் மீதிருத்தி மெதுவாகப்பிடித்து, வழிநடந்து வந்த களைப்பைப் போக்கியிருக்கும் பொழுது, ருக்மணிதேவியும் விசிறி கொணர்ந்து, குசேலர்மீது குளிர்ந்த காற்று வீசுமாறு விசிறினள். இவ்வாறு கண்ணபிரான் பலவகையான உபசாரங்கள் புரிந்ததும், குசேலரோ தாம் கொணர்ந்த அவலை அவருக்கு அளிக்க வெட்கமுற்று வாளாவிருந்தார்.

ஆயினும், கண்ணபிரான் குசேலரைநோக்கி, "நண்ப! நாமிருவரும் ஒருவரையொருவர் கண்டு நாட்கள் பல கழிந்தன. எனக்கு ஏதேனும் தின்பண்டம் கொணர்ந்தீரோ?" எனவும், வெட்கமிகுதியினால் அந்த அவல் முடிப்பைக் குசேலர் மறைத்துக்கொண்டனர். அதனையறிந்த கண்ணன் அம்முட்டையை அவிழ்த்து நோக்கவே, அதில் அன்பார்ந்த அவல் நிரம்பியிருந்தது.

உடனே கண்ணன் ஒரு பிடி அவலை வாரியெடுத்து வாயிலிட்டு, உருசிபார்த்து, மென்று தின்றார். தின்றதும் குசேலரை நோக்கிக் கூறுவார் :—

"இந்த அவலின் உருசியே உருசி! இத்தகைய அவல் தேவர்க்கும் அரியதாகும். மிகுந்த அன்பு

கொண்டு சமைக்கப்பட்ட அவல்போலும்! ஆ! எவ்வளவு புதிய அவல்! எவ்வளவு விலை கொடுத்தாலும் இத்தகைய அவல் கிடைப்பது அருமையன்றோ? இந்த அவலில் ஒன்றுகூட முனை முறிந்திருக்கவில்லை. இந்த அவலைத் தொட்ட கையும் மணக்குமென்றால், அவலின் மணத்தைக்குறித்து யான் என்னென்று சொல்வேன்? இத்தகைய அவலைக் கொண்டே உமது அன்பு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்குகின்றது. தேவாமுதினும் இந்த அவல் அருமையுடைத்தே! நாமிருவரும் கழகத்தே மாணக்கரா யிருந்தகாலத்தில், எனக்கு அவலின்மீது ஆவல் உண்டென்பதை யறிந்து, இச்சமயம் அவல் கொண்டுவந்த உமது நட்பை எவ்வாறு புகழ்வேன்?"

இங்ஙனம் கண்ணபிரான் அந்த அவலைப் புகழ்ந்த பின்னர், மீண்டும் ஒரு பிடி எடுத்துப் புசிக்க விரும்பினார். அதனைக்கண்ட ருக்மணிதேவி கண்ணனைநோக்கி, "நாத! மிகுந்த ஆர்வமுடன் அப்பெரியோர் கொணர்ந்த அவலைப் புசிக்கும் பாக்கியம் எனக்கில்லையோ? உங்களையொட்டி அந்த அவலில் எனக்கும் ஒருபங்கு இலதோ? என்றியம்பி, அம்முடிப்பைப் பிடுங்கிக் கொண்டனள்.

"ஒரு பிடி அவலுக்கு ஈடாக இவ்வுலகமனைத்தையும் கண்ணபிரான் குசேலருக்குக் கொடுத்து விடுவர். மீண்டும் ஒரு பிடி அவல் உண்ணின் நாமும் போகவேண்டியதுதான்" என்றெண்ணிய அம்மை அம் முடிப்பைப் பிடுங்கினள் போலும்!

பின்பு, கண்ணன் வெகுநேரம் வரையில், வேதத்தின்

உண்மைப் பொருள்களைக்குறித்து, அப்பெரியவருடன் பேசியிருந்து, அவரிடமிருந்து தாம் ஏதோ உண்மைப் பொருள்களை அறிந்துகொள்வதுபோல், தாம் அறிந்த வேதஸாரங்கள் அனைத்தையுங் குசேலருக்கு அறிவித்தார்.

இவ்வாறு அவ்விரு நண்பரும் உரையாடி மிக்கமகிழ்ச்சியுடன் இரண்டொரு நாட்கள் கழித்தனர். பின்னர், 'காசிக்குப் போனான் காவடி கொணர்ந்தான்' என்னும் பழமொழியேபோல், தம் மனைவி சுசீலை உரைத்ததை மறந்தோ, அன்றேல் மறவாதிருந்தும் மனமில்லாமலோ, அவ்விஷயத்தைக் குறித்துக் கண்ணனுடன் குசேலர் ஏதுவும் உரையாது, விடை பெற்றுத் தமது ஊர் நோக்கினர்.

வரும்வழியில் குசேலர், "கண்ணனுடைய அன்பே அன்பு! எத்தனை ஆண்டுகளுக்கு முன்னரோ, நாமிருவரும் மாணாக்கராயிருந்தும், அதனை மறவாது அன்றுபோல் இன்றும் நேசம் பாராட்டிய கண்ணன் கண்ணனே! கேவலமான அவலைப் பெரிதென மதித்து, அமுதுபோல் உண்ட கண்ணன் கருணையே கருணை! மேலும், ஏதோ தமக்குச் சந்தேகம் இருப்பதுபோல் நடித்து, வேதப்பொருளில் எனக்குள்ள ஐயங்களைப் போக்கி, அறிவுதந்த பெருமையே பெருமை! இவைகளனைத்தையும் நன்கு யோசித்தால், பரந்தாமன் என்ற பெயர் தகும் தகும். இங்ஙனமிருக்க, மிகவும் அற்பமாகிய செல்வத்தையா நாம் அக்கண்ணனிடத்துப் பெறுவது?'' என்று கண்ணபிரானது குணாதிசயங்களைப் பலவாறு புகழ்ந்த வண்ணமாய் வழி நடந்தனர்.

கண்ணனது அருமை பெருமைகளின் சிந்தனையால் வழி நடக்கும் களைப்பையும் மறந்த குசேலர் தம் வீடு சேர்ந்தார். சேர்ந்ததும் தமது சிறிய குடிசை இருந்த இடத்தே ஏழடுக்கு மாளிகை நிற்பதையும், அதனருகே யானை குதிரை முதலியன நிற்பதையும், தமது மக்கள் ஆடையணிகளால் அலங்கரிக்கப்பெற்றுத் தாதியர்களின் கைதனில் கொஞ்சிக் குலாவியிருப்பதையும் அத்தகைய வாயிலின் அருகே காவலாளர் உஷார் கொடுத்து நிற்பதையும், கண்டு மயங்கி, "இதேது! வீடு தெரியாமல் மற்றொரு தனவந்தன் வீட்டை யடைந்து விட்டோம்" என்றேங்கி நிற்கையில், சுசீலை விரைந்து வந்து, தன் நாதனை முடிபட வணங்கி நின்றாள்.

பின்னரே, அம்மாளிகை தமதெனக் குசேலர் உணர்ந்தாராயினும், மறுபடியும் திகைத்து நின்று "பெண்ணே! இது யார் மாளிகை! நீ இங்கிருக்கக் காரணமென்ன? ஆ! நீ விரும்பிய வண்ணம் கண்ணபிரானைப் பொருள் கேட்டுவர மறந்துபோனேன். என் மறதி நன்று நன்று!" எனலும்,

சுசீலை "தலைவ! யாவர்க்கும் மேலான கண்ணனைக் காணச்செல்லின், கிட்டாத காரியம் யாதுளது? ஈங்கு ஓங்கி உயர்ந்து நிற்கும் மாளிகை கண்ணனது அருளால் அமையப் பெற்றது. இன்னும் மற்றுள்ள செல்வங்களும் அப்பெருமானது பேரருளால் கிடைத்தவை. தாங்கள் வாய்திறந்து கேளாது போயினும், தங்களை வறிதேவெறுங்கையுடன் கண்ணன் அனுப்பிவிடுவரோ; இனி நமக்கு ஒரு குறைவுமில்லை. நம் அருமை மக்

களும் வயிறு நிரம்ப உண்டு களித்தனர். இதுவே நான் விரும்பியது" என்றனள்.

அதுகேட்டதும், கண்ணனது அருளைக் குசேலர் முன்னையிலும் பன்மடங்கு துதித்து, அளவிலா ஆனந்த மெய்தினர்.

தர்மராஜனும் சுணங்கனும்

அண்டினவர்களை ஆதரித்த அருங்குணம்

பாரத யுத்தத்தில் பாண்டவரனைவரும் வெற்றிபெற்ற பின்னர், சிறிதுகாலம் தருமவரசு புரிந்ததும், தங்களுக்கு அந்தியகாலங் கிட்டியதை யுணர்ந்தனர். ஆகவே அதற்குமுன், பூப்பிரதட்சணம் செய்ய உத்தேசங்கொண்டு, தங்களுடைய பேரனும் பரீட்சித்து என்பானுக்கு முடிசூட்டினர்.

சூட்டியதும், பூமியை வலம்வரத் திரௌபதியுடன் புறப்படுகையில், நகரமாந்தர் அனைவரும் அவர்களைவிட்டுப்பிரிய மனமில்லாது, உடன் வந்தனர். அது கண்ட தருமபுத்திரர், அவர்களுக்கு ஏற்ற புத்திமதியும் தேறுதலுஞ் சொல்ல, அவர்கள் ஒருவாறு தேறியிருந்தனர்.

ஆயினுமென்ன? தாயைப் பிரியும் கன்றுபோல் நகரமாந்தர் கதறினர் என்றே சொல்லவேண்டும்.

அச்சமயம் நாயொன்று அப்பாண்டவரைப் பின்தொடர்ந்தது. குடி ஜனங்கள் அனைவரும் நின்றுவிட, நாய்மட்டும் உடன் வருவதைககண்ட தருமரொழிந்த மற்றையவர் “ ஆ! இதென்ன விந்தை! இச்சுணங்கன் நம்முடன் வருவானேன் ?” என்றெண்ணி, அதனைத் துரத்தினர்.

ஆயினும் நாயோ நிழல்போல்விடாது பின்பற்றியது. பின்பு ஹஸ்தினபுரத்திலிருந்து கன்னியாகுமரி வரையிலுமுள்ள சிவஸ்தலங்களையும், விஷ்ணு ஸ்தலங்களையும் பாண்டவர் தரிசித்துக்கொண்டு, மேற்கு முகமாய்த் திரும்பி, முடிவில் துவாரகையை அடைந்து அங்குள்ள க்ஷேத்திரங்களையும் கண்ணாரக்கண்டு துதித்த பின்னர், இமயமலையின் சாரல் சேர்ந்தனர்.

சேர்ந்ததும் பாஞ்சாலிமுதல் பீமன் வரையில் ஐவரும் ஆவி துறந்து உயர்பதமடைந்தனர். எதுவும் விதியின் பயனென்று எண்ணிய தருமர், தமது தம்பிமாரும் மனைவியும் ஆவி துறந்ததற்குச் சிறிதும் மனம் வருந்தாது, முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

அச்சுணங்கன் மட்டும் அவரைத்தொடர்ந்து சென்று கொண்டேயிருந்தது. பாரதப் போரில் தருமயுத்தம் புரிந்ததுமன்றி, மனுநெறியின் வண்ணம் நீதி செலுத்தியும் வந்ததனால், “தருமர் என்ற பெரும் பெயர் இவருக்கே தகும்” என்று அனைவரும் கொண்டாடும் புகழ் படைத்த தருமபுத்திரரின் முன்பு தேவேந்திரன் இமையோர் பலரும் புடைசூழப் புஷ்பகவிமானத்துடன் தோன்றினன்.

தோன்றவே அவர் பெரிதும் களிகூர்ந்து தேவர்கோனையும் மற்றுமுள்ள விண்ணவர்களையும் வணங்கி நின்றார்.

உடனே தேவேந்திரன் “ஐயனே! கடல்சூழ்ந்த காசினியை மனுநெறிப்படி அரசு செலுத்திவந்த தாங்கள் நடத்திவருவதை நாங்கள் கண்டு மனம்பொறோம்.

ஆதலின் இத்தெய்வீக விமானத்தில் மனமுவந்து எழுந் தருளவேண்டும்" என்றனன்.

தர்மர் :—"இமையவர் தலைவ! ஒரு சரீரத்தில் பஞ்ச பூதங்களும் அமைந்திருப்பதேபோல், நாங்கள் ஐவர் சகோதரர் தோன்றினோம். என்னையொழிந்த மற்ற நால்வரும் ஆவி நீத்தனர். அன்றியும் எங்கள் ஐவ ரிடமும் அத்தியந்த அன்புகொண்ட பாஞ்சாலியும் மரித்தனள். நானொருவன் தன்னந் தனியனாயினேன். ஆதலின் இச்சமயம் நான் மாத்திரம் இவ்விமானத்தில் ஏறிக்கொள்ள மனமொப்புவது எங்ஙனம்?"

தேவேந்திரன் :—"தர்ம பூபதியே! உமது தம்பிமார் நால்வரும் பத்தினி பாஞ்சாலியும் இச்சமயம் தேவ பதவியை அடைய நல்வினைப்பேறு செய்தார்களில்லை. ஆதலினால், வரும்வழியிலேயே அவர்களது ஆவி பற ந்து போயிற்று. அவ்வாறாயினும், சிறிது காலத்திற் கெல்லாம், அவர்களை உயர்பதவியிற் காணலாகும். அவ் ஐவரைக் காட்டிலும் தாங்கள் தர்மத்தில் சிறந்து விளங்கியதனால், உமக்கு உடலுடன் இமையவர் பதி யை எய்தும் பேறுண்டு. ஆதலின் மனமொருமித்து இவ்விமானத்தில் ஏறிக்கொள்வீராக."

தர்மர் :—"விண்ணவர்க்கு இறைவ! தாங்கள் சொல்லி வந்ததெல்லாம் மெய்தான். ஆயினும் நாங்கள் ஹஸ்தினபுரியை விட்டுப் பயணமானது முதல், இந்நாய் எங்களுடன் வந்தது. என் தம்பிமார்கள் ஒவ்வொருவ ராய் வழியில் நழுவிப் போனார்களாயினும், இந்நாய் ஒன்றே என்னை விடாது பின்பற்றியது. ஆதலினால் இந்நாய் என்னையே நம்பிவந்ததென்பது வெளிப்படை.

நான் அடையும் பதவியை இச்சுணங்கனும் எய்தவேண்டும். இவ்விமானத்தில் முதன் முதல் நாய்க்கு இடமளித்தல் பொருந்தும். அவ்வாறே அருள்புரிவீராக!

தேவேந்திரன் :—"பஞ்சவர் திலக! நன்று நன்று தாங்கள் கேட்பது! தேவ விமானத்தே நாய்க்கு இடமளிக்க வேண்டுமென்பது எங்ஙனம் பொருத்தமாகும்? பொருத்தமாயினும், புண்ணியர்க்கன்றி வேறெவர்க்கும் இவ்விமானம் இடங்கொடாது. தாங்கள் அறியாத நீதி சாஸ்திரங்கள் உளவோ? இந்த ஈனவிலங்கின் காற்று, நிழல், உதறியதுகள், படுத்த இடம், வாய்வைத்துப் புசித்த சேஷம், ஆகிய அனைத்தும் நிஷேதமென நூல்கள் கூறுகின்றனவன்றோ? ஞானமும் கல்வியும் நயந்த நூல்களும், ஈனர் விஷயத்தில் கையாளப்படுதல் பெருமையன்று. அங்ஙனமிருக்க நாய்க்கு இடமளித்தல் மனத்தாலும் சிந்திக்கக்கூடாத காரியம். ஆதலின் அதனை மறந்து, தயைபுரிந்து விமானத்தில் வீற்றிருப்பீராக."

தர்மர் :—"மகபதியே! உலகிற்கு ஆதிநாயகனும் பரந்தாமனுக்கு மைத்துனனாய்த் தோன்றிய மகிமையினாலும், ஏதோ நல்வினை செய்தேனென நீங்கள் அனைவரும் பகர்வதனாலும், இவ் விமானத்தின்மீது வீற்றிருக்கும் பெரும்பேறு பெற்றேன். அங்ஙனமாக, என்னையண்டி வந்தவர்களை விட்டுவிடுதல் அழகுமன்று அறமுமன்று. நம்மைத் தஞ்சமென வந்தடைந்தோரிடம் கண்ணோட்டமில்லாத கண்ணை ஒன்று நாம் பெண்பேனோ? ஒன்றுத என்பெண்பேனோ? இன்தசைதான் என்பேனோ? பின், என்னென்று சொல்வதெனப் பெரியோர் கூறியிருக்கின்றனர்! முன்னம்

மார்க்கண்டேயருக்கு வயது பதினாறேயென்றருளிய பரமசிவன், பின்னாளில் சாவை அஞ்சினேனென்று அடைக்கலம்புகுந்த மார்க்கண்டேயருக்கு அபயமளித்து, வயது என்றும் பதினாறென வாமருளிக் காத்திருப்பதை அனைவரும் அறிவர். ஆதலின் முன்பே நமக்கு வழிகாட்டி யிருக்கும் ஈசனைப்போலவே, எவரும் தம்மையடைந்தோரைப் புரத்தலன்றோ பெருமையாகும்? நாயை நட்டாற்றில் விட்டுவிட்டு, நான் மட்டும் விமானத்தில் ஏறேன்.

" அன்றியும் ஈசன் எவ்வுயிரினும் நிறைந்து குடிகொண்டிருக்கிறானாதலின், நானென்றும், நீ யென்றும், நாயென்றும் வேற்றுமை பாராட்டுதல் விவேகமாகாது. இந்நாய் விலங்குகளில் கடையதாயினும், ஆதிமுதல் என்னுடன் விடாது பூமியை வலம் வந்து, இச்சமயம்தேவர் பலரையும் கண்ணாரக் கண்டு தரிசித்திருக்கும்பொழுது இதுவும் நல்வினைப் பயனைத் தேடிக்கொண்டுள்ளதென்றே மதிக்கவேண்டும். ஆதலின், எனக்கு வாய்க்கும் பலன் நாய்க்கும் வாய்த்தல் சால்புடைத்து. இது சாதாரண நாயாக இருந்திருப்பின், தேவரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றிராது.

" ஆகவே இந்நாய்க்கு முதலில் விமானம் கிடைப்பின், பின்னர் நானும் விமானத்தில் ஏறத்தடையில்லை."

தேவேந்திரன் :—" ஜீவராசிகளில் மனிதரே தேவர் பதவிக்கு உரியோர். மற்ற ஜீவராசிகளோ தாம் தாம் செய்யும் நல்வினையின் பயனால், படிப் படியாக உயர் பிறப்பெய்தி, முடிவில் மனிதப் பிறவி யெடுத்து அப்பால் தேவர்பதம் பெறலாகுமேயொழிய, திடீரென

நாய் தேவர்பதவி எய்தல் ஒண்ணாது. இச்சமயம் இந்நாய்க்கு நீங்கள் விரும்பிய வண்ணம், தேவர் பதமளிப்பின், தர்மநீதி தவறிப்போம். எல்லாமறிந்திருந்தும் ஏதுமறியாதார்போல் வாதாடுவது சரியன்று. தாங்கள் இத்துணை தூரம் நாய்க்குப் பரிந்து பேசுவதால் முதலில் இதற்கு மனிததேகம் அளித்துப் பின்னர் தேவ பதவியை எய்தச் செய்கிறோம்."

தர்மர் :—"அமரர் தலைவ! நம்பின பேர்களைக் கைவிட்டவன், மறைவலாளரைக்கொன்றவன், ஆகிய இருவர்க்கும் ஒரேவித தண்டனையென்று நூல்கள் முழங்குகின்றன. ஆதலால் ஒருகாலும் மாபாதகத்திற்கு ஆளாகேன், இச்சமயம் நாயைக் கைவிட்டு விடுவேனாயின், இவ்வளவுகாலம் நான் செய்துவந்ததாக நீங்கள் கூறும் நல்வினைப்பயன் கைகூடாது போய்விடுமே. ஆதலினால், என் வேண்டுகோளுக் கிணங்கி இந்நாய்க்கும் நற்பதவியளித்தல் வேண்டும்."

தேவேந்திரன் :—(மனங்களித்து) "அரசே! மனிதரிடத்துக் காட்டவேண்டிய அன்பை, நாயினிடத்துப் பாராட்டுவது ஒவ்வாது. மாபாதகத்ாலன்றோ நாய்ப்பிறவி வாய்க்கின்றது? நாய் முகர்ந்த பிச்சிலைத் தொட்டால் எவ்வளவோ கேடுகள் விளையுமென்று சாஸ்திரங்கள் சாற்றுகின்றன. தீயோரைச் சேரினும் தீயோர்க்கு உதவி புரியினும், அத்தகையோர் பதவி யிழப்பர் என்றிருத்தலினால் நாயை மறந்து, வலிய வந்திருக்கும் விமானத்தைத் தட்டிவிடாது ஏறுவதே உத்தமம். அந்தோ! உடன் வந்த தம்பிமார், அருமை மனைவி ஆகிய இவர்களுக்குப் பரிந்து பேசாது, நாயினிடம்

இவ்வளவு பரிவு கூர்தல் சரியன்று. வேண்டாம்! வீண் பிடிவாதம் வேண்டாம்."

தர்மர் :—"தாங்களோ என் தம்பி விஜயனுடைய தந்தையாவீர், தாங்கள் என் வேண்டுகோளுக் கிணங் கின், இந்நாய்க்கு அரும்பதவி அளிக்கலாகும். மன மிருக்குமேல் கிட்டாத காரியம் எதுவுமில்லை. என் னையே தஞ்சமென நம்பிவந்த நாயைக் கைவிட்டு, நான் மாத்திரம் நலம் பெறுவதென்றால், நல்லோர் நகைக்க இடமுண்டாகும். அண்டினபேரை ஆதரிப்பதினும், மோட்ச பதவி பெரிதென ஒருநாளும் மதியேன். முன்னம், தம்மைச் சரணம் புகுந்த புறவினிமித்தம் சிபிச்சக்கரவர்த்தி தமது உயிரையே வழங்கித் தராசுத் தட்டில் ஏறினரென்றால் யானும் அவ்வண்ணமே செய் யச் சித்தமாயுள்ளேன். மேக வாகனனே! என் மீதிரங்கி இந்நாயையும் விமானத்தில் அழைத்துச்செல்ல மனமொப்பவேண்டும். எனக்கு யாது விளைவதாயிருக் தாலும் இதுகாறும் என்னுடன் வந்த நாயைக் கை விடேன். இது சத்தியம்."

இவ்வண்ணம் தருமபுத்திரர் பேசிவந்ததைக்கேட்டுத் தேவர் அனைவரும் ஆனந்தித்திருக்கையில், இந்திர ஜாலத்தியற்கையொத்து, நாயாய் நின்ற ஜீவன் யம தர்மனாக மாறவே, அனைவரும் வியப்பெய்தினர். பின்பு யமன் தனது புதல்வனும் தர்மராஜனை மார்புறத் தழுவி உரைக்கும் :—

"அப்பனே! உனது சத்தியம், ஒழுக்கம், அடைந் தோரைப் புரக்கும் மேன்மை, முதலிய அருங்குணங் களை அனைவர்க்கும் அறிவிக்கும் வண்ணம் இவ்வண்

ணம் உன்னைப் பின்தொடர்ந்தேன். உனது அரும் பெருங் குணங்களைக் கண்டு மகிழாதார் எவரேனு முளரோ ?

" ஆதிகாலத்தில், நீங்கள் ஐவரும் பாஞ்சாலியுடன் வனவாசஞ் செய்தபொழுது, துரியோதனனது தூண்டுதலினால், காளமாமுனி கொடிய வேள்வியொன்று இயற்றினர். அதில் ஒரு பூதங் கிளம்பியது. உங்களைக் கொன்று தீர்க்கும் வண்ணம் அம்முனிவனது ஏவலினால் பூதம் புறப்பட்டுவந்ததை நான் உணர்ந்தேன். உணர்ந்ததும், ஒருமான்போல் தோன்றி, முனிவரது அரணிக்கட்டையையும் மான் தோலையும் கவர்ந்து சென்றேன்.

" அம்முனிவர் உங்களை யடைந்து குறையிரக்க, நீங்கள் ஒவ்வொருவராக என்னைத் தொடர்ந்து வந்தீர்கள். உடனே நான் ஒரு நச்சுப்பொய்கையை உண்டாக்கினேன். தாக விடாயைத் தணித்துக் கொள்ளவந்த உன் தம்பிமார் நால்வரும் அந்நீரைப் பருகி ஆவி நீங்கினர். நீயும் அவர்களைத் தேடி அப்பொய்கையின் அருகே வந்ததும், சோர்ந்து போயினை. அப்பால் உங்களைத் தேடிவந்த பூதம் அத்தடாகத்தை யடைந்தது. நீங்கள் ஐவரும் மூர்ச்சையற்றுக் கிடப்பதைக் கண்ட அக்கொடிய பூதம், அம்முனியையே பட்சித்துப்போயிற்று. பின்பு நான் அந்தரத்தே தோன்றி, உனது தம்பியர்களில் ஒருவரையே பிழைப்புமூட்டுவேன் என்றுரைத்த வளவில், நீ 'என் மாற்றாந்தாயின் புதல்வனை நகுலன் உயிர்பிழைக்க அருளவேண்டும்" என்றாய். அச்சமயம் உனது குணாதிசயத்தை அறியலானேன்.

இச்சமயமோ, உனது பெருங்குணத்தைத் தேவர்க்கு நிரூபிக்கும் பொருட்டே, நாயுருவமெடுத்து உன்னுடன் விடாதுவந்தேன். குருகுல திலகமே! உன்னொருவனால் உன் குலத்தார் அனைவரும் பெருமை பெறுகின்றனர். உன்னையொப்பார் யாவருளர் இப்புவிதனில்!"

இவ்விதம் யமன் உரைக்கக் கேட்ட மகபதியும் தேவரும் ஆனந்தக் கடலில் ஆழ்ந்து, தர்மராஜனது குணாதிசயங்களை மனமார வாழ்த்தி, அவரை விமானத்திலேற்றி வெகு விமரிசையுடன் இந்திரவுலகிற்கு அழைத்துச் சென்றனர்.

பிருதிவி ராஜன்

அஞ்சா நெஞ்சு படைத்த மன்னர் திலகம்

நம் பரதகண்டத்தின் வடபாரிசத்தே, கூர்ஜரம், டெல்லி, மாளவம், கானுஜ் என நான்கு நாடுகள் உண்டு. அந்நாடுகளைப் பரிபாலித்து வந்த நரபதிகளே இப்பரதகண்டம் முழுவதையும் தங்களுக்குள் பங்கிட்டு ஆட்சி செய்து வந்தனர்.

அந்நாடுகளுக்கெல்லாம் திலகம்போல் விளங்கி வந்தது டெல்லிமா நாடு. அந்த டெல்லிமா நாட்டை ஆண்டு வந்தான் பிருதிவிராஜன் என்னும் மன்னர்பெருமான். அவ்வேந்தனுக்கு வீரவர்மன் என மற்றொரு நாமம் வழங்கி வந்தது.

அவ்வரசிளஞ் சிங்கமோ ஓவியத்தும் எழுதவொண்ணா உருவத்தான், போரில் பகைவரைப் புறங்கண்டன்றிப் போகாதான். குதிரையேற்றத்தில் நகுலனை யொப்பான். வில்லாளிகளில் முன்வைத்து எண்ணத்தக்கோன், அன்றியும் மனுநெறியின் முறை பிறழாது அரசு புரிவோன்.

இத்துணை ஏற்றம் வாய்ந்த அவ்வரசிளங்காளை ஆட்சி செய்துவந்த காலத்து, முகம்மது என்னும் துருக்கவரசன் அந்நாட்டின்மீது அறுமுறை படையெடுத்து வந்தனன். வந்துமென்ன?

ஒவ்வொரு முறையும் வீரவர்மராஜனது சேனையினால் முறியடிக்கப்பட்டு, உயிர் தப்பினால் போதுமென ஓடி-

விட்டான். ஆகவே, வீரவர்மனது வெற்றியும் புகழும் உலகெங்கும் பரவியிருந்தன. இது நிற்க,

மாளவ தேசத்தை ஆண்டுவந்த அரசனுக்கு அந்திய காலம் கிட்டிவிட்டது. அம் மன்னவனுக்கு மைந்தனில்லை. ஆதலின், தன் மகளின் குமாரனாகிய வீரவர்மனுக்கே அந்நாட்டின் அரசுரிமையை அளித்து ஆவி துறந்தான்.

கானூஜ் நாட்டின் பூபதியோ மாளவ மன்னனது சகோதரியை மணந்து கொண்டவன். ஆதலினால், மாளவ நாட்டைத் தான் அடையவேண்டுமென அவ் விகாதன் வெகு நாளாய் ஆவல் கொண்டிருந்தான், அந்த எண்ணமோ மண்ணைக் கவ்வியது. ஆதலின், வீரவர்மனிடத்து அவனுக்கு மிகுந்த அஸூயை தோன்றியதென்பது நாம் சொல்லாமலே அமையும். அதிலும், தாயாதிக் காய்ச்சலென்னும் கொடிய நெருப்பு நாளுக்குநாள் மூளத்தலைப்பட்டது. ஆயினும், வீரவர்மனது போர்வன்மையை முன்னே கண்டறிந்திருக்கும் விகாதராஜனோ வீரவர்மனுக்கு எத்தீங்கும் செய்ய முடியவில்லை.

ஈதிங்ஙனமிருக்க, அவ்விகாத வேந்தனுக்கு ஸம்யுக்தை என்னும் புதல்வியிருந்தனள். அக்குமரியின் செல்வப்பெயர் சந்திரலேகை. அம்மங்கையோ ஆடவர் கண்களைக்கவரும் வனப்புடையாள். ஆடல் பாடல்களில் அரம்பையாதி கன்னியரினும் மேம்பட்டவள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நற்குணங்களையும் பேரணியாகக் கொண்டவள். நற்றுண நற்செய்கைகளுக்கு உறைவிடமானவள்.

ஆகவே, அங்நங்கையின் எழில் நலத்தையும் அறிவு முதிர்ச்சியையும் அறியாதார் யாவருமில்லை. ஆடவர் திலகமான வீரவர்மனும் அதனை உணர்ந்திருந்தனன். ஆதலின், அவளையே மணந்துகொள்ள வேண்டுமென்ற பேரவா அவனிடம் குடிகொண்டிருந்தது.

ஆயினுமென்ன? தன் வைரியின் மகளை மணம்புரிந்து கொள்வது எங்ஙனம்? சமயம்வாய்த்தால் வீரவர்மனைத் தொலைத்துவிடக் காத்திருக்கும் விகாதன் தன் செல்வக்குமரியை வீரவர்மனுக்குக் கொடுக்க எவ்வாறு மனமொப்பக்கூடும்! ஆகவே, வீரவர்மனது எண்ணம் "கிட்டாப்பழத்திற்குக் கொட்டாவி விட்டது" என்னும் பழமொழி போலிருந்தது.

வீரவர்மனது மனக்கோளை உய்த்துணர்ந்த அவனது வளர்ப்புத்தாய், அக்காளையின் அனுமதிபெற்று, அக்கானூஜ் நாடடைந்தனள். அடைந்ததும், அவ்வரசனது அந்தப்புரத்தே தாதிவேலையிலமர்ந்தாள்.

அதிர்ஷ்டவசத்தால் அத்தாதியின் அரவணைப்பைக் கண்ட சந்திரலேகைக்கு அத்தாதியிடம் அடங்கா மகிழ்ச்சியும் அன்பும் தோன்றிவிட்டன. அதுவே தக்க சமயமென்றறிந்த தாரையென்னும் அத்தாதி எந்நேரமும் சந்திரலேகையை விட்டுப் பிரியாது, அவளண்டையிலேயே இருந்து, அவளது மனமுவக்கும் வண்ணம் வேண்டிய தொண்டுகளைப் புரிந்துவந்தனள்.

தாரையின்மீது சந்திரலேகைக்கு உண்டான அன்போ பிறைச் சந்திரனைப்போல் நாள்தோறும் வளர்ந்து கொண்டிருந்தது. ஒருநாள், அவ்விருவரும் ஏகாந்தமாய் வெண்ணிலவில் வீற்றிருக்குங் காலத்து, வீரவர்மனது

வீரதீரம், அறிவு ஆண்மை, அரசுபுரியும் மேன்மை முதலிய அருங்குணங்களைச் சந்திரலேகைக்கு அத்தாதி எடுத்துரைத்தனள்.

ஆதலின், அவ்வரசிளஞ் சிங்கத்தையே நாயகனாக அடைதல் வேண்டுமென அந்நங்கை நிச்சயித்து விட்டாள். இது இவ்வாறாக,

அக்குமரி மங்கைப்பருவம் உற்றனள். அதனையறிந்த விகாதராஜன் தன் புதல்வியின் சுயம்வரத்தைக் குறித்து மன்னர் பலர்க்கும் நிருபம் வரைந்தான். அந்நங்கையின் வனப்பையும் அறிவையும் முன்பே உணர்ந்திருக்கும் மன்னிளங்குமரர் அனைவரும் மகிழ் பூத்து, சந்திரலேகையின் மணமாலையைப்பெற ஆவல் கொண்டவர்களாய், அக்கானூஜ் நாடடைந்தனர். நம் வீரவர்மனுக்கோ மணவோலை அனுப்பப்படவில்லை.

ஆகவே, அவனது மனநிலைமை எவ்வாறிருந்திருக்குமென்பதை நாம் விரித்துரைக்கவும் வேண்டுமோ? வீரவர்மனுக்கும் நிருபம் வரையப் படுமென யாவர் நினைத்திருப்பர்? ஒருவருமிலர்.

விதியுளதேல் கிட்டாத காரியம் யாதொன்றுமில்லை. வீரவர்மனுக்கு நிருபம் வரையாத செய்தியை நம் சந்திரலேகையும் உணர்ந்தனள். அதனால் அவளுக்குண்டான துயரம் சொல்லிமுடியாது. இடியேறுண்ட நாகமேபோல் அவள் அறிவழிந்து ஆவிசோர்ந்து மூர்ச்சித்தனள். பல சொல்லிப் பயனென்ன? சுயம்வர முகூர்த்தகாலம் நெருங்கிவிட்டது.

உடனே தாதியர் சந்திரலேகையை மஞ்சனமாட்டி,

ஆடையணிகளால் அலங்கரித்ததும், பலவகை வாத்தியமும் கடல்போல் முழங்க, மங்கையர் வாழ்த்தெடுப்ப, வேதியர் ஆசிகூற, அம்மங்கையை மணமண்டபத்திற்கு அழைத்துச் சென்றனர். நம் நாட்டுப் பெண்மணிகள் கூறும் வண்ணம் சந்திரலேகையின் முகத்தில் ஈயாடவில்லை.

வேதனிட்ட விதிப்படியே ஆகுமெனத்தேர்ந்த அக்கன்னி, அடிமேல் அடிவைத்து, ஓவியமேபோல் மண்டபஞ் சேர்ந்தனள். மணமகளின் வருகையைக் கண்ட மன்னிளங்குமரரின் முகங்களோ கதிரவனைக் கண்ட தாமரையேபோல் மலர்ந்திருந்தன.

சந்திரலேகையின் மணக்கோலை அக்குமரர்கள் எங்ஙனம் அறியமுடியும்? பாற்கடலில் தோன்றிய அமுதத்தை உண்ணுவோம் உண்ணுவோம் என்றேங்கி எதிர்பார்த்திருந்த அசுரரேபோலிருந்தன ரென்று சொல்லத் தடையில்லை. இனி, சந்திரலேகை மணமண்டபம் புகுந்ததும், அவளுடன்வந்த குதிரைவீரரும் யானை வீரரும் அம்மண்டபத்தின் வாயிலில் நின்றுவிட, அக்குதிரை வீரர்களில் ஒருவன் சிந்திப்பானாயினன்:—

"இதென்ன? விந்தையினும் விந்தை! நம்மைப்போல் மரத்தாலாகிய ஓர் உருவம் வாயிலண்டை வைக்கப்பட்டிருக்கிறது. ஓ! நம்மை அவமதிக்க எண்ணியல்லவோ விகாதராஜன் இப்பதுமையை ஈங்கு நிருமித்தனன். போலும்! அவனுடைய அகந்தையை ஒரு கணத்தில் குலைத்து விடுவதன்றோ நம்போன்ற வீரரின் கடமையாகும். இனி, மதியாதார் தம் முற்றம் வந்து நின்ற நம் மடமையை என்னென்று சொல்வது?

“ஆயினும், அக்கன்னியர் திலகத்தினிமித்த மல்லவா இவ்வாயிலினிடத்தே வந்து காத்திருக்கவும் நேர்ந்தது!

“அம்மங்கையின் உள்ளக்கருத்தைத்தெள்ளென அறிந்த பின்னரே, நமது வீரத்தை வெளிப்படுத்தல் பொருந்தும். அதுவுமன்றி, அதன்பின்பே விகாதராஜனைப் பங்கப்படுத்த முயலுவதும் சாலச்சிறந்ததாகும், இன்னும் சில நிமிஷங்கள் பொறுத்திருப்போம் நம் ஆண்மையை வெளிப்படுத்த!”

இங்ஙனம் வீரனொருவன் படபடப்புடன் நின்றிருக்கையில், தாதியர் அந்நங்கையர் திலகத்தை மண்டபத்தின் நெடுக அழைத்துச் சென்று, அங்குள்ள ஆதனங்களில் வீற்றிருக்கும் வேந்தர்களின் வீரப்பிரதாபங்களை விரிவாய்ச் சொல்லினர். அவைகள் அனைத்தையும் சந்திரலேகை காதுகொடுத்துக் கேட்கவில்லை. தான் கருதிய காதலன் அங்கில்லாததே அதற்குக் காரணமாகும். முடிவில் மண்டபத்தின் கடைசிப்பீடத்தில் அமர்ந்திருக்கும் அரசகுமாரனருகே சந்திரலேகை செல்ல, அவனது குணாதிசயங்களையும் தாதிகள் எடுத்தியம்பினர்.

அப்பொழுது, சந்திரலேகை தனக்கே மாலையிடுவள் என அக்குமரன் எண்ணியிருந்தான். அங்ஙனமே மற்றைக் குமாரும் மதித்திருந்தனர். ஆயினும் வீரவர்மனை யன்றி வேறெவர்க்கும் சந்திரலேகை மாலை சூட்டாளென்பது திண்ணமன்றோ?

சந்திரலேகை சிறிது திரும்பி, மண்டபத்தின் வாயிலண்டை நோக்கினள். அங்கே மரத்தாலாகிய பிம்பம்

நிற்பதைக் கண்டனள். கண்டதும் மதிகலங்கி மெய் தளர்ந்து,

'அந்தோ! நம் காதலனை இவ்வாறு அவமானப் படுத்த நம் தந்தை எண்ணியதும் காலத்தின் கோலமே! ஆயினுமென்ன? இக்காதலனைத்தவிர்த்து வேறெவர்க்கும் மாலைசூட்டேனென்று கொண்ட நோன்பும் அன்பும் பொய்த்துப் போமோ''

என்றன்னி, அச்சிலைக்கே மாலைசூட்டினள். அவ்வளவுதான் தாமதம்!

முன்னம் பலவாறு சிந்தித்திருந்த அக்குதிரை வீரன் திடீரெனப் பாய்ந்து, அந்நங்கையைப் பரிமீதிட்டு, "நானே பிருதிவிராஜன் என்னும் வீரவர்மன்" என்று செப்பிச் சென்றுவிட்டனன். அவ்வீரனுக்குப் பின்னே மற்றொரு தீரபுருஷனும் மெய்காவலாக உடன்சென்றான்.

கள்ளத்தனமாய் நங்கையைத் தூக்கிசெல்வது வீரர்க்கழகாமோவென்று சிலர் நினைக்கக்கூடும். சுயம்வர தினத்தன்று நங்கையொருத்தி ஒரு குமரனுக்கு மாலைசூட்டினும், அந்நங்கையை ஆண்மையினால் கொண்டு போய்விடுபவனுக்கே அந்நங்கை உரியவள் என்பது சுயம்வர தர்மத்தின் கொள்கை.

அப்பால், வீரவர்மன் சிறிது தூரஞ் சென்றதும், டெல்லிமாநகரச் சேனைகள் அங்கே காத்திருந்தன.

உடனே வீரவர்மன் அங்கு ஓரிடத்தில் சந்திரலேகையைத் தகுந்த பாதுகாப்பில் வைப்பதற்குள், விகாத வேந்தனது நால்வகைச் சேனையும் மன்றல்பெறவந்திருந்த மன்னிளங்குமரரின் படைகளும் வீரவர்மனது

சேனையைத் தாக்க முயன்றனர். வீரவர்மனும் தன் படையின் தலைமையை வகித்து, யுத்தஞ் செய்யத் தொடங்கினன். அந்த யுத்தத்தின் கோரம் செப்பத் தரமன்று! எனினும், போர்க்களமெங்கும் பிணங்கள் குவிந்து விட்டனவென்றே சொல்லவேண்டும். முடிவில் வீரவர்மனே வெற்றிமாலை சூடினன். விகாதராஜனும் அரசிளங்குமரரும் 'தலைதப்பியது தம்பிரான் புண்ணிய' மென்று புறங்காட்டி ஓட்டமெடுத்தனர்.

பின்னர், நம் வீரவர்மன் தன் நாடு சேர்ந்து, நல் முகூர்த்தமொன்றில் சந்திரலேகையை மணந்துகொண்டான். நகமும் சதையும்போல் அக்காதலர் இருவரும் ஒருமித்து இன்பக்கடலில் ஆழ்ந்திருந்தனர். இவ்வாறு ஆண்டுகள் சில கழிந்தன.

வீரவர்மனுக்குப் புறங்காட்டி யோடிய விகாதனோ எவ்வகையிலேனும் தன் பகைவனைத் தொலைத்துவிடப் பலவாறான சூழ்ச்சிகள் செய்து, முடிவில் அத்துருக்கவரசனும் முகம்மதின் நட்புக்கொண்டு எண்ணிறந்த சேனையுடன் டெல்லிமீது படையெடுத்து வந்தான்.

பாவியாம் விகாதவேந்தனது மதியீனத்தை என்னென்று சொல்வோம்? தன் மகளின் நலத்தை யாவது, அவளது காதலன் கதியையாவது அப்பாவி யோசித்துப் பார்த்தானில்லை! வரும்விதி வழியில் தங்குமோ? தங்காதல்லவா?

தன் மாமனும் முகம்மதும் தன் நாட்டின்மீது தண்டெடுத்து வந்திருப்பதை வீரவர்மன் அறியலானன். அறிந்ததும் வெகு பரபரப்புடன் தன் சேனையைத் திரட்டிக்கொண்டு, பகைவர்களைத் தாக்கப்

புறப்பட்டான். அச்சமயம் அபசகுனங்கள் பல தென்பட்டன. அவைகளை வெற்றிவீரன் பொருட்படுத்தாது முன்னோக்கிச் சென்றான். இருபக்கத்துச் சேனைகளும் தானேசுவரம் என்னுமிடத்தில் சந்தித்தன. அப்போரில் நேர்ந்த உயிர்ச் சேதம் கணக்கிடமுடியாது. அஞ்சா நெஞ்சுபடைத்த வீரவர்மன் பேராண்மையுடன் போர் புரிந்தானாயினும், முடிவில் படுகாயமடைந்து நிலத்தில் சாய்ந்தான். அக்கணமே அவனைப் பாதகர் இருவர் வஞ்சகமாய்க் கொன்றுவிட்டனர். அதனை யறிந்த விகாதன் "வெற்றி பெற்றோம்" என்று மனங்களித்தான். இதிலிருந்தே அக்கொடியோனது துர்எண்ணமும் அறிவின்மையும் வெளியாகும்.

ஈதிங்ஙனமிருக்க, அவ்வாசிளஞ்சிங்கம் போரில் மாண்டு போனதை நம் சந்திரலேகை யுணர்ந்தனள். உணர்ந்ததும், கோவென்றலறி அடியற்ற மரம்போல் நிலத்திற் சாய்ந்து, முன்னரே கொழுந்து விட்டெரிந்து கொண்டிருந்த வெந்தீயிற் குளித்து நாயகனைப் பின் பற்றினள். அக்காதலர் இருவரும் வெற்றுலகாம் இம் மண்ணுலகைத் துறந்தார்களாயினும், விண்ணுலகில் தேவர் போற்றக் களித்திருக்கின்றனர்.

தான் நெஞ்சால் நினைத்த காதலனுக்கே மாலையிட்டு, அவன் ஆவிபறந்ததும், அக்கணமே தானும் உயிர் துறந்து, தன் பதியுடன் தேவர் உலகில் மகிழ்ந்திருக்கும் அவ் வனிதா ரத்தினமாம் சந்திரலேகையின் புகழ் இன்றும் நாளையும் இந்நிலவுலகில் சரித்திர பூர்வமாய் நின்று நிலவுகின்றது!

நகுஷபூபதி நற்கதிபெற்ற கதை

ஒழுக்கமும் குணமுமே உயர்வளிக்கும்

பஞ்சபாண்டவர்கள் சூதாடி, நாடிழந்து, வனத்தே வசித்துவந்த காலத்தில், சிவபெருமானைக் குறித்து விஜயன் அருந்தவம் பூண்டு, பாசுபதம் பெற்று வந்தான். வந்ததும், தனது தமையனும் தர்மனுடன், தான் செய்திருந்த தவத்தின் வரலாற்றைக் கூற அனைவரும் ஆனந்தங்கொண்டனர்.

இவ்வாறிருக்க, ஒருநாள் வீமன் தர்மனது உத்தரவின்றி வனஞ்சேர்ந்து, அக்கானகத்தே வசித்திருக்கும் விலங்குகளை வேட்டையாடிக் களித்திருந்தான். அச்சமயம், அருகேயிருந்த மலைப்பாம்பொன்று அவ் வீமனை இறுகக்கட்டி விழுங்க யத்தனித்தது.

நமது புராணங்களிற் கூறும் வண்ணம் வீமன் பதினாயிரம் யானைகளுக்குள்ள பலம் பெற்றிருந்தும், அப்பாம்பினிடமிருந்து தப்பமுடியாமல் அதனிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்க நேர்ந்துவிட்டது. ஆகவே, வீமன் பெரிதும் வருந்தினனென்பது வியப்பல்லவே? அப்பாம்போ அவனது உடல் முழுவதையும் விழுங்கிவிட்டதாயினும், தலையொன்று மட்டுமே வெளியே காணப்பட்டது. தன்னாற் கூடிய வரையில், மூச்சை

யடக்கி அப்பாம்பினிடமிருந்து தப்பிப் பிழைக்க வீமன் முயன்றும் பயன்படவில்லை. ஆபத்துக் காலத்தில் ஆண்மை குன்றுவது வீரர்களின் இயற்கையன்றாதலால், வீமன் ஒரு சிறிதும் மனஞ்சோராது. அப்பாம்பை நோக்கி, "நாகராஜனே! யான் உனக்கு யாதொரு தீங்கும் இழைக்கவில்லையே! அங்ஙனமிருக்க நிரபராதியான என்னைப்பிடித்து விழுங்க முயலுவது நீதியாகுமோ?" என்று நயமாய் வினவலும், அம்மாநாகம் சொல்லும் :—

"அடே! வீமா? முன்னம் செழிப்புற்று ஓங்கித் தழைத்திருந்த காண்டவவனத்தை உன் தம்பியாகிய விஜயன் தீக்கிரையாக்கியதை மறந்து போயினையோ' அச்சமயம், அவ்வனம் அழிந்து சாம்பலாய்ப் போனதுடன், அதில் குட்டிகளுடன் வசித்துவந்த எங்கள் குலத்தினராகிய அரவங்கள் அனைத்தும் நெருப்பில் வீழ்ந்து வெதும்பிப் போயினவே!

"அதுவுமன்றி அஷ்டமஹா நாகங்களில் ஒன்றான தட்சகனுடைய பிள்ளையாம் அசுவசேனனை உன் தம்பி அர்ச்சுனன் வாலறுத்து வாட்டினான். இவ்விதம், உனது தம்பி செய்திருக்கும் கொடுமைகளை நினைக்க நினைக்க, யார்தான் மனம் நோகார்? உன்னைச் சேர்ந்தோர் புரிந்தபாவம் உன்னைச் சூழ்ந்து கொண்டது. அது காரணமாக, நீ இத்தருணம் என் வாயிற்சிக்குண்டாய். பழிக்குப்பழி வாங்கும் வண்ணம் உங்கள் குலத்தை நாசஞ்செய்யக் காத்திருந்த என் கையில் நீ அகப்பட்டுக் கொண்டது மிகவும் பொருந்தும்.

"மேலும், உங்களது தாயாதியாகிய துரியோதனனோ

எங்களை வேண்டிக்கொண்டான். அவனுக்கு உதவிபுரிவதாக நாங்கள் முன்பே வாக்களித்தோம். அதுபற்றியே அவன் கொடியில் நாங்கள் விளங்கிவருகின்றோம். நீயோ அவனுடைய தீராப்பகைவன். அவனோ எங்கள் குலத்தினருக்கு ஆப்தநண்பன். இத்தகைய காரணங்களால், உன்னை விழுங்கி, உன் உயிரைப் போக்க நான் துணிந்திருப்பது ஏற்கும்."

இவ்வண்ணம் அப்பேராவம் இயம்பவே, வீமன் "அந்தோ! கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோலாயிற்றே," என்று ஏங்கியிருந்தான்.

ஆயினும், ஆபத்துக் காலத்தில் தவறாது உதவி புரிந்துவரும் பரமசிவனைச் சிந்தித்த வண்ணமாய், நகமும் பல்லுமிழந்த சிங்கம்போல் அசைவற்றிருந்தான். இது நிற்க,

தன்னருகே தம்பியில்லாததுகண்டு தர்மன் திடுக்கிட்டு, 'வீமன் எங்கே? அவன் எங்குச் சென்றான்' எனலும், வீவன் காடுநோக்கி நடந்ததாக அறிந்துகொண்டான்.

உடனே, தனது மற்றைத் தம்பியருடன் பயணமாகி, வனத்தின் நடுவே புகுந்துபார்க்க, வீமனைக் காணவில்லை. ஆயினும், முடிவில், மலைப்பாம்பினது வாயிலகப்பட்டு மதிமுகமொன்றுமட்டும் வெளியே தோன்றும் வீமனைக்கண்டனன்.

கண்டதும், அவனுக்குத்தோன்றிய அச்சமும் நடுக்கமும் சொல்லிமுடியாது. எனினும், சற்றே மனந்தேறி அவ்வாரவத்தை யணுகி, "மாநாகமே! உன்னை மிகவும் வேண்டிக்கொள்கிறேன். உன் வாய்தனில் அகப்பட்டு

வருந்தி யிருக்கும் விமனை, என்மீது கருணை கூர்ந்து விட்டுவிடவேண்டும். உனக்கு வேண்டிய ஆகாரங்களை இக்கணமே கொண்டுவந்தளிக்கச் சித்தமாயிருக்கின்றேன்" என்று வேண்டினான்.

வேண்டியதும், அந்நாகம் தர்மனை நோக்கி "நரபதியே, உன்னை எல்லோரும் தர்மர் என்றழைக்கின்றனர். அஃது உண்மையாயின், நான் கேட்கும் சில தர்ம வினாக்களுக்கு நீ ஏற்றபதில் அளிக்கவேண்டும். அங்ஙனமாயின், உன் வேண்டுகோளைப் பூர்த்தி செய்யத் தடையிராது" எனலும்,

தர்மர் :—"நான் என்ன தர்மங்களை அறிந்துவிட்டேன்? நான் தர்மத்தின் உண்மைகளைச் சொல்லுவதில் கை தேர்ந்தவனல்லன். ஆயினும், ஏதோ தெரிந்த வரையில் உரைக்கின்றேன்," என்று வணக்கமாய்ப் பதிலளித்தான்.

பின்னர், அவ்விருவருக்கும் நடந்த சம்பாஷணை :—

நாகம் —"இப்பூமியில் அவதரித்திருக்கும் ஜீவராசிகளிற் சிறந்தது எது?"

தர்மர் :—"மனிதரே ஜீவராசியிற் சிறந்தோர்."

நாகம் :—"அம்மனிதர்களில் உயர்ந்தோர் யாவர்?"

தர்மர் :—"அந்தணரே யாவர்."

நாகம் :—"அவ்வந்தணர்களிலும் பெருமை பொருந்தியவர் யார்?

தர்மர்:—"வேத சாஸ்திரங்களைக் கற்றுணர்ந்த அந்தணர்கள்."

நாகம் :—"எவ்வாறு?"

தர்மர்:—"எவ்வாறெனில், வேதசாஸ்திரங்களைக் கற்

றுணர்ந்திருப்பதனுல், ஜீவராசிகள் என்றால் எவை? அவைகளிடம் நாம் எவ்விதம் நடந்துகொள்ள வேண்டும்? ஏன் அவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? ஈசன் யாவன்? அவனுடைய அருமைபெருமைகள் யாவை? ஈசனுக்கும் ஜீவராசிகளுக்கும் என்ன பந்தம்? முதலிய விஷயங்களை அவர்களே அறிந்து, அவ்வண்ணம் நடப்பர். ஆதலின், அத்தகைய அந்தணர்களே சிறந்தவராவர்.''

நாகம் :—'' அத்தகைய அந்தணர்க்குள்ள குணங்கள் யாவை?''

தர்மர் :—'' அடக்கம், வாய்மை, பொறுமை, அன்பு, அருள், ஒழுங்கு, ஜபம், தபம், முதலியன.''

நாகம் :—'' அவர்கள் எப்பொருளைப்பெறவேண்டும்?

தர்மர் :—'' காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் முதலியவற்றைப்போக்கி, கிட்டாததொன்றைப் பெற விரும்பாமல், இன்பம் துன்பம் இரண்டையும் ஒன்றுபோல் பாவித்து, இடுக்கண் நேர்ந்த காலத்தும் மனம்மழுங்காதிருக்கக்கூடிய சித்தநிலைமையாகிய பொருளைப் பெறல்வேண்டும்.''

நாகம் :—'' மேலே கூறிய குணங்களில் அவர்கள் குன்றுவாராயின், அவர்களை என்னென்று சொல்வது?''

தர்மர் :—'' அக்குணங்களில் ஒன்று குறையினும், அவர்கள் அந்தணர்க்குரிய பதவியை இழந்து விடுவதால், நாலாவது வர்ணத்தைச் சேர்ந்தவரென்றே சொல்லவேண்டும்.

நாகம் :—'' அஃதுண்மையே! ஆயினும், நான்காவது

வர்ணத்தான் மேலேகண்ட நற்குணங்களை ஒருங்கே நிரம்பப் பெற்றிருப்பின்?"

தர்மர் :—"பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னர் மனுவென்னும் மகான் தோன்றி, மனிதர்களுக்குரிய சட்ட திட்டங்கள் இன்னின்னவையென்று விதித்திருக்கிறார். அவ்விதி இக்காலத்தும் மனுநீதி என வழங்கப்பட்டு வருகின்றது. அந்நீதியில், மேலேகண்ட குணங்கள் நாலாவது வர்ணத்தானிடம் நிரம்பிக் காணப்படுமாயின், அவ்வர்ணத்தில் அவனைச் சிறந்த உத்தமனென அழைக்கலாமென்று கூறப்பட்டுளது."

நாகம் :—" அது மெய்தான்! அத்தகையோன் மோட்சம் பெற வழியுண்டா?"

தர்மர் :—" அக்குணங்கள் அமைந்திருப்பின், அவன் உயர்பதவி பெறலாகும்.''

நாகம் :—" எத்தன்மையான பதவி பெறலாம்?"

தர்மர்:—" இந்திரபதவி, குபேரபதவி, முதலியன அவரவர்செய்யும் நற்கர்மங்களுக்கு ஏற்றவாறு சித்திக்கும்?"

நாகம் :—" ஆனால் மோட்சபதவி பெறுவது எங்ஙனம்?"

தர்மர் :—" நான்காவது வர்ணத்தானிடம் அக்குணங்கள் யாவும் அமையப் பெற்றிருக்குமாயின், அவன் படிப்படியாக ஒவ்வொரு மேல்வர்ணத்திலும் தோன்றி முடிவில் அந்தணர் பதவி பெற்று, மோட்சம் பெறலாகுமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன."

நாகம் :—" அந்தணர் தமது குணங்களில் குறைந்து போனல்?"

தர்மர் :—" அவர்கள் கைவிட்ட குணங்களுக்கு ஏற்ற வாறு, ஒவ்வொருபடியாய்க் கீழ்வர்ணத்தில் வந்து ஜனிக்க வேண்டியதுதான்."

நாகம் :—" மீண்டும் அவர்கள் நற்கதி பெறுவதெவ் வாறு?"

தர்மர் :—" அவர்கள் தாங்கள் அடைந்திருக்கும் வர் ணத்திற்கு ஏற்றவாறு உரிய நற்கருமங்களைச் செய்து, படிப்படியாக உயர்ந்தவர்ணத்தில் ஜனித்து, முடிவில் மோட்சபதவி எய்தலாம். தவறின், அவர்களுடைய கதி அதோகதியாகுமென்னத் தடையில்லை. மலையின் மீது ள்ள பளுவானபாரம் செவ்வனே காக்கப்படாது போயின், அது தலைகுப்புறக் கீழேவிழுந்து விடுவது போல், அந்தணர் தமது ஒழுக்கங்களில் ஒருசிறிது தவ றினும், திடீரென்று தாழ்ந்த பதவியடைந்து வருந்த நேரிடும். மலையின் அடிவாரத்திலுள்ள பளுவை உச்சி யில் ஏற்றுவது எவ்வளவு கஷ்டமாகுமோ அவ்விதமே, அந்தணர் தம் பதவியினின்று தவறிக்கீழ்ப்பதவி சென்று விடுவாராயின், மறுபடியும் அவர்கள் மேற்பதவி யடைதல் மிகுந்த கஷ்டமென்பது வெளிப்படை."

நாகம் :—' ஆம் இதுகாறும் சொல்லிவந்த உண்மை களை ஒரேவாக்கியத்தில் சுருக்கமாய்ச் சொல்லுக?"

தர்மர் :—" ஒழுக்கமும் குணமுமே உயர்வளிக்கும்; ஜாதி அளிக்காது."

" மானிடர் தமது உயிரே மிகவும் அரிய பெரிய பொ ருளென்று மதித்திருக்கின்றனர். அவ்வுயிரினும் சிறந் த்து ஒழுக்கம். எங்ஙனமெனின், உயர்ந்தோர்க்கும் இழி ந்தோர்க்கும் ஒப்ப அவ்வொழுக்கம் மேன்மை தருகின்

றது. ஒழுக்கமாகிய குணமுடையவரே மேற் குடியிற் பிறந்தோரெனக் கருதப்படுவர். தமது ஒழுகத்திற் குன்றுவராயின், அந்தணரும் தமக்குரிய உயர்பதவி இழந்து, தாழ்ந்த பதவியில் விழுந்து, வருந்தநேரிடும். ஆதலின் யாவரும் ஒழுக்கத்தாலேயே மேம்பாடு அடைவரென்பது வெளிப்படை."

இவ்வாறு அவ்விருவரும் உரையாடிய பின்னர், யாவரும் கண்டு அதிசயிக்கும் வண்ணம், திடீரென அம் மாநாகம் அழகமைந்த மானிடதேகம் பெற்றது. வீமனும் விடுபட்டான்.

உடனே, அவ் வனப்பமைந்த புருஷன் தர்மனை மார்போடணைத்து, முகமலர்ச்சியுடன், "தர்மநந்தனு! அருங்குணங்கள் ஒருங்கே அமையப்பெற்ற புதல்வன் தோன்றின், அவனது நற்குண நற்செய்கைகளால் ஏழேழு ஜன்மமும் ஈடேறுமென்பதை உன்னிடமே உண்மையிற் கண்டேன்.

"எவ்வாறெனில், இப்பூவுலகம் முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டுவந்த யான் நூறுயாகங்கள் இயற்றி, இந்திரபதவி பெற்றும், விதிவசத்தால் மலைப்பாம்பாய்க் கிடக்க, இச்சமயம் உன்னைக் கண்டவளவில் பழையவடிவம் பெற்றதே யாகும்" என்று சொல்லவே, தர்மர் "ஐயனே! தமது வரலாற்றை விரிவாய் எடுத்துரைக்கலாகாதோ" எனலும், அப்புருஷன் பகர்வான்:—

"குழந்தாய்! தர்மபூபதியே! முன்னம் உங்கள் குலத்திற்கொரு திலகமாய் விளங்கிவந்தார் ஆயு வென்னும் அரசர்க்கரசர். யான் அவரது மைந்தனாக இப் புவியில் பிறந்தேன். என்னை நகுஷன் என்று அழைப்

பார்கள், சிறுவயதிலேயே, வேதம், சாஸ்திரம், புரா ணம், ஆகமம் இன்னும் அரசர்க்குரிய யானையேற்றம், குதிரையேற்றம், அஸ்திர சஸ்திரப் பயிற்சி முதலிய வற்றை என் ஆசிரியர் கற்பித்தனர்.

" பின்னர், நாளடைவில் நான் அரியணையில் வீற்றிரு ந்து கடல்சூழ்ந்த இக்காசினியை மனுநெறி பிறழா வண்ணம், ஏதோ தெரிந்தவரையில் ஆட்சிசெய்து வந் தேன். அக்காலத்தே என்முன் நிற்கும் பகையரசர் எவருமில்லையென்றே சொல்லவேண்டும்.

" ஆகவின், அந்தணர்களின் உதவி கொண்டு பல் வகைத்தான வேள்விகள் இயற்றி இமயவரைக் களிப் பித்தேன். அதுவுமன்றி, முனிவர்களின் பேரருளால் நூறு அசுவமேதயாகமும் புரிந்தேன். அது காரண மாக அமராவதி சேர்ந்து தேவர்க்கரசனுனேன்.

" ஆகவே, தேவர்பலரும் என்னை வந்து வணங்கும் உயர்பதவி பெற்றேன். பெற்றுமென்ன ? ஒருசமயம் வசிஷ்டர் முதல் ஸப்தமுனிவர்களும் பல்லக்குச் சும க்க, நான் அதில் ஏறிச்செல்லுகையில், அறியாமையி னுல், 'சீக்கிரமே செல்க' என்னும் பொருள் படும்படி 'ஸர்ப்ப ஸர்ப்ப' என்று அம்முனிவர்க்குரைத்தேன். அது தகாத கார்யமன்றோ?

" ஆகவினுல், அம்முனிவர்களிற் சிறந்த அகஸ்தியர் எனக்கு அறிவு புகட்டும்வண்ணம் என்மீது வெகுண்டு, 'ஸர்ப்பமாகக் கடவாய்,' என்று சபித்தனர். சபித்த அக்கணமே நான் மலைப்பாம்பானேன்.

" ஆதலினுல் எனது அறியாமைக்குப் பெரிதும் ஏங் கித் திகைத்த நான் முடிவில் அம்முனிவர் பெருமானை

யணுகி, ' அருந்தவம் இயற்றும் பெருமானே! அறிவிற் சிறியேன் செய்த பிழையைப் பொறுத்தருளி, இக் கொடிய சாபத்தை நீக்கவேண்டும்'' என்று மனமுருகிக் கேட்டு நின்றேன்.

"கருணாநிதியாகிய அம்முனிவர் கோமானும் என் மீதிரங்கி, 'அட பேதாய்! வெகுகாலமாகச் செய்துவந்த நல்வினையின் பயனை ஒருகணத்தில் இழந்து விட்டனையே! உனக்கு அறிவு புகட்டவே சாபம் நேர்ந்தது. இச்சாபத்தை உடனே மாற்றிவிடல் இயலாது.

"'ஆயினும் நீ வனங்களில் திரிந்துழன்று காலங்கழித்துவரின், உனது குலத்தில் தோன்றும் பஞ்சபாண்டவர் வனவாஸஞ் செய்யுங்காலத்து, வீமன் உன்கையிற் சிக்குவன். பின்னர் அவனைத் தேடிக்கொண்டு தர்மன் வருவான். அச்சமயம் தர்ம சாஸ்திரங்களைக் குறித்து நீ அவனுடன் உரையாடிய பின்னர், உன்சாபம் நீங்கும்' என்று வரமருளினர். அவ்வாறே யான் பேரரவமாக இவ்வனத்தே திரிந்துகிடந்தேன். உன் தம்பியை விழுங்கினேன். பின்னர் நீ வந்து தோன்றினாய், இதுவே என் வரலாறாகும்."

இம்மொழிகள் அனைத்தையும் செவியிலேற்ற தர்மன் உடனே தன் மூதாதையின் பாதகமலங்களில் தம்பியருடன் வீழ்ந்து வணங்கினான்.

பின்பு, நகுஷன் அம்மைந்தர்களை நோக்கி, "என் குழந்தைகளே! விதிவசத்தால் நீங்கள் நாடுநகரமிழந்து கானகமடைந்தீர். இனி, உங்களுக்கு நற்காலம் கிட்டிவிட்டதென்பது நிச்சயம். பந்தமுள்ள மானிடர் விதி வழியினின்று தப்பமுடியாதாதலின், நீங்கள் கானக

மடைந்து வருந்தநேரிட்டது. ஆயினும், சீக்கிரமே நீங்கள் ஐவரும் நாடு பெற்றுக் களித்திருப்பீர்.

"உங்களை அரும்பாடு படுத்திய துரியோதனாதியர் நூற்றுவரும் போரில் மடிந்து போவரென்பது திண்ணம். ஏனெனில், கற்புக்கரசியாம் பாஞ்சாலியை அரச சபையில் மானபங்கப்படுத்திய பாவம் அதன் பலனைக் கொடாது போமோ? நீங்கள் ஐவரும் செய்திருக்கும் சபதத்தின் வண்ணம், அவர்கள் உங்கள் கையினாலேயே விண்ணுலகேகுவர். உங்கள் கஷ்டம் முடிந்துபோம். மனக்கவலை வேண்டாம்" என்று தேற்றி ஆசீர்வதித்தான்.

பின்னர் வீமனை விளித்து "அப்பா! வீமனே! உன்னை இறுகக் கட்டிப் பிடித்ததனால் உன் உடல் வருந்தியிருக்கும். அதற்காக நீ வருந்தவேண்டாம். அதற்கு ஈடாக ஒரு வரங் கொடுக்கின்றேன், இதுவரையில் எனக்கிருந்த பலம் முழுவதையும் நீ பெற்றுப் போரில் வெற்றி பெறுவாயாக" என்றருளினான் நகுஷன்.

உடனே தர்மர் நகுஷனைநோக்கி, "எந்தையே! தாங்கள் ஆசீர்வதித்ததை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கின்றோம். எனினும், எங்களது தம்பியாகிய துரியோதனன் முதலியோர் போரில் இறந்து போவரெனக் கேட்க, என் மனம் மிகவும்சலிக்கின்றது ஆயினும்என் செய்யலாம்? அவர்களோ நன்னெறி தவறிவிட்டனர். நாங்கள் அனைவரும் துரியோதனாதியருடன் ஒரு மனமாய் இன்பமுடன் வாழ்ந்துவரும் அதிர்ஷ்டம் பெறாதது என் மனத்தைப் புண்படுத்துகின்றது" எனவும், நகுஷன் தர்மனைப் பலவாறு தேற்றினான்.

முடிவில் அவ்விருவரும் வெகுநேரம் வரையில் தர்ம சாஸ்திர விசாரணை செய்தபின்னர், தனது மைந்தர்களை நகுஷன் வாழ்த்தியதும் தேவலோகஞ் சென்றான். தம்பியருடன் தர்மனும் தனது இருப்பிடம் ஏகினான்.

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை

இந்தியாவும் சுய ஆட்சியும்

தேசராஜீய சரித்திர நூல்

"இந்தியாவும் சுய ஆட்சியும்" என்ற புத்தகம் சுமார் 360 பக்கங்கள் கொண்டது. இப்புத்தகத்திற்கு, திரு மயிலை முனீந்திரராகிய டாக்டர் சுப்பிரமணிய ஐயர் ஓர் அரிய முகவுரை எழுதியிருக்கின்றனர். இந்தியா பண்டைக்காலத்து அடைந்திருந்த பெருமையும், ஆங்கிலேயர் இந்தியாவுக்கு வியாபார விஷயமாக எங்ஙனம் வந்தனரென்பதும், அன்னார்கைத்தொழில் சம்மந்தமாக அநுசரித்துவந்த முறையினால் இந்தியாபடுந்துன்பமும், இந்தியாவைப்பற்றிப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அவ்வப்பொழுது கொடுத்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படாமையும், சுய ஆட்சிக்கிளர்ச்சி இந்தியாவில் தோன்றிய விதமும், 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 20-ந் தேதி மிஸ்டர் மாண்டேகு பார்லிமெண்டில் வெளிப்படுத்திய அறிக்கையைப்பற்றியும், 1918ம் வருஷ இறுதியில் நடந்த டில்லிக் காங்கிரஸ் நடவடிக்கைகளும், பிறவும் விளக்கமாக இந்நூலில் கூறப்பட்டிருக்கின்றன். ஆங்கில மறியாத் தமிழர் ஒவ்வொருவரும், இல்வரியநூலை வாசிக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்துகிறோம். இந்திய அரசியல் விஷயங்கள் யாவும் இந்த ஒருநூலில் அழகாகத் தொகுத்துக் காட்டியிருப்பது பெரிதும் பாராட்டத்தக்கது. இந்நூலை வெளிப்படுத்தியவருக்குத் தமிழுலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றதென்று நாம கூறுவது மிகையாகாது. இந்நூல் உயர்ந்தகடிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டிருக்கின்றது. இதன் விலை ரூபாய் 1-8-0."—தேச பக்தன் மதிப்புரை.

ஆத்திசூடி நீதிக்கதைகள்

ஸ்ரீ கலைமகள் அவதாரமாகிய ஔவையார் அருளிச் செய்த ஆத்திசூடி நீதிவாக்கியங்களுக்கு உதாரணமாக இதிகாச, புராண, சரித்திரக்களிலிருந்து எடுக்கப் பெற்ற 108 கதைகள் இனிய செந்தமிழ் நடையில் நீதிகளை விளக்கி எழுதப்பெற்றுள்ளன. சில படங்களும் அமையப்பெற்றது.

விலை அணு 8.

பரதன் உத்தம சகோதரன்

பலகோடி நீதிகளைப் புகட்டும் ஸ்ரீ ராமாயணக் கதைகளைச் சுருக்கமாகவும், அவற்றுள் பரதனது குணாதிசயங்களை விரித்தும், கம்பராமாயணத்தினின்று சில முக்கிய மேற்கோட்பாக்களுடன் தெள்ளிய நடையில் யாவருக்கும் எளிதில் புலப்படும்படி இனிமையாக எழுதியுள்ளது. . . . .

"இப்புத்தகத்தில் பரதனது பக்தி, பெருந்தன்மை, மனவுறுதி, ஸத்தியம் முதலிய சற்குணங்கள் தெள்ளிய நடையில் எழுதப்பட்டுள்ளன. சந்தர்ப்பத்திற்கேற்ப இடையிடையே கம்பராமாயணத்தினின்று சிலபாட்டுக்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சிறுவரும் சிறுமிகளும் கூடப் படித்துப் பொருள் தெரிந்துகொள்ளும்படி அவ்வளவு இனிய எளிய நடையில் இயற்றப்பட்டிருக்கிறது."—பெண்கல்வி மதிப்புரை.

விலை அணு 8.

கணேஷ் கம்பெனி, 39, தம்பு செட்டி தெரு, சென்னை

கணேஷ் கம்பெனி, 39, தம்பு செட்டி தெரு, சென்னை